15. 10-74

சிவமயம்

# குமரகுருபரன்

S. Balasubramaniam



த. 3126

மலர் 35] புரட்டாசி-ஐப்பசி மீ 1-ம்௳ (18-10-74) [இதழ்கள் 9-10

தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ 5-00

# ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை—86

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை—2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

## உள்ளுறை

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருவுந்தியார்-உரைவிளக்கம் | ... | 433 |
| 2. | அருள்மொழி அமுது | ... | 436 |
| 3. | அனைத்தும் ஆறுமுகனே | ... | 439 |
| 4. | பிள்ளையார் | ... | 440 |
| 5. | அலங்காரநாயகன் | ... | 443 |
| 6. | நரியனூர் பட்டபாடு | ... | 448 |
| 7. | கந்தன் தந்த அகவாழ்வு | ... | 451 |
| 8. | இல்லறத்தின் பெருமை | ... | 454 |
| 9. | திருமுருகன் 108 | ... | 461 |
| 10. | பட்டினத்து அடிகளின் அருந்தொண்டு | ... | 465 |
| 11. | திருஞானசம்பந்தர் கண்ட திருடன் | ... | 470 |
| 12. | திருமுறைகண்ட சோழன் | ... | 474 |
| 13. | இரண்டு காட்சிகள் | ... | 480 |
| 14. | சொர்க்கங்கள் பொருளலவே | ... | 483 |
| 15. | ஆன்றோர் காட்டும் அறநெறி | ... | 487 |
| 16. | அறுமுகனின் அருள்மிகு தலங்கள் அறுபத்தாறு | ... | 493 |
| 17. | வெற்றி வேலன் வெண்பா அந்தாதி | ... | 499 |
| 18. | கோணு அருளைப் பெற்றூர் | ... | 500 |
| 19. | நலந்தரும் நாமம் | ... | 505 |
| 20. | சிற்சபையுடையான் செல்வமெய்ப்பிள்ளை | ... | 508 |
| 21. | உலோபிகள் நடுவிரலுக்குச் சமம் | ... | 512 |
| 22. | திருக்கோயில்களும் திருஅமுதுகளும் | ... | 514 |
| 23. | ஞானத்திரளாய் நின்றபெருமான் | ... | 519 |
| 24. | Sri Kedareshwar Temple Karthikai 4th... | ... | 523 |
| 25. | மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை | | 61-64 |

T-UN-446

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

நம் அச்சகத்திலுள்ள எல்லா அச்செழுத்துக் களையும் களைந்துவிட்டு புது அச்செழுத்துக்கள் சென்னையிலிருந்து வரவழைத்ததின் காரணமாக நம் பத்திரிகையின் புரட்டாசி இதழ் உரியகாலத்தில் அச்சடித்து அனுப்பமுடியாது போயிற்று. புரட்டாசி ஐப்பசி இதழ்கள் இம்மாதம் இணைத்து அனுப்பப் பெற்றுள்ளன. தவிர்க்கமுடியாத காரணத்தால் ''குமரகுருபரன்'' புரட்டாசி இதழ் காலதாமதமாகி வருவதைச் சந்தா நேயர்கள் பொருட் படுத்தாதிருக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ காசிமடம் பன்னிருதிருமுறை பதிப்புநிதி வெளியீடு:

## வாசகர்களுக்கோர் அறிவிப்பு

# 9-ம் திருமுறை

## “திருவிசைப்பா திருப்பல்லாண்டு”

(புதிய பதிப்பு)

திருச்சிராப்பள்ளி திருமுறைக்கலைஞர் வித்துவான்
தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் எழுதிய
தெளிவுரையுடன் வெளியிடப் பெறுகின்றது.

ஆனந்த வருஷம் ஆவணிமூல வெளியீடு

360 பக்கங்கள் கொண்டது: வெள்ளைத்தாள்

**விலை ரூ. 3-25**

20 பிரதிகளுக்கு குறையாமல் வாங்குவோர்க்கு
20% கழிவு உண்டு.

(பாகிங் தபால் ரயில் கட்டணம் வேறு)

கிடைக்குமிடம்:-


K. சுப்பிரமணியன், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம், 628601 (திருநெல்வேலி ஜில்லா)

தியாகராஜ விலாசம், 53. பிள்ளையார் கோயில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை திருவல்லிக்கேணி
சென்னை-5

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை





மலர் 25 || ஆனந்த ௵ புரட்டாசி-ஐப்பசி இதழ் 1௳ [18-10-74] || இதழ் 9-10


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

# திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்

அருளிய

# திருவுந்தியார் — உரைவிளக்கம்


சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

பாலகவி

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை


---

இரவு பகலில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற. 20

இரவும், பகலும் என்று சொல்லப் பெறுகின்ற நினையாமையும், நினைப்புமாகிய இரண்டும் இல்லாத, பேரின்பப் பெருவெளியாகிய பரவெளியில் இரண்டறக் கலந்து, சிவத்தில் தன்னை விழுங்கக் கொடுத்து, மிகமிக விரைந்து, அதில் தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்று நிலை நிற்பாயாக.

உயிர்களுக்கு உணர்ந்த காலத்தில் மாயையும், ஒடுங்கின காலத்தில் ஆணவமும் கூடிநின்று, அறிவும் இன்பமும் பொருந்தாதபடி செய்யும். ஞானமும் ஆனந்தமுமாகிய அவையிரண்டும், விளங்கி நிற்பதாகிய பரவெளியில் கூடி, நிலைத்து நின்று அனுபவிக்க, அநுபவமுடைய ஞானதேசிகனது அநுக்கிரகம் வேண்டும். இரவாகிய நினையாமை கேவலமும், பகலாகிய நினைப்பு சகலமும் ஆகும். இந்த நினையாமை நினைப்புக்கள், ஒன்றனையும் அறியாமையும், உலகத்தை அறிதலும் ஆம். கேவலத்தில் ஆணவமும், சகலத்தில் மாயை கன்மங்களும் உயிரைப்பற்றிய பற்றிலிருந்து நீங்கி முதல்வனை அறியும் முறையைத் தன்னறிவின் கண்ணே கேட்கும் முறையில் கேட்டுச், சிந்திக்கும் முறையில் சிந்தித்துச், சிந்திக்கப்பட்ட பொருளினிடத்து அன்பு வை து, அந்தக் கரணங்களிற் சேராது அடங்கி நிற்றல் வேண்டும். அவ்வாறு நின்றால் தம்முடன் பிரிதலில்லாத முதல்வனது இயல்பு, கேட்ட பொழுது பொருள் தன்மைபற்றி வேறாய்த் தோன்றிச், சிந்தித்தபொழுது எல்லாவற்றிலும் கலப்புப்பற்றி ஒன்றாய்த் தோன்றிய அவ்விரு தன்மையுமின்றித், தெளிந்த இப்பொழுது உடனாய் நிற்றல் விளங்கித் தோன்றும். அந்தக் கரணங்களுடன் கூடிநின்று உலகத்தை அறிவதாகிய பகலும், அவற்றில் நீங்கியிருந்து அறியாமையாகிய இரவும் இல்லாமை, பரவெளியைக் கூடிய ஞானிகளுக்கு அமைவது, இதை "எனைநானெனென்ப தறியேன் பகல் இரவாவதும் அறியேன்" என்று மணிவாசகம் அறிவித்தருளும். "கங்குல் பகலற்ற வெள்ள வெளிக்கடல் மூழ்கி" என்பது தாயுமான அடிகள் திருவாக்கு.

"இன்ப வெளி" என்பது, மண் முதல் நாதமீறாகச் சொல்லப் பெறுகின்ற முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த ஞானாகாசம். இதுவே பரவெளி, பெருவெளி, தூவெளி, சிதாகாசம், சிதம்பரம், சிற்றம்பலம் சிற்பரவியோமம், பரமவியோமம் முதலிய பெயர்களால் குறிக்கப் பெறுவது. இந்த

ஞானவெளியில் தான், தத்துவாதீதராகிய மகாருத்திர தாண்டவேசுவரர் திருநடம் புரிகின்ருர். சிதம்பரத் திருத்தலத்திலுள்ள திருச்சிற்றம்பலம், இந்த ஞான வெளியேயாகும் இதனைச் சேக்கிழார் சுவாமிகள், திருஞானசம்பந்தமூர்த்திகள் புராணத்தில் "அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே யான அம்பலம்" என்று அருளுவதால் அறிந்து கொள்ளலாம். நிலையில்லாத உடல் முதலியவற்றை நிலையற்றவை யென்று கண்ட பிறகு, திருவருளே தாரகமென உணர்ந்து அதில் அழுந்தி நிற்றலே அறிவுடைமையாகும். அங்ஙனம் நிற்பதற்குத் திருவருளாற் கிடைக்கும் குருவருள் ஒன்றே துணை செய்யும். "அப்பர் பெருமான், நில்லாத உலகியல்பு கண்டு, நிலையா வாழ்க்கை அல்லேனென்று அறத்துறந்தும், நம்பர் அருளாமையினுல் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகினுர்" என்ற சேக்கிழார் பெருமானது அருட் குறிப்பு இங்கே சிந்திக்தற்குரியது. திருவருளால் கிடைத்த குருவருளே, அந்தத் திருவருளைத் தாரகமென உணர்த்தும். அவ்வாறு உணர்த்திய பிறகும் அதில் அழுந்தி நிற்றற்கும் அதுவே துணையாயிருக்கும். "அவனருளாலே அவன்றுள் வணங்கி" என்ற திருவாசகம் இக்குறிப்பில் எழுந்ததே. திருவருளொன்றே ஞானநிட்டையில் நிலை நிறுத்துவது. ஞான நிட்டை கூடியவர்களுக்கு, எல்லாப் பொருள்களும் தானே யானதன்மை தோன்றுமேயன்றி, வேறென்றும் தலையெடுத்து நில்லாது. உயிரும் அதன் அறிவும் சிவமுமாகிய மூன்றும் அதுகாலை அற்றுப் போகும். அதுவே சும்மாயிருக்கும் சுகநிலை. அடைதற்கரிய இந்த அரிய நிலையைத் தாயுமான அடிகள் "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது" என்று உணர்த்துகிருர்கள் இரவு பகலில்லாததும், ஞானமும் ஆனந்தமும் பிரகாசிப்பதுமாகிய சுட்டிறந்த அந்த இன்ப வெளியில் உயரறிவு ஒருங்குறக் கரைந்து போக, மதுவுண்ட வண்டைப் போலச் சிவாநுபவமே சுவாநுபவமாக விளங்கும். "யானுகிய என்னை விழுங்கி வெறும் தானுய்நிலை நின்றது தற்பரமே' என்பது கந்தரனுபூதி. பெத்த நிலையில் உயிர் ஆணவ மலத்தால் விழுங்கப்பட்டிருப்பது போல முத்தி நிலையில் சிவத்தால் விழுங்கப்பட்டிருக்கும். தென்முகக் கடவுள் சின் முத்திரை மூலமாகக் காட்டியருளும் இவ்வரிய உண்மை, உண்மை ஞானியர்களுக்கே புலப்படுவதாகும்.

---

(தொடரும்)

# அருள் மொழி அமுது

**திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,**

*3119, கீழ இரண்டாம் வீதி.*

**புதுக்கோட்டை–1, திருச்சி மாவட்டம்.**

## 15. அடியாருடன் நாம் உள்ளோம்

பூரண ஞானம் பொலிந்த நன்னுடாகிய பாரததேசத்திலே கேரளம் ஒரு சிறந்த பகுதி. பரசுராம க்ஷேத்திரம் என அழைக்கப்பெறும் புனிதபூமி. கடல் வாரிச் சொரியும் முத்தும், கரும்பிலிருந்தும் மூங்கில்யானை இவைகள் தரும் முத்துக்களையும் உடையநாடு. எனினும் அந்நாட்டுப் பெண்மக்கள் **''முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினு**ம் **வெல்லும் வெண்ணகையுடையவர்''** ஆதலின் முத்துக்களும் தோற்றன. அந்நாட்டில் உள்ள அழகிய ஊர்களில் செங்குன்றூர் என்று ஒன்று. தற்காலம் செங்கண்ணூர் என்ற பெயரால் விளங்குகின்றது. வயல்வளம் உடைய அவ்வூரில் சீலமுள்ள வேதமோதும் அந்தணர் வாழ்ந்து வந்தனர். மலையாள தேசம் என்றுமே வேதத்தை ஆதரிக்கும் சிறப்புடையது. ஸ்ரீஜகத்குரு ஆதிசங்கராசாரியார் அவதரித்த புண்யபூமி. இன்றும் வேதியர்களை அங்கு உயர்வாக நம்பும் உரிமையுள்ளவர்கள் என்றபடி நம்பூதிரிகள் என அழைப்பார்.

இப்படிப்பட்ட புனித பூமியில் வேளாளர் குலத்திற்குப் பெருமைதர அவதரித்தவர் விறன்மிண்டர் என்பவர். இவர் இளையான்குடிமாற நாயனர், மெய்ப்பொருள் நாயனர் போன்று இல்லாது, சிவத்தவ வேடத்துடன் அல்லாது உண்மை பக்தியும் ஒழுக்கமும் உடைய அடியார்களையே வணங்கி அன்பு காட்டுவார். அவரது தொண்டு வீரம்(விறல்) மிகுந்ததாகவும் உறுதி (மிண்டு)யுள்ளதாகவும் இருந்ததாலும் விறன் மிண்டர் என அழைத்தனர்.

**அப்போற்பதியின் இடைவேளாண் குலத்தைவிளக்க அவதரித்தார்**
**செப்பற்கரிய பெருஞ்சீர்த்தி சிவனூர்செய்ய கழல்பற்றி**

**எப்பற்றினையும் அறஎறிவார் எல்லைதெரிய ஒண்ணாதார்**
**மெய்ப்பத்தர்கள் பாற்பரிவுடையார் எம்பிரானார் விறன் மிண்டார்.**

அடியார்களை வழிபட்டு பிறகு அனேக சிவத்தலங்களைத் தரிசித்தார். சிவத்தலங்களை தரிசித்ததற்குக் காரணம் ஒவ்வொரு தலத்திலும் அந்தந்த மூர்த்தங்களுக்கு ஒவ்வொரு விதமான பலன் தரும். எல்லாப் பலன்களையும் அடைய எல்லாத் தலங்களுக்கும் சென்றார் என்பர் சிலர். செல்வத்தைக் கொடுக்கும் தலம் இது, தேகநலம் கொடுக்கும் மூர்த்தியிது, மக்கட்பேறு தரும் தலம் இது என்று தேடிச்செல்லும் நம்மவர்களோடு நாயன்மார்களையும் சேர்த்து "**கைத்திருத் தொண்டு செய் கடப்பாடினார்**" "**கும்பிடலேயன்றி வீடும வேண்டா விறலினார்**" என்ற அவர்களது உயரிய நிலையை மறந்து அவர்களும் ஏதோ ஒன்றை விரும்பித்தான் தலயாத்திரை செய்தார்கள் எனக்கூறுவர். அது பொருந்தாது, இறைவர் மீதுள்ள ஆராக் காதலினால் எல்லா மூர்த்திகளையும் தரிசித்தார் எனக்கொள்ள வேண்டும். காமியாக அன்று.

மலைநாட்டிலிருந்து புறப்பட்ட விறன்மிண்டர் திருவாரூர் வந்து தங்கினார். திருவாரூரிலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களைக் கண்ட சுந்தரமூர்த்திநாயனார் "இவர்களுக்கு என்னை அடிமையாக்கிக் கொள்ளுவது எந்நாள்?" என இறைவனை வேண்டி **நேராகக்** கோயிலினுட் சென்றார். **தொண்டர் திருக்கூட்டமுன் பரவும் அருள்பெற்றே இறைவர் பாதம் தொழப் பெறும்** வழக்கமுடைய நாயனார், திருக்கூட்டத்தை வணங்காது நேரே கோயிலுக்குள் நுழையும் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கண்டு வெகுண்டு" வன்றொண்டன் புறகு (புறம்பானவன்)" என்று கூறி ,"அடியாரை வணங்காது சென்ற வன்றொண்டர் மாத்திரமல்ல. அவருக்கு அருள் செய்த இறைவனும் புறகு (புறம்பானவர்)" என்றார். இறைவனைப் புறகு எனக்கூறலாமா எனக் கேட்கத் தோன்றுகின்றது அல்லவா?

நம்பிக்கையுள்ள ஒரு நண்பனைப் பற்றி நாம் பேசும் போது "என் நண்பன் அப்படியா நடந்து கொண்டான். அப்படியானால் அவன் என் நண்பனே அல்ல" என்கிறோம். இது மெய்யாகவே அந்த நண்பரை விட்டு விட்டதாக ஆகாது.

என் நண்பன் தவறான காரியம் செய்யவே மாட்டான் என்பது உறுதியாகக் காட்டப் பெறுவதற்காகவே அவ்வாறு கூறுகிறோம்.

அதுபோல ''சிவனடியாரை மதிக்காதவரை இறைவன் மதிக்கமாட்டார்'' என்பதை உறுதிப்படுத்துவதற்கே ''இறைவன் புறகு'' என்றார் நாயனார். இதுகேட்ட இறைவன் ''அடியாருடன் நாம் உள்ளோம் (புறகன்று'' எனக்கூறினர் என்றால் அடியாரது பெருமையை எவ்வாறு கூறுவது? அடியார்களிடம் இறைவன் எப்போதுமிருப்பான் என்பது எவ்வாறு? அவன் எங்குமேயிருப்பான்தானே என்றால் அடியார்களுடன் உடனாய் நின்று, அவருரையே தனதுரையாக உரைப்பன். இறைவன் அடியவரான திருவாரூரருடன் இருந்ததால் தான் **'தில்லைவாழந் தணர்தம் அடியார்க்கும் அடியேன்** என அடியெடுத்துக் கொடுத்தார். அதுமட்டுமன்று. திருத்தொண்டத் தொகையில் முதன் முதலாகக் குறிப்பிடப்பெறும் தில்லை மூவாயிரவரில் இறைவனும் ஒருவர் என்பதும் வழக்கு. எனவே இறைவன் அடியாருடன் எப்போதும் உளர் என்பது பெற்றாம்.

**ஞாலம்உய்ய நாம்உய்ய நம்பிசைவ நன்னெறியின்**
**சீலம்உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்**
**ஓலம்இடவும் உணர்வரியார் ''அடியார் உடனும் உள'' என்றால்**
**ஆலம்அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார்?**
**ஒருகணம் இருப்பன் தெய்வ உருவினில் ஈசன்றன்மற்**
**றிருகணம் செய்கோல் ஓச்சும் இறையவர் பாலிருப்பான்**
**அருமறை யவர்குழாத் துளம்புவீ முளவிருப்பன்**
**துரியயோ கியருளத்திற் றாங்குவனிருந் தெப்போதும்'**

*—பதிபசுபாச விளக்கம்—சரியை கிரியையோக இலக்கணம்—4*

எனவே இறைவன் எப்போதும் அடியார்களிடத்தில் வாழ்வார் என்பதை சுந்தரமூர்த்தி நாயனாரைப் புறகு எனக் கூறியதன் மூலம விறன்மிண்டநாயனார் காட்டியதும், அதை இறைவனே ஒப்புக்கொண்டார் என்றால் சிவனடியார் பெருமையை எவ்வாறு கூறுவது? இவ்வாறு சைவநெறி காத்த விறன்மிண்ட நாயனார் தமக்கு ஏற்ற முறையில் கணநாயகராகும் நிலைபெற்று இறைவன் திருவடிக்கீழ் விளங்கினார்.

**''விரிபொழில் சூழ்குன்றையார் விறன்மிண்டர்க்கும் அடியேன்''**
**விறன்மிண்ட நாயனார் திருவடிகளே சரணம்**

சிவ சிவ]

# அனைத்தும் ஆறுமுகனே!

காஞ்சி சாந்தன்
டாக்டர். திரு: பி செல்வராஜ் அவர்கள்;
காஞ்சிபுரம் [631501]

[எடுப்பு]

நாளை என்றோர் பொழுதும் உண்டா?
காலைமாலை புலர்வது முண்டா?

[தொடுப்பு]

வேலைஏந்தியவன் சிரித்திடும் போது!
வேதனை தீர்க்க வந்திடும் போது! (நாளை என்றோர்)

[முடிப்பு]

பட்டினி என்றோர் சொல்லுமுண்டா?
பசியிற் துயரும் வருவதுமுண்டா?
பட்டதுபோதும் என்றிடும் போது!
பழனியின் துணைநின்றிடும் போது! (நாளை என்றோர்)
தூண் துரும் பனைத்திலும்
தூயவன் மாயவன் துணையாயிருக்க;
ஊன்உயிர் அனைத்திலும்,
உண்ணிறைக் கந்தன் கொலுவாயிருக்க; (நாளை என்றோர்)

பாட்டிலும் கூத்திலும், பழந்தமிழ் ஏட்டிலும்,
பழனி ஆண்டவன் வியாபித்திருக்க;
வீட்டிலும் நாட்டிலும் வீணைநரம்பாய்
வீரன் நமது குமரன் சிரிக்க; (நாளை என்றோர்)

அறிவதும் தெரிவதும்; அழுவதும் சிரிப்பதும்
நகர்வதும் நடப்பதும்; நல்ல செயல்களும்
மரித்தவன் உயிர்ப்பதும்; உயிர்த்தவன் மரிப்பதும்
மன்மதன் முருகன் மாயவனுக......... (நாளை என்றோர்)

[சிவ சிவ

# பிள்ளையார்

திரு: மா. மாரிகோவிந்தன் அவர்கள்,
ப. யூ. உயர்துவக்கப்பள்ளி, தமிழ் ஆசிரியர்
புதுக்கூரைப்பேட்டை.

உலகில் பல சமயங்கள் தோன்றினும் அவற்றுள் முதன்மையும் மேன்மையும் பெற்றது ஆறேயாகும். சிவத்தை வழிபடுவது சைவம் எனவும், திருமாலை வழிபடுவது வைணவம் எனவும், முருகனை வழிபடுவது கௌமாரம் என்வும், சக்தியை வழிபடுவது சாக்தம் எனவும், சூரியனை வழிபடுவது சௌரம் எனவும், கணபதியை வழிபடுவது காணுபத்யம் எனவும் வழங்கப் படுகிறது. அவற்றுள் கணபதியை வழிபடும் காணுபத்யம் எனவும் வழங்கப்படுகிறது. அவற்றுள் கணபதியை வழிபடும் காணுபத்ய சுருங்கிய கருத்தினை இதில் கண்டு தெளிவோம்.

வருகிற ஆடித் திங்கள் சுவாதி நாளில் நாடெங்கிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூஜை நிகழ இருப்பதால் அன்றைய நாளில் ஒவ்வொரு ஆண்டும் விருத்தாசலம் ஆழத்துப் பிள்ளையாரின் படிவிழா நடந்தேறி வருகிறபடியால் இக்கட்டுரை, பிள்ளையாரைப் பற்றியதாக எழுதப் பெறுகிறது.

**திருவுங்கல்வியுஞ் சீருந்தழைக்கவும் கருணைபூக்கவும்தீமையைக் காய்க்கவும்**
**பருவமாய் நமதுள்ளம்பழுக்கவும் பெருகும் ஆழத்துப்பிள்ளையைப் பேணுவாம்.**

*-விருத்தாசலபுராணம்*

மூவரும், தேவரும், யாவரும்போற்றும் தனிப்பெருந் தெய்வம் விநாயகப் பெருமான். ஓங்கார ரூபியாயிருந்து வணங்கும் அடியார்களின் வல்வினையைத் தீர்க்கும் வள்ளல் அம்மையப்பனுக்கு பிள்ளையானதினாலே பிள்ளையார் எனவும். கணங்களுக்கெல்லாம் தலைவரானதால் கணபதி, கணநாதர், கணேசர் எனவும், தனக்குமேல் சிறந்த தலைவர் இல்லையாதலால் விநாயகர் எனவும் பெயர் பெறுவர்.

**தோற்றம்:-** திருக்கைலை மலையில் ஏழுகோடி மந்திரங்கள் அடங்கிய சித்திரசாலைக்கு பரமனும் பார்வதியும் எழுந்தருளி ஆங்குள்ள வியஷ்டி, சமஷ்டி என்ற இருபிரணவ மந்திரங்களை திருக்கண்சாத்த அவ்விரு பிரணவங்களும் ஒன்றையொன்று மருவவே பிரணவாகார யானை முகத்துடன் பிள்ளையார் அவதரித்தார்.

பிள்ளையார் தாய் தந்தையாரைப் பணிந்து தனக்கேற்ற செயலினைத் தந்தருள வேண்டினர். அம்மையப்பனிருவரும் குழந்தைக்கு அருளமுத மூட்டி ஆசிகூறி உன்னை உள்ளன்போடு தொழுவார்க்கு வரும் துன்பங்களை நீக்கி இன்பம் புரிக. எனக்கூறி பூதகணங்களுக்கெல்லாம் தலைவராக்கிச் சென்றனர்.

**வாகனம்:-** மாகத முனிவருக்கும் விபூதி பெற்ற ஒரு அசுரமாதுக்கும் பிறந்த கஜமுகன், தவம் செய்து சிவத்தைக் கண்டு எண்ணற்ற வரங்களைப் பெற்று தேவர்களை இடர், படுத்தி வந்தான். அல்லலுற்றயர்ந்த மாலயனுதி வானவர்கள் கைலைநாதனைக் கண்டு தொழுது கண்ணீர் மல்கி முறையிட்டனர். அம்மையைப்பன் தேவர்களிடர் அகலவும் அசுரனை மாய்க்கவும் ஆனைமுக பெருமானை அனுப்பினர். பிள்ளையார் பூதகணங்கள் புடைசூழ போர்பறை முழங்க அசுரனை எதிர்த்து அவனது சேனைகளையழித்து அவனேடு அயராது போர் செய்தும் அசுரன் மாயாது. கண்டு வானிலெழுந்த அசரீரிபடி தனது வலது கொம்பை முறித்து ஏவினர்.

ஏவியக் கொம்பினல் இரண்டாகப் பிளக்கப்பட்ட அசுரன் மீண்டும் பெருச்சாளி உருவில் வந்து தாக்கவே பிள்ளையார் அவன் மீது கருணைசுடர் முகம்காட்டி அவனது ஆணவத்தை வாட்டி வாகனமாக ஏற்றருளினர். தேவர்களிடம் நீங்கிஇன்ப முற்றனர். கஜனமுகனுக்கிட்ட ஆயிரம் தோப்புக்கரணங்களை ஐங்கரனுக்கு அன்புடன் மூன்று முறையிட்டு வழிபாடியற்றினர்.

**காவிரிப் பெருக்கு:-** அகத்திய முனிவர் சிவபெருமானிடம் உள்ள காவிரியைக் கமண்டலத்தில் பெற்று தென்

திசை நோக்கி வருவாராய் குடகு மலையில் சிவபூசையில் அமர்ந்தார். அவ்வமையம் இந்திரன் சீர்காழியில் சிவபூசைக் குரிய நந்தவனங்கள் வாடிவதங்குவதைக் கண்டு வருந்தி பிள்ளையாரை வழிபட பிள்ளையார் காக்கை வடிவில் சென்று கமண்டல நீரைக் கவிழ்த்து காவிரித்தாயை குடகு மலையில் தவழச் செய்தார். அதுகண்ட முனிவர் சினந்து காக்கையைத் துரத்த காக்கை அந்தணச் சிறுவனாக மாறியதும் அகத்தியர் தன் இருகரங்களால் குட்ட வேண்டி ஓடவே வேழமுகத்துப் பிள்ளையாராய் காட்சிதந்தார். தன் தவற்றையுணர்ந்த முனி வர் தானே சிரசில் பலமுறை குட்டி வழிபட்டார்.

**இராவணனுக்கு இன்னுரை:-** இராவணன் சிவபெருமானிடம் சிவலிங்கத்தை நிபந்தனையோடு பெற்று செல்கையில் தேவர்கள் வேண்டுதலினால் அவனுக்கு விநாயகர் சிறுநீர் பெருகச் செய்து வேதியச் சிறுவனாய்ச் சென்று சிவலிங்கத்தை ஏந்தி விரைவில் வராத காரணத்தினால் நிலத்திலிடவே அதனை தசக்ரீபன் பெயர்த்து இழுக்க சிவலிங்கம் பசுவின் காதுபோல் நீண்டதால் அவ்விடம் கோகர்ணம் ஆயிற்று. பின் இருவரும் போரிட துயர்தாளாத இராவணன் தன்இருபது கரங்களாலும் பத்துச் சிரசிலும் குட்டிக் கொண்டு வழிபட இசையில் வல்ல வனாதலால் அவனது கரங்களிலிருந்து சதுஸ்ரம், திஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீரணம் என்ற ஐந்து நடைகளுடன் தானமிழுவது போலிருந்ததாம். விநாயகர் அவனுக்கு அறிவையும் அருளுவுரையும் கூறினார்.

சிவபெருமான் முப்புரதகனத்தின் போது பிள்ளையாரை நினையாது சென்றதால் அவர் தேர் அச்சொடிந்ததும், நம்பியாண்டான் நம்பி மூலம் திருமுறைகளைத் தொகுப்பித்ததும், முருகப்பெருமானுக்குப் பல இடையூற்றை விளைத்து முடிவில் யானை வடிவில் சென்று வள்ளியை மணப்பித்ததும், வியாச பகவான் பாரதத்தைப் பாட தன் கொம்பையே எழுத்தாணியாய் கொண்டு எழுதியருளியதும், திருவெண்காடர் வேண்டுதல்படி சேந்தனாரைச் சிறையினின்றும், மீட்பித்ததும், ஔவையாரைத் தன் தும்பிக்கையில் நம்பிக்கையோடு எடுத்து

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அலங்கார நாயகன்

திருமதி பார்வதி அம்மாள்,
தமிழாசிரியை. நாமக்கல்.

## 4 அயில்வேலன் கவி

மகா ஞானிகள் தம்மைச் சார்ந்தவர்கள் இன்பம் அடைய வேண்டும் என்று பலவகைகளில் உபதேசம் செய்வார்கள். தம்முடைய சீடர்களுக்கு மந்திரங்கள் உபதேசம் செய்வதன் மூலம் அருள்பாலிக்கலாம். கண்களினுல் அவர்களைப் பார்த்த அளவிலேயே அவர்களுக்கு ஞானம் உண்டாகும்படி செய்ய லாம். அவர்களைத் தொட்டு அருள் ஊட்டலாம். இவை யாவும் அவர்கள் காலத்தில் வாழ்ந்த மக்களுக்குத்தான் பயன் படும். தம் காலத்தில் வாழாத மக்களுக்கும் பயன்படும் வகை யில் அருணகிரி நாதரும் அவரைப் போன்றவர்களும் பாமாலை களைத் தொடுத்து வைத்துள்ளனர் அவற்றின் வாயிலாக நாம் பெறும் உபதேசங்களும் நுட்பங்களும் பலவாகும்.

உபதேசம் பெறுவதற்கு இன்னுர் அதிகாரி என்ற வரை யறை உண்டு. அருணகிரிநாதர் பாமாலைகளைக் கற்றுக்கொள்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரர் சேரமான் பெருமானுக்கு முன் கைலை சேர்த்ததும், பிள்ளையாரைப் பற்றிய பிறகதைக் குறிப்புகள். அன்பர்கள் படித்தின்புற்று ஆழத்துப் பிள்ளையாரின் அருளைப் பெற வேண்டுகின்றேன்.

**முடிவுரை:-** ஆழத்துப் பிள்ளையார் ஒரு கொம்பு, இரண்டு செவி, மூன்று கண்கள், நான்கு புஜங்கள், ஐந்து கரங்கள், ஆறு எழுத்துக்களையும் கொண்டு ஆனைமுகத்தோடு அமர்ந்திருக்கிருர். அவரை உள்ளன்போடு காதலாகிக் கசிந்து வழிபட்டோர் ஏழு பிறவியும் நீங்கி எட்டுத் திசையும் புகழ் பரவ ஒன்பது மணிகளுடன் சிறப்படையவர்.

பவர் எப்படி இருக்க வேண்டும் என்று தெளிவு படுத்துகிறார். நீங்கள் இந்த முறையில் பாமாலைகளைக் கற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்களே? என்று சொல்லி அந்தத் தகுதி இன்னதென்று புலப்படுத்துகிறார். பாமாலையைப் பெறுபவன் முருகன் அவன் நல்ல நூலறிபுலவன். தமிழுக்குத் தெய்வம் என்று போற்றப் பெறுபவன். அகத்திய முனிவருக்குத் தமிழ் இலக்கணத்தைச் சொன்ன பெருமான். சிவபெருமான் அகத்தியருக்கு தமிழ் கற்றுக்கொடுக்க, அவர் பிள்ளையாகிய முருகன் அந்த மொழியின் இலக்கணத்தை அவருக்கு அருளினான்.

**''குறுமுனிக்கும் தமிழுரைக்கும குமர**
**முததம தருகவே''**

என்றும்,

**''சிவனை நிகர் பொதியவரை முனிவன் அகமகிழ**
**இருசெவிகளிலும் இனிய தமிழ்பகர் வோனே''**

என்றும் பெரியவர்கள் பாடியுள்ளனர்.

முருகப் பெருமானிடம் இலக்கணத்தைக்கற்றுக்கொண்டு பெரிய புலவரான அகத்தியர் அழகிய இலக்கணம் ஒன்றைத் தமிழில் வடித்துத் தந்தார். அதற்கு அகத்தியம் என்று பெயர் அவ்வாறு அகத்தியருக்கு தமிழ் இலக்கணத்தைக் கற்றுக் கொடுத்த முருகப் பெருமானைப் பற்றிய தமிழ்ப் பாட்டைப் பாடும்போது இலக்கணப் பிழை இல்லாமல் பாட வேண்டும். முருகனைப் பற்றிய தமிழ்ப் பாட்டை எழுத்துப் பிழை இல்லாமல் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் அருணை முனிவர்.

**''அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியை அன்பால்**
**எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்''**

அருணகிரிநாதர் மிகவும் சதுரர், நம்முடைய நாக்குத் திருந்த இந்தப் பாட்டில் ழகர றகரங்களை மிகுதியாக வைத்துள்ளார். விதியாகச் சொல்லாமல் பிரயோகத்தில் வைத்துக் காட்டுவதை உடம்படு புணர்தல் என்று இலக்கணத்தில் சொல்வார்கள். அருணகிரிநாதர் காலத்தில் இந்த நாட்டில் கன்னடர்களுடைய ஆட்சி இருந்தது. கன்னடம் பேசும் அதிகாரிகள் அங்கங்கே இருந்தார்கள். **'கருநடப் பேர் வெள்**

**ளதது விழாமல்**'' என்ற வில்லி பாரதச் சிறப்புப் பாயிரம் சொல்வதிலிருந்து இது தெரிய வருகிறது. கன்னடக்காரர் களோடு சேர்ந்து எழுத்தைத் தவருக உபயோகிக்கின்ற மக் களைப் பார்த்து மனம் குமுறி அப்படிக் கூறியிருக்கலாம். காலனை வெல்ல வேண்டும் என்ருல் நன்ருக எழுத்துப் பிழை யறக் கற்க வேண்டும், எதைக் கற்பது? அயில் வேலன் கவி யைக் கற்க வேண்டும்.

**''அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன்''**

அழித்து என்ருல் மீட்டும் என்று பொருள், உலகத்தில் பிறந்த அத்தனைபேரும் உடம்பைப் பெற்றவர்கள், அந்த உடம்பினின்றும் உயிர் என்ருவது ஒருநாள் வெளிப்பட்டே ஆகவேண்டும். அதுதான் மரணம், அந்த உயிர் வேறு பிறவி எடுக்கிறது. ஆனுல் இறைவன் அருள் பெற்றவர்கள் மீட்டும் பிறக்க மாட்டார்கள். மீண்டும் இந்தப் பிறவியைப் பெருத படி செய்பவன் அயில்வேலன். அயில்வேல் என்பதற்குக் கூர் மையான வேல் என்று பொருள். முருகன் கையிலுள்ள வேலை ஞானசக்தி என்பர். ஆன்மாக்களைப் பற்றியுள்ள அஞ் ஞானத்தைப் போக்கும் ஞானசக்தியே வேல் கவியைக் கற் பது எப்படி? கல்வி அனுபவமாக மாறும்போதுதான் அது முற்றுப் பெறும் என்று சொல்வர் பெரியோர்.

பழங்காலத்தில் சனகர், சனந்தனர் சனத்ஜாதர் சனத் குமாரர் என்ற நான்கு ஞானிகள் இருந்தார்கள். அவர்கள் கல் லாதது கேளாதது ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் அவர் களுக்கு ஐயம் நீங்கினபாடில்லை. அனைவரையும் கேட்டனர், ஒன்றும் பலனில்லை. இறுதியில் இறைவனே அவர்களது ஐயத்தை நீக்கினுன் கல்லால மரத்தின் அடியில் உட்கார்ந்து அவர்களது ஐயத்தை இன் முத்திரையின் மூலம் விளக்கினுன். பேசாத பேச்சினுலே அம்முனிவர்களின் ஐயம் தீர்ந்தது. வாக் குக்கு உட்பட்ட எல்லாவற்றையும் கல்வி கேள்வியால் உணர்ந்திருந்த அவர்கள் வாக்கு இறந்த மோன உபதேசத் தால் தெளிவு பெற்ருர்கள்.

**' கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறை ஆறங்க முதற்**
**கற்ற கேள்வி**
**வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த பூரணமாய்**
**மறைக்கப் பாலாய்**

**எல்லாமாய் அல்லதுமாய இருந்ததனை இருந்தபடி**
**இருந்து காட்டி,**
**சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்**
**தொடக்கை வெல்வாம்''**

என்று பரஞ்சோதி முனிவர் தட்சிணா மூர்த்தியின் புகழைப் பாடுகிறார். இறைவன் கல்வியினால் அறிய முடியாதபொருள், அறிந்தேன் என்பவர்களால் அறியப் படாதபொருள், அறிய வில்லையே அறியவில்லையே என்று ஏங்கி அவனை அறிய வேண்டும் என்ற ஆர்வத்தோடு அலைந்துக் கொண்டிருக்கின்றவர் களது அறிவுக்குப் புலனாகின்ற பொருள். கற்றதனால் ஆய பயன் இறைவன் நற்றாள் தொழுவது ஆண்டவனது கவியை அன்பால் கற்றுக்கொள்ள வேண்டும். அனுபவ முதிர்ச்சி உண்டாகும்படி கற்றுக்கொள்ள வேண்டும். பிழையில்லாம லும் கற்றுக்கொள்ள வேண்டும். எத்தனையோ கவிகள் உண்டு. ஆனால் அன்போடு கற்றுக்கொள்ள வேண்டுமானால் அது ஆண்டவனைப் பற்றிய கவியாக இருக்க வேண்டும்.

உடலில் இருந்து வெளிவருகின்ற எல்லாவற்றையும் எச்சில் என்றும், மலம் என்றும் சொல்லி வெறுக்கும் மனிதர்கள் விரும்பிக் கேட்டு அனுபவிப்பது பேச்சு. இறைவனுடைய அருளினால் பெற்ற வாக்கை அவனது திருவருளை நினைந்து பாடுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே மிகச் சிறந்த பயன்.

**''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்தத சென்னியும் தந்த தலைவனை''**

என அப்பர் அருளியிருக்கிறார்.

ஆண்டவன் கவியை அன்பால் பிழையறக்கற்றுக் கொண்டவர்கள் இறக்கும் காலத்தில் கூற்றுவனுக்கு அஞ்ச வேண்டாம், நன்றாக வாழ்கின்ற காலத்தில் ஆண்டவனின் கவியைப் படிக்காமல் இருந்து விட்டால் பாவி யமன் வந்து கழுத்தில் சுருக்கிட்டு இழுத்துப் போவானே, அப்பொழுதா படிக்க முடியும்? சாகிற காலத்தில் சங்கரா சங்கரா என்றால் வராது.

**''நற்றவா உன்னை நான் மறககினும்**
**சொல்லுநா நமச்சிவாயவே''**

என்கிருர் சுந்தரர். மாணிக்கவாசகர் பாட்டை இராமலிங்க சுவாமிகள் அனுபவித்தார்.

**''வான்கலந்த மாணிக்கவாசகநின் வாசகத்தை
நானகலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேனகலந்து பால்கலந்து செழுங்கனித தீஞ்சுவை கலந்தே
ஊனகலந்தென் உளங்கலந்தே உவட்டாமல் இனிப்பதுவே''**

என்கிருர். அவருக்கு மட்டும் இனிக்கும் பாட்டு நமக்கு ஏன் இனிப்பதில்லை. நாம் அயில்வேலன் கவியில் கலந்து நம்மை மறந்து அன்போடு பிழையறக் கற்றுப் பாடினுல் யம பயத்தை வெல்லலாம். என அருணகிரிநாதர் புலப்படுத்துகிருர். அவர் பாட்டு எதிர்மறை வாய்பாட்டில் உள்ளது. நாம் யமன் வாயிலில்தான் தூங்குகிருேம். அவன் எந்த சமயத்திலும் நம்மைக் கொண்டுபோய் விடுவான் ஞானசம்பந்தர்,

**நீநாளும் நனனெஞ்சே நினைகண்டாய் யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும்''**

என்று நெஞ்சுக்கு உபதேசம் செய்கிருர்.

**''எரிமுணட தென்ன விழித்துப் புகையெழப்
பொங்குவெங் கூற்றன்''**

கூற்றன் மிகவும் சீற்றத்தோடு வருகிருன். அவன் கண்களில் அனல் கொப்பளிக்கிறது. புகை எழுகிறது. முகம் கோபத்தால் சிவந்துள்ளது. அவன் தன் பாசக்கயிற்றைப் போட்டு நம் கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கிருன். அவனது கொடுமையான பிடியிலிருந்து தப்ப வேண்டும் எனில் அயில் வேலன் கவியைப் பாடவேண்டும். வாழ்கின்ற காலத்து அவன் கவியைக் கற்கவில்லையெனில் மரணம் வரும் சமயத்தில் நிச்சயமாகக் கற்றுக் கொள்ள இயலாது என்று உபதேசம் செய்கிருர் அருணை முனிவர்.

**அழித்துப் பிறக்கவொட்டா அயில
வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி
லீர்எரி முண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங்
கூற்றன் விடுங் கயிற்ருல்
கழுத்தில் சுருக்கிட் டிழுகுமன்
ருேகவி கற்கின்றதே!**

# "நரியனார் பட்டபாடு...!"

திரு, புலவர்: எ. மாணிக்கம் அவர்கள்:
"முருக நிலையம்" விதூர்:

ஆவியொடு காயம்
அழிந்தாலும் மேதினியில்
பாவியென்ற நாமம்
படையாதே.........!

—பட்டினத்தார்

ஓர் ஊரில் மரங்கள் அடர்ந்த காடு. அக்காட்டிலே வேடன் ஒருவன் வேட்டையாடச் சென்றான். "கும்பிட போனதெய்வம் குறுக்கே வந்தது" போல, தன் எதிரில் பெரிய யானை ஒன்று வருவதைக் கண்டான். எல்லையிலா மகிழ்ச்சி கொண்டான். உடனே அவன் சரியாகக் குறி வைத்து யானையின்மீது அம்பு எய்தான்.

அம்பை எய்த அக்கணமே, அவனை ஒரு கருநாகம் கடித்தது. அந்நாகத்தின் மீதே அவனும் வீழ்ந்தான். அந் நாகமும் இறந்தது. அவனும் இறந்தான். அவனுடைய அம்புபட்ட யானையும் அதே இடத்தில் வீழ்ந்து இறந்தது.

அவ்வழியே வந்த நரி ஒன்று முறையே யானையும், வேடனும், நாகமும் இறந்து கிடப்பதைக் கண்டது. நரிக்கோ தாங்கொணா மகிழ்ச்சி. உணவுப் பஞ்சமே நீங்கிவிட்டதாகக் கருதிற்று. எப்படியும் ஆறுமாதங்களுக்குக் குறையாமல் யானையைத் தின்னலாம். வேடனை மூன்று நாட்கள் தின்னலாம். நாகத்தை இன்று தின்னலாம். என்றெல்லாம் கருதி இறுமாந்தது. இப்போதைக்கு மட்டும், வேடன் கையில் உள்ள வில்லின் நரம்பினைத் தின்று பசியாறலாம் என எண்ணிக் கடித்தது. அவ்வளவு தான். வில்லின் நாண் அறுபடவே, வில்லால் அடியுண்ட நரி அக்கணமே அலறித் துடித்து மாண்டது. "பேராசை பெருநட்டம்" என்பதுபோல் நரி

யின் வாழ்வும் இத்தகையதே என்பர் ஆன்றேர். இவ்வரிய வரலாற்றினை விவேகசிந்தாமணிச் செய்யுளால் அறியலாம்.

**''கரியொரு திங்க ளாறு**
**கனவன் மூனறு நாளும்**
**இரிதலைப் புற்றில் நாகம்**
**இன்றுணும் இரையீ தென்று**
**விரிதலை வேடன கையில்**
**விற்குதை நரம்பைக் கவ்வி**
**நரியனுர் பட்ட பாடு**
**நாளைநாம் படவே போரும்''**

என்பதனை ஒவ்வொரு தனி மனிதனும் கூட்டுறவு அதிகார வர்க்கமும் எண்ணிப்பார்க்க வேண்டும். தான் மட்டும் வாழ எண்ணுதல் தகாது. ''நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை''. என எண்ணும் நல்ல மனம் வேண்டும். பேராசை கூடாது. போதும் என்ற மனம் வேண்டும். தேவைக்கு மேல் சேர்த்துவைத்தல் கூடாது. உணவு தானியங்களைப் பதுக்கிவைத்தல் பெரும் பாவமாகும். 100 மூட்டை, 500 மூட்டை, 1000மூட்டை நெல், கோதும்மை என அடுக்கி வைத்து. மொத்தத்தில் ஆயிரம், பதினுயிரம், இலட்சம் என லாபத்தை எண்ணிக் காலம் கழித்தலோ அன்றி புழுந்து ஒன்றுக்கும் ஆகாதநிலையில் கடலின் மத்தியில் கொண்டுபோய் கொட்டுவதோ கூடாது.

இன்று அக்கொள்ளைக்காரர்கள், பதுக்கல்காரர்கள் நன்ருக இருக்கலாம். ஆனுல், **நரியனு பட்டது** போல் நிச்சயம் அச்சமுதாயத் துரோகிகள் தண்டனை காலத்தில் தப்பவே முடியாது.

**''தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயாது அடிஉறைந் தற்று''**

என்பது தமிழ்மறை. ஏழைகளின் கண்ணீர் அந்த எத்தர்களை சும்மாவிடாது. அன்ருடம் அரிசிவிலை கேட்டு அலறித் துடிப்போர் சிந்துகின்ற கண்ணீர்த்துளிகள் ஒவ்வொன்றுக்கும் அக்கயவர்கள் பதில்சொல்லியே ஆகவேண்டும்.

**"அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''**

என்ருர் திருவள்ளுவர். நெஞ்சில் கருணையின்றி கொள்ளை லாபம் கருத எண்ணும் நீச்சர்கள், பாட்டாளிகளை வாட்டி வதைக்கும் கோட்டான்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உணவு தானியங்களை முடக்கிவைத்தால் விரைவிலேயே தன்னுடைய கை கால்கள் முடக்கப்பட்டு அழிவார்கள். ''ஐங்காதம் ஓடினும் தன்வினைகள் தன்னேடு, அடையாமல் நீங்கி விடுமோ? என்பர் ஆன்ருேர். மேலும்,

**''இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே!
ஒருத்தருக்கும் தீங்கினையுன்ருதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருககுந் தான்''**

என்பர் பட்டிணத்தார். எனவே, மண்ணுலக வாழ்வில் ''மாபாவி'' இவன் என்று பேர்எடுக்காமல் எல்லோர்க்கும் நல்லோனுய் வாழ்தலே நன்மை நனிவிளைக்கும்.

**''பாவியென்ற பேர் படைத்துப்
பாழ்நரகில் வீழாமல்
ஆவியென்ற சூத்திரத்தை
அறிவதினி எக்காலம்?**

*—பத்திரகிரியார்*

### நேரிசை வெண்பா

**அரிசிவா என்ருலும் அன்ருடம் விற்க
அரிசிவா ராதென்ப ரற்பர் – அரிசியினைக்
கள்ளத் தனமாகக் காக்கின்ற பேர்வழிகள்
பள்ளத்தில் போய்விழுவர் பார்.**

# கந்தன் தந்த அகவாழ்வு

**திருமதி. ப. உமாதேவி அவர்கள்,**
(ஆசிரியை)
*9/49, திரௌபதி அம்மன் கோயில் தெரு,*
*அரியாங்குப்பம்–புதுவை-7*

## 1. மாய வேடன்

அது ஓர் அழகியத் தினைப்புனம். அங்கு தினைக்கதிர்கள் நன்கு செழித்து விளைந்து, முற்றித் தலைசாய்ந்து கிடக்கின்றன. அறுவடை செய்யும் பருவத்தில் உள்ள அவற்றைப் பறவைகள் வந்து கொத்திப் பாழ்படுத்தா வண்ணம் குறமகளிர் பரண்களில் இருந்து கொண்டு ஆலோலம்பாடி விரட்டுகின்றனர். தாரகைக் கூட்டத்திடையே எழுந்த முழுமதி போன்று அவ்விளமகளிரின் தலைவியும், மலைநாட்டு மன்னனின் தவப்புதல்வியுமான வள்ளி அனைத்து அலங்காரங்களுடன் அமர்ந்து தோழியருடன் ஆயலோட்டுகின்றாள். அவளோடு அவள் உயிர்த்தோழி யொருத்தி சந்திரனைச் சார்ந்த உரோகினிபோல இணைபிரியாது அமர்ந்துள்ளாள். தனித்து விடப்பட்ட இவ்வெழில் மகளிர் ஆட்டபாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

திடீரென்று தினைப்புனத்தில் ஒரு சலசலப்பு. தோழிப் பெண்கள் ஓர் கட்டிளங்காளையைக் கண்ணுற்று அஞ்சியோடுகின்றனர். அவனோ அவர்களைச் சட்டைசெய்யாமல் தலைவியைக் கண்டவாறு வருகின்றான். அவள் எழிலை அணு அணுவாக அவன் சுவைப்பதுபோன்று தலைவியின் கண்களும் அவன் அழகைப் பருகுகின்றன. நெடிதுயர்ந்த கம்பீரமான தோற்றம் வேட்டுவக் கோலம் புனைந்திருந்தது. நெற்றியில் அலைபாயும் குழற்கற்றைகள். உச்சியில் தூக்கிக் கட்டப்பட்டக் கரியபெரிய கொண்டை தலையாபரணங்களையும், அன்றலர்ந்த தேன் துளிர்க்கும் கடம்பமலர் மாலையினையும் அணிந்து எழிலுடன் விளங்குகின்றது. தோளில் வில்தாங்கி, அழகிய செம்பவள இதழ்களில் சிறுநகை தாங்கி, அன்பும் அருளும்,

குறும்பும், விஷமமும் கலந்த எழில் நயனங்கள் அவளைக் காதலுடன் நோக்க வீறுநடைபோட்டு வரும் ஆண்மகனின் துணிவு அவர்களுக்கு வியப்பையும், திகைப்பையும் தர, அவர்கள் வாளா நிற்கின்றனர். அறிவுடைத் தோழி இரு வரின் உணர்ச்சிகளையும் ஊகித்தறியும் முயற்சியில் ஈடுபட்டவ ளாய் நிற்கின்றாள்.

நங்கையரைக் கண்ட நம்பி திருவாய் மலர்கின்றான். தலைவியுடன் தோழியிருப்பதால் அறுபத்து நான்கு கலைகளைக் கற்ற ஐயன்கூடத் தடுமாறுகின்றான். ஆயினும் தன்னைச் சமாளித்தவனாய்த் தோழியிடம், தான் வேட்டைக்கு வந்த தாகவும், வேட்டையில் அம்புபட்ட கலையொன்று சோர்ந்து, இத்தினைப்புனத்தருகே ஓடிவந்ததாகவும், ஒருவேளை அது உள்நுழைந்திருக்குமோ? நீங்கள் அதனைக் கண்டீர்களோ? என்று சாதுரியமாகக் கேட்கின்றான். தலைவி நாணமிகுதி யால் பேசாமலிருக்கத் தோழி வேடனை ஏற இறங்கப் பார்க் கின்றாள். அவளுக்கு ஐயம் ஏற்படுகின்றது. அவன் வேட் டுவக் கோலத்தை எழிலுடன் புனைந்திருந்தானே தவிர வேட் டையாடியதாகவோ, மானைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தவ னாகவோ, தெரியவில்லை. இந்நிலையில் அறிவுடைய அவள் எவ்வாறு நம்புவாள்? அல்லது நம்பத்தான் முடியுமா? திரும்பித் தன் தலைவியைப் பார்க்கின்றாள். மீண்டும் அப் புதியவனை நோக்குகின்றாள். அவள் உள்ளம், அவர்களின் இதயக் கலப்பினையறிந்து கொள்கின்றது. எனவே அவள் தன் பொருட்டேத் தலைவன் பொய்யுரைப் பகர்கின்றான் என் பதையறிந்து கொள்கின்றாள். எனவே அவள் தனக்குள்ளே

**ஏனல் காவல் இவளும் அல்லள்**
**மான்வழி வருகுவன் அவனும் அல்லன்**
**நரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்**
**கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே**
**நம்முன் நாணினர் போலத் தம்முன்**
**மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல**
**உள்ளத்துள்ளே மகிழ்ப**
**சொல்லும் ஆடுப கண்ணினானே**

என்று கூறி நகைத்துக் கொள்கின்றாள். அதன் பயனாக அவள் அங்கிருந்து நழுவி விடுகின்றாள். பிறதோழியரையும்

அழைத்துக்கொண்டு வேறிடம் சென்றுவிடுவதால் தலைவன் தலைவி இருவருக்கும் தனிமை கிட்டுகின்றது. தனித்து விடப்பட்ட அவ்விருவரின் மகிழ்ச்சிக்கும் அளவுண்டா என்ன?

மான் வேட்டையைக் காரணமாகக் கொண்டு கன்னி வேட்டைக்கு வந்த மாயவேடன் குறமகளிடம் விடைபெற்றுச்செல்ல, மாலையில் தோழியுடன் இல்லிற்கு வருகின்ருள் தலைவி. அங்கே அவளுக்குச் சோதனையும், வேதனையும் காத்திருக்கின்றன. நிலவும் தென்றலும் அவளைப் பாடாய்ப் படுத்துகின்றன. அது மட்டுமா? இரவுப் பொழுதோ நீளுகின்றது. அவளுக்கோர் உறக்கம் வரவில்லை. ஆற்ருமையால் துடிக்கும் அவள் தன்னைச் சுற்றியிருப்போரைக் காண்கின்ருள். பாவம் அவளுக்குத் தலைவியின் வேதனை தெரியுமா என்ன? தோழியுட்பட அனைவரும் அயர்ந்து உறங்குகின்றனர். வீடு மட்டுமா? ஊரே ஆழ்ந்த நித்திரையில் இருக்கின்றது. இதைக் கண்டதும் அவளுக்கு ஆற்ருமையோடு ஆத்திரமும் பொங்கி எழுகின்றது. இவர்களை எப்படி எழுப்புவது என்று சிந்திக்கின்ருள். முட்டலாமா? அல்லது அடிக்கலாமா? ஏதாவது ஒரு பொய்க் காரணத்தை மேற்கொண்டு கூவலாமா? என்றெல்லாம் தன்னெஞ்சிடம் கேட்கின்ருள்.

**முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன் யானும் ஓர்வெற்றி மேலிட்டு**
**ஆ அ! ஒல் எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே**

என்று கேட்கக் காரணம், தான் துயிலாது துன்புறும்போது பிறர் மட்டும் நித்திராதேவியின் அணைப்பில் இருக்கின்ருர்களே என்ற பொருமையேயாகும்.

தலைவியின் வேதனைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டுக் கதிரவன் எழுகின்ருன். பொழுது விடிந்ததைக் கண்டபின்தான் தலைவிக்குப் போனஉயிர் மீண்டுவருகின்றது. தலைவனைத் தினைப்புனத்தில் காணலாம் என்ற எண்ணம் அவளுக்கு மகிழ்வு தருகின்றது. எனவே வேலைகளை முடித்துக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# இல்லறத்தின் பெருமை

திரு, பொன்; நாகமலை அவர்கள்
கொண்டையம் பாளையம்

ஒரு ஊருக்கு பல வழிகள் இருப்பது போலவே ஆண்டவனை அடையவும் பல வழிகள் உண்டு. சிற்றாறுகள் பல சேர்ந்து ஒரு பெரிய நதியாவது போல: ஆண்டவனை அடைய பல வழிகள் இருப்பினும், அவைகளை இரு பெரும் வழிகளில் அடக்குவர் பெரியோர். அந்த இரண்டு வழிகளாவதுஇல்லறம், துறவறம் ஆகிய இரண்டுமாம்.

இரண்டுமே சமமானது என்றும், அவைகளில் ஏற்றத் தாழ்வு கற்பிக்கக் கூடாது என்றும் கூறுவர் பெரியோர். இராமகிருஷ்ண பரமஹம்சர், தன் உபமானக் கதைகளின் மூலம், இல்லறம் கணவன் மனைவி ஆகிய இருவரும் நடத்த வேண்டிய முறையில் நடத்தினால் இல்லறம் நல்லதென்றும்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உயிர்த் தோழியுடன் புறப்படுகின்றாள். வழியில் தோழி தலைவியின் சோர்ந்து இடுங்கிய கண்களையும், களைத்து, நிறம் மாறுபட்ட உடலையும் கண்டு என்ன நடந்தது என்று வினவுகின்றாள். அதற்குத் தலைவி மிகச் சுருக்கமாக

**''நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்து**
**இனிது அடங்கினரே மாக்கள் முனிவின்று**
**நனந்தலை யுலகமும் துஞ்சும்**
**ஓர்யான் மன்ற துஞ்சாதேனே''**

என்று விடையிறுக்கின்றாள். எனக்குத் துணையிருக்க வேண்டிய தோழியாகிய நீயும்கூட உறங்கிவிட நான் மட்டுமே விழித்திருந்தேன் என்ற தலைவியின் பதில் தோழிக்கு நகைப்பைத் தருகின்றது.

(தொடரும்)

ஒரு துறவி எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடந்தால் துறவறம் நல்லதென்றும், இவைகளில் எதுவும் உயர்வு தாழ்வு இல்லையென்றும் விளக்கிக் காட்டுவார்.

ஆனால் எல்லோரும் ஒப்புக் கொள்ள கூடியதும் உலகப் பொதுநூல் என்று போற்றப்படுவதும், தமிழ் வேதம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதான திருக்குறள் என்ன சொல்கிறது என்றால்,

> **அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
> **பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

என்று இல்வாழ்க்கையைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார் இல்லறம் இயற்கையானது, கடைப் பிடிப்பதற்கு எளிமையானது. கணவர், மனைவி, மக்கள், சுற்றத்துடனே முறைபடி வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டே பற்றுக்களை களைவது. ஐம்புல இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டே, ஆண்டவன் மேல் பற்று வைத்து மற்ற பற்றுக்களை படிப்படியாக விடுவது.

துறவறமோ என்றால் ஆரம்பத்திலிருந்தே செல்வங்களையும், போக போக்கியங்களையும், ஐம்புல இன்பங்களையும், வெறுத்து நீத்து தனியிடத்திற்குச் சென்றோ, அல்லது காட்டிற்குச் சென்றோ, கந்தமூலாதிகளைப் புசித்தும், வெய்யில் என்றும், மழை பனி, என்றும் பாராமல் ஆண்டவனை நோக்கி கடுந்தவம் புரிவது. இது சர்க்கஸில் கம்பியில் நடப்பதைப் போல, சிறிது தவறு ஏற்பட்டாலும் பெரிய ஆபத்து இல்லறத்தில் தவறு ஏற்பட்டாலும் மேலும் மேலும் முயற்சி செய்யலாம். ஆனால் துறவறமோ தவறு ஏற்பட்டால் பிறகு அந்த தவற்றை நீக்குவது கடினம் அதனால் தான் மேலே சொன்ன குறளில் வள்ளுவர் அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று. என்று குறிப்பிடுகிறார், அதற்ப் பரிமேலழகர் துறவறமோ எனின் அதுவும் பிறன் பழிக்காத முறையில் நடத்த வேண்டும் என்று உரையெழுதுகிறார்.

சுருங்கச் சொன்னால் இல்லறம் எல்லா இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டே யான், எனது. என்னும் பற்றுக்களை

நீக்குவது. துறவறம் எல்லாவற்றையும் வெறுத்து ஒதுக்கு வதன் மூலம் பற்றுக்களைத் துறப்பது. அக்கினிப் பரீட்சை விஷப் பரீட்சை என்பது போல துறவறம் கடினமானதாக இருப்பதால், வள்ளுவர் அது எல்லோராலும் கடைப்பிடிக்க இயலாது. தவம் செய்வதற்கும் முற்பிறவியில் தவம் செய் திருக்க வேண்டும் என்று சொல்கிறார்.

''தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற் கொள்வது''

இல்லறம் எளிமையானது, துறவறம் உடலையும் உள்ளத்தை யும் வருத்துவது, ஆகையால்துறவறம் கடினமானது. இதனால் தான் அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை, என்று அடித்துச் சொல்கின்றாரோ வள்ளுவர், என்றால் இதனால் இப்படி இல்லறமே நல்லது என்று உறுதியாகச் சொல்லமாட்டார், அதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும். அது என்ன காரணமாயிருக்கும், என்ற இந்த வகையில் நம் சிந்தனையைச் செலுத்திப் பார்ப்போம்.

முதலில் துறவறத்தை எடுத்துக் கொள்வோம். காட்டிற் குச் சென்று கடுந்தவம் புரிந்து கந்த மூலாதிகளைப் புசித்து வெய்யிலில் காய்ந்தும், மழையிலும், குளிரிலும், நனைந்தும், கால்மேல் நிமிர்த்தியும் யாக்கையையும் மனத்தையும் துன் புறுத்தி பல நாள் தவஞ் செய்து ஆண்டவனைக் காணுகிறார். எல்லையற்ற பேரானந்தமடைகிறார். அவர் உடம்பெல்லாம் ஆனந்தத்தேன் பாய்கிறது. நாடிநரம்புகளில் அமுததாரைகள் ஓடுகின்றன. பிறவிப் பெருங்கடலை நீந்தி விடுகிறார், என்று வைத்துக் கொள்வோம். அவர் கண்ட இறைவனை அவர் பெற்ற ஆனந்தத்தை அவர் ஒருவர்தான் காண முடியும். ஆனந்தமடைய முடியும், பிறருக்கு இங்கிறத்தான், இவ் வண்ணத்தான், இத்தன்மையரான் என்று நேரில் காட்ட முடியாது அவர் ஒருவர்தான் பிறவிப் பெருங்கடலை நீந்த முடியும். அவர் பெற்ற அனுபவத்தையடைய, அவர் குருவா யிருந்து, பல மாணுக்கர்களுக்கு ஆண்டவனையடைய வழி காட்டலாமே தவிற, அவர் இறைவனைக் கண்ட அதே சமயத் தில் வேறொருவருக்குக் காட்ட முடியாது. அவர் பெற்ற

காட்சியை அவர்தான் காணலாம். அவர் நுகர்ந்த இன்பத்தை அவர்தான் அனுபவிக்கலாம், மற்றவருக்கு உணர்த்தவோ காட்டவோ முடியாது.

ஆனல் இல்லறம் அப்படியல்ல கணவனும் மனைவியுமாக இல்லறத்தை நல்லறமாக நடத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, அகப்பற்று, புறப்பற்று, ஆகிய பற்றுக்களைத் துறந்து குடும்பத்தில் வழுவாமல் வாழ்ந்தால் இறைவன் அவர்கள் வீடு தேடி வருகிருர்.

**''மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும்**
**சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவன்''**

என்று திருநீலகண்டர் வரலாற்றில்கூறப்படுகிறது. வீடுதேடி வந்து அம்மையப்பனக காளைவாகனத்துடன் காட்சியளிக்கிருர் என்றுவைத்துக்கொள்வோம். இப்போது துறவறத்தில் ஒருவரே கண்ட காட்சியை இல்லறத்தில் இருவர் கண்கூடாகக் காணும்பேறு கிட்டுகிறது. இவ்வாறு திருநீலகண்டர், இளையான்குடிமாறனர், இயற்பகையார், முதலியவர்கள் கணவன், மனைவி ஆகிய இருவரும் இறைவனைக் கண்டார்கள், ஒருவர் கண்ட காட்சியை இருவர் கண்டதால் மட்டும் இல்லறம் மேலானதாகச் சொல்லப்படுகிறதா அல்லது, இன்னும் வேறு காரணங்கள் இருக்கிறதா என்று பார்ப்போமானல் மேலும் சில காரணங்களை பெரிய புராணத்தில் காணலாம். அவற்றையும் சிறிது பார்ப்போம்,

திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்திலே இருவர் இறைவனைக் கண்டதாகப் பார்த்தோம். அதே புராணத்தில் அமர் நீதியார் வரலாறு வருகிறது. அவர் அடியார்களுக்கு கோவணத் திருத்தொண்டு செய்தவர். அவர், கணவன் மனைவி, என்ற இருவர் மட்டுமல்லாமல் அவர்கள் மக்களும் சேர்ந்து ஆண்டவனைக் கண்டு அவர்கள் நின்ற துலையே விமானமாக மாற அப்படியே சிவலோகம் சேர்ந்தார்கள் என்று அமர்நீதி நாயனர் வரலாறு கூறுகிறது. ஆண்டவன் அம்மையப்பனகக் காட்சி அருளிய போது, யார் யார் அந்தக் காட்சியைக் கண்டார்கள் என்று இத்திருப்பாட்டு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

"தொழுது போற்றியத் துலைமிசை நின்றுநேர் துதிகளும்,
வழுவில அன்பழும் மைந்தரும் மனைவியார் தாமும்
முழுதும் இன்னருள் பெற்றுத்தம் முன் தொழு திருக்கும்
அழிவில வானபதங் கொடுத்தெழுந் தருளினுரையர்"

வழுவில் அன்பராகிய அமர்நீதியாரும் மக்களும் மனைவியும் இறைவனைக் கண்டு அவன் அருள் பெற்று அத்துலையே விமானமாக அழிவில் வான்பதம் அடைந்தனரென்றால் இல்லறத்தின் மாண்பை என்னென்பது.

இன்னும் சிறிது பெரிய புராணத்தின் உள்ளே சென்று பார்ப்போமானால் குடும்பத்துடன் மட்டுமல்ல வேலைக்காரியுடன்கூட ஆண்டவனைக் கண்டனரென்றால் அந்த வரலாறுகளை நமக்கு எடுத்துக்காட்டும் பெரிய புராணத்தின் பெருமையை என்னவென்று புகழ்வது. அதன் பெருமையை யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும். இப் டி இல்லறம் நடத்திய திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட்ட அப் புராணம் பெரிய புராணம் என்று பெயரால் வழங்குகிறது. வேலைக்காரி யாருடன் சேர்ந்து இறைவனைக் கண்டு முத்தியடைந்தாள் என்பதைப் பார்ப்போம்.

சிறுத்தொண்டர் அவர் மனைவி திருவெண்காட்டு நங்கையார், மகனார் சீராள தேவருடனே, அவர்கள் தாதியாகிய சந்தனத் தாதியாரும் இறைவன் அருள் பெற்று சிவபுரம் சேர்ந்தனர் என்று பெரிய புராணம் கூறுகிறது. இதோ அத் திருப்பாட்டு.

"கொன்றை வேணியார் தாமும் பாகங்கொண்ட குலக்கொடியும்,
வென்றி நெடுவேல் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்,
நின்றதொண்டர் மனைவியார் நீடுமகனார் தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க உடன்கொண் டேகினார்"

சிறுத்தொண்டர் குடும்பத்துடன் அவர்கள் வேலைக்காரியான சந்தனத் தாதியாரும் உடன் கண்டார் என்பதே இல்லறத்திற்குப் பெருஞ் சிறப்பு. இல்லறத்திற்கு இந்தக்காட்சி மேலும் ஒரு சிறப்பைத் தருகிறது. பாட்டைக் கவனியுங்கள், கொன்றை மாலையணிந்த சிவபெருமானும், பராசக்தியும், வெற்றி வேலாயுதப் பெருமானும் ஒருசேரக் காட்சியளித்தி

ருக்கிறார்கள். இவர்கள் மூவரில் ஒருவரைக் காண்பதற்கே பல பிறவிகள் தவஞ் செய்ய வேண்டுமென்றால் மூவரையும் ஒருசேரக் காட்டிய இல்லறத்தின் பெருமைதான் என்னே என்னே.

இன்னும் குடும்ப வாழ்க்கையாகிய இல்லறத்தின் சிறப்பைப் பார்ப்போம். திருஞானசம்பந்தர் நல்லூரில் நம்பியாண்டார் நம்பியின் திருமகளாரைக் கைப் பிடித்துத் தீவலம் வந்து சுற்றிய பின். எம்பெருமானே தேவர் தேவனே அடியேனுக்குப் பெறுதற்கரிய இல்லறத்தையளித்துச் சிறப்புச் செய்தீர். உன் மலர்ப் பாதம் அடைவதற்கு இதுவே தருணம் என்று நல்லூர்ப் பெருமானை வேண்டினார் இறைவன்,

> ''தேவர்கள் தேவர் தாமுந் திருவருள் புரிந்து நீயும்,
> பூவையன் னாளுமிங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்
> யாவரும் எனைப்பற் சோதி இதனுள் வந்தெய்து மென்று''

அருள் புரிந்தார். இதன்படி திருஞானசம்பந்தரும் அவர் மனைவியாரும் திருமணத்திற்கு வந்த அனைவருக்கும்இறைவன் அருள் புரிந்தார். அப்போது கோயிலில் ஒரு சோதி தோன்ற அதன் வாயிலில் அவர்கள் சுற்றத்தாரும், திருநீலநக்கர், திருமுருகநாயனார், சிவபாத இருதயர், நம்பியாண்டார் நம்பி, நீலகண்ட யாழ்ப்பாணர் மற்றும்,

> ''அணிமுத்தின் சிவிகைமுதல் அணிதாங்கிச் சென்றோர்கள்
> மணிமுத்த மாலைபுனை மடவார் மங்கலம் பெருகும்
> பணிமுற்றும் எடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசந்
> துணிவித்த உணர்வினராய் தொழுதுடனே புக்கொடுங்கினார்''

பின்னும் ஆறுவகைச் சமயத்தாரும் தவசிகளும் அடியாரும் முனிவர்களும் கும்பிட வந்தவர்களும் புகுந்த பின் திருஞானசம்பந்தர் காதலியைக் கைப் பிடித்து சோதியை வலம் வந்து உட்புகுந்து கலந்து மறைந்தனரென்றால் இல்லறத்தின் மாண்பை என்னவென்று புகல்வது. இந்தக் கண்ணோட்டத்துடன் பெரிய புராணத்தை நோக்கும் போதுதான் வள்ளுவர் இல்லறத்தைப் பற்றிச் சொன்ன அருமைப்பாடு நமக்கு விளங்குகிறது. அறனெப்பட்டதே இல்வாழ்க்கை என்று சொன்னதன் அருமை நமக்குப் புலப்படுகிறது. துறவறத்தின்

எல்லையற்ற ஆற்றலையும் பெருமையையும், வலிமையையும் திருவள்ளுவர் நமக்கு உயர்த்திக் காட்டுகிறார். கொள்கையின் மேன்மைக்குத் தகுந்தாற்போல் அதன் வழியும் கடினமானது என்றும், அதுமுன் தவம் செய்தவருக்குத்தான் விட்ட குறை தொட்ட குறையாக வாய்க்கும் என்றும் விளக்கிக் காட்டுகிறார்.

இனி இல்லறத்தை கணவன் மனைவி எப்படி நல்லறமாக நடத்த வேண்டும். எப்படி வாழ்ந்தால் இயல்பினான் இல் வாழ்க்கை வாழ்பவன் என்பதைப் பார்ப்போம். குடும்பத்தை நடத்த தொழில் செய்ய வேண்டுமென்றும், பிறகு அந்தத் தொழிலையே விரிவுபடுத்தி நம் குடும்பத்துக்கு மட்டுமல்லாமல் இன்னும் பல உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி அவைகளுக்கும் சேவை செய்வதன் மூலம், தொழிலைத் தொண்டாக மாற்றி பின், அந்தத் தொண்டையே ஆண்டவனை நோக்கித் திருப்பி அவனையே நினைந்து பற்றற்று செய்வதன் மூலம் திருத்தொண்டாக மாற்றி, அத்திருத் தொண்டையே இடைவிடாது செய்வதன் மூலம் தொழும்பு, என்ற நிலைக்குவந்தால் ஆண்டவனைக் காணலாம் என்று சென்ற சித்திரை மாத இதழில் விரிவாகப் பார்த்தோம். இனிமற்றொரு எளியவழியின் வழியாகவும் ஆண்டவனை அடையலாம். அந்த வழியை அடுத்த இதழில் பார்ப்போம்.

———

# திருமுருகன் 108

பேராசிரியர்

திரு, இ. எஸ். வரதராஜய்யர் அவர்கள் இயற்றியது.

சீரார் செந்தில் செல்வனே முருகா
பேரார் தணிகைப் பிள்ளாய் முருகா
மாலிருஞ் சோலைமலை வாழ் முருகா
ஆலமர் செல்வன் அணைக்கும் முருகா
திருப்பரங்குன்றில் விருப்பனே முருகா
கருப்பரங்குன்றக் காண்பாய் முருகா
குருமலை வாழும் குமரா முருகா
மருமலர்க் குழவி வள்ளிசேர் முருகா
குன்றுதோருடலில் நின்றொளிர் முருகா
மன்றினில் ஆடுவான் மகனே முருகா

பழனி மலையின் கிழவனே முருகா
தழனிகர் மேனிகொள் சண்முகா முருகா
மாரனை வென்ற அழகனே முருகா
ஆரணம் போற்றும் தீரனே முருகா
சென்னி மலையுறை செல்வனே முருகா
கன்னி உமைதரும் காளையே முருகா
வெற்பினில் உறையும் பொற்பார் முருகா
கற்புடை குஞ்சரி கணவனே முருகா
சூரனைவென்ற தீரனே முருகா
வாரணக் கொடியினை வகுப்போய் முருகா

பச்சைமயில் மிசைஇச்சை கொள் முருகா
அச்சம் தவிர்க்கும் அறுமுகா முருகா
அன்பர்க்கருளும் அமலா முருகா
பொன் பரிந்துதவும் அன்பனே முருகா
தாருகற் செற்ற சூரனே முருகா
சீரிளமை யொடும் திகழ்தரும் முருகா
குருகுமலையைக் குமைத்தோய் முருகா
உருகிடும் அன்பர்உழை தமர் முருகா
சேவற் கொடியுடை சேவகா முருகா
ஆவல்கொள் அடியவர்க் கமுதே முருகா

தமிழகத்தியர்க்குத் தந்தாய் முருகா
அமிழ்தினும் இனிய அழகனே முருகா
ஆற்றுப்படை கேட்டக மகிழ் முருகா
மாற்றூர் படைக்கு மறலியே முருகா
திருப்புகழ்ப் பாக்களில் விருப்பனே முருகா
பொருப்புகள் அனைத்தினும் பொருந்துநல் முருகா
புத்திரப்பேறு புரிந்தருள் முருகா
சத்திவடிவேல் தரித்திடும் முருகா
கொண்டலின் அருள்பொழி குமரா முருகா
அண்டர்கள் துயர்தீர்த் தாண்டருள் முருகா

மாலோன் மகிழும் மருகா முருகா
ஆலோன் எனஒளிர் ஆநந முருகா
பிரமனைச் சிறையிடைப் பெய்தநல் முருகா
கரமீராறு கொள் கந்தனே முருகா
கலியுக வரதனே காங்கயா முருகா
நலிந்திடும் வினைகளைத் தவிர்ப்பாய் முருகா
பொய்யா மொழிக்கருள் செய்யனே முருகா
நையா துலகம் நலம்புரி முருகா
அரற்கரு மறைப் பொருள் அறைந்தநல் முருகா
சுரரிடர் தவிர்த்த சுந்தரா முருகா

திருச்செங்கோட்டில் திகழ்தரும் முருகா
மருத்திகழ் கடப்ப மாயவேய் முருகா
பிணிமுகப் பரிமேல் பிறங்குநல் முருகா
அணிமுகம் ஆறுகொண்டவிர் தரும் முருகா
மைந்தர்க்கு மைந்தென வயங்கிடு முருகா
மகளிர்க்குச் சாயல வடிவேல் முருகா
வெம்பவம் ஒழித்திடும் விறலார் முருகா
நம்பினவர்க் கருள்நாதனே முருகா
கார்த்திகை மகளிர்க் கருள்புரி முருகா
தீர்த்தனே நீறணிசெல்வனே முருகா

ஆறெழுத்துணர் வோர்க்கருள்புரி முருகா
வீறுடன் திகழ்தரும் விமலனே முருகா
கந்தமா மலைக்குச் சொந்தனே முருகா
சந்தமா மறைகள் சாற்றிடும் முருகா
தோகை மலையுறை வாகைகொள் முருகா
ஏகன் அநேகன் எனஒளிர் முருகா
வேலூர் உறைதரும் வேலவா முருகா
வான்விழிக் குறத்தி மகிழ்நனே முருகா

பகழிக்கூத்தர் புகழ் பண்பனே முருகா
முகமூவிரண் டுடைமுத்தனே முருகா

மூங்கையைப் பேசவைத்த ஊங்கயா முருகா
தீங்கினைத் தவிர்க்கும் திறலனே முருகா
காவடி மீதினில் ஆவல்கொள் முருகா
பாவலர்க் கருள்புரி தேவனே முருகா
குரவைக் கூத்தயர் குமரனே முருகா
சுரரிடர் தீர்த்த சூரனே முருகா
விகடன்பின் வந்தவிதரண முருகா
குகனெனப் பெயர் கொண்டெ காற்றவா முருகா
போற்றுநர்க் கருள்புரி புண்ணிய முருகா
கூற்றுவன் வாதையை மாற்றிடும் முருகா

போரூர்த் தலத்திடைப் பொருந்தும்நல் முருகா
நீரூர் வேணியன் சிறுவனே முருகா
நல்லிசைக் குருகும் நணியனே முருகா
வல்லிய மென்னவ யங்கு வேல் முருகா
வேடுவர் மருகா வெற்றிவேல் முருகா
நீடுமாயுள் தரும் நின்மலா முருகா
பறைமுழித் தவர்க்கருள் பாலகா முருகா
நற்றவர்க் கருள்புரி நாயகா முருகா
வெறியாட்டு கக்கும் வேலனே முருகா
மறியாடு கொண்டு மகிழ்தரும் முருகா

இந்திரன் மருகா எழில்சேர் முருகா
சந்திரவதனு சகம்புகழ் முருகா
மாமகள் போற்றும் மருகா முருகா
காமனை வென்ற கட்டழகா முருகா
வஞ்சப் புகழ்ச்சியில் வாஞ்சை கொள் முருகா
தஞ்சமென் றறி ஞர்தமுவிடும் முருகா
தோகை மயில்மிசைத் தோன்றும்நல் முருகா
வாகை கொண்டுயரும் வடிவேல் முருகா
ஓங்காரத்துட் பொருட் குள்ளமர் முருகா
ஆங்கார மற்றோர்க் கருள்புரி முருகா

நினைப்பவர் நெஞ்சில் திகழ்தரும் முருகா
தினைப்புனக் குறத்தி சேர்செல்வனே முருகா
கதிராயிரமெனக் கவின்செயும் முருகா
அதிரார் கலியற வறைந்து வெல் முருகா

தென்தமிழ்க் கவிகளில் திளைத்திடும் முருகா
மன்றிடத் தாடரன் மகனே முருகா
சாம்பவிதந்த சதுரனே முருகா
ஏம்பவோடருள் செயும் ஈசனே முருகா 108

உருகும் உளத்தன்பின் வரதன் உரைத்த
முருகனூற் றெட்டு முழுதும் – பெருகன்பிற்
கற்பார் நீடாயுள் கனநிதி பம புததிரர்கள்
பெற்றுலகில் வாழ்வார் பெரிது

வாகாறிரண் டுடைக்கந்தன் திருமால் மகிழ்மருகன்
மேகார மூரும்விமலன் விளிகுக்குடக் கொடியன்
ஏகாட்சரப் பொருள் தந்தைமகிழ இசைததகுரு
பாகார் மொழிவள்ளி கேள்வன் பராசத்தி பாலகனே

இன்பம் பெருகும் இனிதாகும் இல்வாழ்க்கை
துன்பம் தொலையும் துனியகலும பொன்புரையும்
மேனியன் வேலன் வியன்மயிலன் சண்முகனை
ஆநியம் தோறும் நினைத்தால்

---

## 'என்றும் உன் அருள் வேண்டும் முருகா!'

சிவத்திரு: அ. சோமசுந்தரம் அவர்கள்,

---

என் றும் உன் அருள் வேண்டும் முருகா
குன்றின் மேல் நின்ருடும் குமரா

செந்தமிழ் மொழியிலே தீந்தமிழ் பாவாலே
பண்புடன் உனைப்போற்றி பலபாடல் நான்பாட (எ)

தீபத்தின் ஒளியான திங்களின் எழிலான–உன்
மோகன முகங்கண்டு முதிர்ஞான கவிபாட (எ)

கையிலே வேல்கொண்டு, கண்ணிலே அருள்கொண்டு
நெற்றியில் நீர்கொண்ட வெற்றி வடிவேலா (எ)

சூரனைவென்று அன்று வீரனய்நின்ற திருமாறனே
உன்னிரு மலரடி நான்போற்ற (எ)

சிவ சிவ]

# பட்டினத்து அடிகளின் அருந்தொண்டு

**திரு: கே லெட்சுமணன் அவர்கள்,**
அவிநாசி ரோடு,
கோயம்புத்தூர் 18 (641018).

சிவனடியார்களும், ஆழ்வார்களும், சமண முனிவர்களும் பௌத்தத் துறவிகளும் நூல்கள் பலவற்றை இயற்றிப் பாடல்கள் பலவற்றைப் பாடித் தமிழ் மக்களுக்கே யன்றி, பிறர்க்கும் பக்திச் சுவையை ஊட்டினர். அவர்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்தது உண்மையே. எனினும் அவர்களுடைய முற்ற முடிந்த நோக்கம் அடிப்படையில் ஒன்றே என்பது நன்கு ஆராய்வோருக்குப் புலப்படும்.

தமிழ் மக்களுக்கு உறுதிப் பொருள்களை உரைத்த பெரியார்களுள் முன்னணியில் நிற்பவர் பட்டினத்து அடிகள். அவர் பாடிய பாடல்கள் படிப்போர் மனத்தில் உள்ள மாசுகளை அகற்றும். காவிரிப்பூம்பட்டினம் என்னும் நகரில் சிவநேசர் என்பவர்க்கு ஞானகலாம்பை என்னும் அம்மையாரிடம் பிறந்தவர் பட்டினத்தார். அவரது இயற்பெயர் திருவெண்காடர், அவர் கல்வி கேள்விகளில் வல்லவராக விளங்கி, சிவபிரானிடத்தே பேரன்புகொண்டு வாழ்ந்தார். உலக மாயையை அவருக்கு உணர்த்தும் பொருட்டுச் சிவபிரான் மருதவாணர் என்னும் பெயருடைய சிறுவராகத் தோன்றி, அவரிடத்தே பிள்ளையாக வளர்ந்தார். பிறகு மருதவாணர் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்னும் உண்மையைப் பட்டினத்தாருக்கு உணர்த்தி மறைந்தார்,

இந்நிகழ்ச்சி பட்டினத்தாரின் வாழ்க்கையில் பெரியதொரு திருப்பமாக அமைந்தது. உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்த பட்டினத்தார் துறவு பூண்டார்; உலக மக்கள் உய்யும் பொருட்டுப் பல பாடல்களைப் பாடினார்; கடவுளிடத்தே கருத்தைச் செலுத்த வேண்டுவதன் இன்றியமையாமையை மக்களுக்கு எடுத்துக் காட்டினார். திருவொற்றியூரில் சிவலிங்கமாக மாறி, இவ்வுலக வாழ்வை நீத்தார்,

அவர் பாடியுள்ள பாடல்கள் மக்களின் மனத்தேயுள்ள மாசுகளைப் போக்கும் என்பது உறுதி,

பட்டினத்து அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்தும், அவர் பாடிய பாடல்களிலிருந்தும் நாம் அறியும் உண்மைகள் பல. அடிகளார் உலகமக்கள் உய்யும்பொருட்டு அறிவுரைகள் பலவற்றை அருளியுள்ளார். அவர் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது, திருவேகம்ப மாலை முதலிய நூல்களையும், தனிப்பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார். அவற்றிலிருந்து அடிகளாரின் இலக்கியப் புலமையையும், இலக்கண நுண்ணறிவையும், கவிபாடும் வன்மையும் நாம் நன்கு அறியலாம். கல்வி கற்றதனுல் ஆயபயன் கடவுளை வணங்குவதே என்னும் உண்மை அவற்றிலிருந்து நன்கு புலப்படும். உலகத்தின் நிலையாமையை நன்கு விளக்கி, கடவுளினிடத்தே அன்பு செலுத்துமாறு அவர் கூறும் அறிவுரை சாலச்சிறந்தது ஆகும்.

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதும்கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டுமென்றேஅறி வாரில்லையே."

என்னும் பாடலைப் பன்முறை படித்தால் எத்துணைச் சிறந்த உண்மை ஈண்டு எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது என்பது விளங்கும். எத்துணைப் பேரரசர்கள் இவ்வுலகில் வாழ்ந்தனர்? எத்துணைச் செல்வர்கள் வாழ்ந்தனர்? இவ்வுலகத்தையெல்லாம் ஒரு குடைக்கீழ்க்கொண்டு வரமுயன்று, சென்ற இடங்களில் எல்லாம் வெற்றிக் கொடியை நாட்டிய அரசர்கள் இன்று எங்கே சென்றனர்? மண்ணாய்ப் பிடி சாம்பலாய்ப் போயினரன்றோ? இவ்வாறு பிறந்தோர் இறப்பர் என்னும் உண்மையைக் கண்கூடாகக் கண்டும், இவ்வுலக மக்கள் உண்மையறிவு பெறுகின்றனரோ? உடலில் உயிர்நிலை பெறும் பொழுதே, கடவுளின் திருவடிகளைச் சேர்ந்து உய்யவேண்டும் என்று நினைக்கின்றனரோ? பட்டினத்தார் கூறும் அறி

வுரை எவ்வளவு சிறந்தது? இத்தகைய அறிவுரையை அவர் பல இடங்களில் கூறியுள்ளார்.

> "காலன் வருமுன்னே கண்பஞ்சு அடைமுன்னே
> பாலுண் கடைவாய் படுமுன்னே - மேலவிழுந்தே
> உற்றார் அழுமுனனே ஊரார் சுடுமுன்னே
> குறறுலத தாணேயே கூறு"

இவ்வுலகத்தின் மாயையைப் பட்டினத்தார் நன்ருக எடுத்து விளக்குகின்றார். மனைவி, மக்கள், உற்றார் உறவினர் முதலியோர் மாயையின் உருவெளித்தோற்றம் என்று அவர் கூறுகின்றார். நாம் இவ்வுலகில் வளமாக வாழத்தான் பிறந்திருக்கின்றோம். வாழ்க்கை வாழ்வதற்கே அன்றி அழுது அழுது சாவதற்கு அன்று. இவ்வுலகத்தே இன்பப்பொருள்கள் பலவற்றைக் கடவுள் படைத்துள்ளார். அவற்றை நாம் துய்க்க வேண்டும் என்னும் எண்ணத்துடனேயே அவை படைக்கப் பட்டுள்ளன. அவற்றைத் துய்த்து மகிழ்வது நம்கடமையே. ஆனல் அவைகளே முற்ற முடிந்த இன்பமாவன என்று கருதுதல் அறியாமை ஆகும். இவ்வுலக இன்பத்தைத் துய்த்த பின் கடவுளின் அருளாகிய பேரின்பத்தைத் துய்த்ததற்கு நாம் வழிகோல வேண்டும் ஏன் எனில் இவ்வுலக இன்பங்கள் நாளடைவில் ஒருவருக்குப் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்ப் போய்விடும். இவ்வுண்மையைப் பட்டினத்தார்,

> "மையாடு கண்ணியும மைந்தரும் வாழ்வும மனையும் செந்தீ
> ஐயா நினமாயைய உரு வெளித்தோறறம அகிலதனுள்ளே
> மெய்யாய் இருநதது நாட்செல நாட்செல வெட்டவெறும்
> பொயபாயப் பழங்கதை யாயக்கன வாயமெல்லப் போனதுவே"

என்று பாடியுள்ளார்,

பட்டினத்தார் பல நூல்களைக் கற்றறிந்தும், ஞானநிலை பெறுதற்கு ஆசிரியர் ஒருவரைத் தேடினர்; குற்றம் கண்ட இடத்து அதை எடுத்துக் காட்டத் தவறினர் அல்லர். தம் தமக்கையார் நஞ்சுகலந்த ஒட்டப்பத்தினைக் கொடுத்த காலையில், அவ்வம்மையாரின் வீடே எரியுமாறு செய்தார். அவர் துறவுபூண்ட நிலையிலும் தம்மனைவிக்கு நல்வழி கூறியருளினர். தமது தாய்க்கு ஈமக்கடன் செய்து முடிக்கும்வரையில், அவ்வூரிலேயே வாழ்ந்தார். இவை அவரது கடமை உணர்ச்சி

யைக் காட்டுவன. ஒருவர் எந்நிலையிலும் தமது கடமையைச் செய்யத் தவறுதல் கூடாது என்னும் அறிவுரையை மக்களின் மனத்தே இவை நிலைநாட்டும் என்பதில் ஐயமில்லை.

பட்டினத்தார் தமது அறிவின் அளவை நன்கு அறிந்திருந்தார். ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்தாலும், தனது அளவை உணரவேண்டும். ஒருவன் தன்னுடைய அறிவையும் ஆற்றலையும் குறைவாகக் கணக்கிடுதலே அறிவுடைமை ஆகும். இத்தகைய அறிவுரையைப் பட்டினத்தார் நமக்குக் கூறித் தெளிய வைக்கின்றார். அவர் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தார்; கடுந்துறவு பூண்டார்; கடவுளை வணங்குதலே தமது கடமை என்பதை உணர்ந்தார்; மனமறிந்து எத்தகைய தீமையையும் செய்திலர். எனினும் அவர், கடவுளுக்கு அடிமையாகும் பண்பு தமக்கு வரவில்லை என்றே கருதினர், அக்கருத்தினை அவர்,

**"வாளால் மகவுஅரிந்து ஊட்டவல் லேன்அல்லன் மாதுசொன்ன**
**சூளால் இளமை துறக்கவல் லேன்அல்லன் தொண்டுசெய்து**
**நாளாறில் கண்இடந்து அப்பவல் லேன்அல்லன் நான இனிச் சென்று**
**ஆளாவது எப்படி யோதிருக் காளத்தி அப்பருக்கே."**

என்று பாடியுள்ளார்.

எத்துணை நயமான பாட்டு! செயற்கரிய செயலை எளிதில் செய்வோர் பெரியர் ஆவர். சிவனடியார்கள் செயற்கரிய செயலை எளிதில் செய்தனர். தம் மனைவியாரையே சிவனடியார் ஒருவருக்குக் காணிக்கையாகக் கொடுக்க முன்வந்தார் ஓர் அடியார்! சிவபூசைக்கு இடையூறு செய்த தம் தந்தையின் காலினை வெட்டினர் ஓர் அடியார்! தம்மை வெட்டிய பகைவனை, அவன் சிவனடியார் உருவில் வந்தான் என்னும் காரணத்தால் அவனைக் காத்தற்கு வேண்டுவன செய்து, உயிரை விடுத்தார் ஓர் அடியார்! இவர்கள் செய்தவை அரும் பெருஞ் செயல்கள் பட்டினத்தார் சிவனடியார்களின் அருந்தொண்டுகளை ஆராய்ந்து பார்த்தார். அவற்றுடன் தமது சிறிய தொண்டினை அவர் ஒப்பிட்டுப் பார்த்தார். பெரியார்களின் தொண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த காலையில் அவருக்குத் தமது தொண்டு மிகச் சிறியதாகத் தோன்றியது எவ்

வாறு கடவுளுக்குத் தம்மால் அடிமையாக முடியும் என்று அவர் ஏங்கினர்.

அவர் எவ்வாறு ஏங்கினர் எனில் சிறுத்தொண்டரின் பெருந்தொண்டு அவருக்கு முதற்கண் நினைவுக்கு வந்தது. சிறுத்தொண்ட நாயனர் சிவனடியார் ஒருவருக்கு உணவூட்டத் தம் ஓரே பிள்ளையை அறுத்து, பிள்ளைக்கறி செய்தார் அன்றே. அத்தகைய துணிவு தமக்கு வருமா என்று ஏங்கினர். பிறகு திருநீலகண்ட நாயனரின் நினைவு அவருக்கு வந்தது. 'எம்மைத் தீண்டாதீர், தீண்டினல் திருநீலகண்டம்' என்று தம்மனைவியார் ஆணையிட்ட பின்னர், அவர் பெண்களையே மனத்தாலும் தீண்டாமல் காலம் கடத்தினர். அவர் அவ்வாறு இளமையில் இன்பத்தைத் துறக்கும் உறுதி தமக்கு வருமோ என்று ஏங்கினர் பட்டினத்தார். முடிவில் அவருக்குக் கண்ணப்ப நாயனரின் அருந்தொண்டு நினைவுக்கு வந்தது. இறைவனர் கண்ணில் இரத்தம் வருதலைக் கண்டவுடனே தமது கண்ணையே பெயர்த்தெடுத்து, அப்பியவர் அல்லரோ கண்ணப்பர்! அவரைப் போன்ற அன்புள்ளம் தமக்கு வருமோ என்று ஏங்கினர் பட்டினத்தார். இத்தகைய ஏக்கத்திலேயே முன்னே குறிப்பிடப்பெற்ற பாடல் பட்டினத்தாரின் வாயிலிருந்து வெளிப்பட்டது. இதிலிருந்து பட்டினத்தார், தம் அறிவின் எல்லையையும் தொண்டின் அளவையும் எவ்வளவு குறைவாக மதிப்பிட்டார் என்பது புலனுகும். சிறிது அளவு பெற்றவுடனேயே, பலரும் அறியப் பறைசாற்றித் தம்மைத் தாமே புகழும் மக்களுக்குப் பட்டினத்தாரின் இப்பண்பு நல்லறிவினை உண்டாக்கும் என்பதில் ஐயம் இல்லை.

பட்டினத்தார் பெரும் புலவர்; பேரறிஞர்; அருந்தொண்டர்; அருளாளர்; கடமை வீரர்; அவர் காட்டிய நன்னெறியைப் பின்பற்றுவோம்; அவர் கூறியுள்ள அறிவுரைகளின்படி நடப்போம். அவ்வாறு செய்தால் நாட்டில் துன்பம் நீங்கி இன்பம் பெருகும்.

---

# திருஞானசம்பந்தர் கண்ட திருடன்

புலவர் திரு. தா குருசாமி அவர்கள்.
3, சொக்கப்பநாயக்கன்தெரு
மதுரை-1

'திருடர்கள் ஜாக்கிரதை' என்று பொதுவிடங்களில் விளம்பரப்படுத்தி யிருப்பதைப் பலர் கண்டிருக்கலாம். திருடர்கள் விஞ்ஞான யுகத்தில் விஞ்ஞானரீதியாகத் தங்கள் தொழில் துறையில் முன்னேறியிருப்பதை நாம் அன்றாடம் கண்டும் கேட்டும் அறிந்து வருகின்றோம். எனினும் திருஞான சம்பந்தர் கண்ட திருடன்போல இதுவரையில் உலகம் கண்டதில்லை.

திருடர்களில் உடைமைப் பொருள்களைக் கவர்கின்ற திருடர்கள் தான் இதுவரை உலகம் கண்டிருக்கிறது. அகவுறுப்பாகிய உள்ளத்தை – அன்பைக் கவர்கின்ற திருடர்கள் இதுவரை தோன்றவில்லை. வெள்ளத்தால் அழியாது – கள்வரால் கவர ஒண்ணாதது என்று கல்வியைப்பற்றிக் கூறுவார்கள். ஆனால் அதைவிட உள்ளத்தைத் திருட யாராலும் இயலாது. இது உலகம் அறிந்த உண்மை.

புறஉறுப்புகளைத் திருடுகின்ற திருடரைவிட அகவுறுப்பைத் திருடுகின்ற திருடர் மிகவும் வல்லவராக இருக்கவேண்டும். கள்வர் தொழில் கவர்தல். இதுபற்றி நாம் திருஞான சம்பந்தர் வாக்குமூலம் கொண்டு உண்மைகாண வேண்டும். மனிதன் என்ற உணர்வை மலர்விப்பது உள்ளம். உள்ளம் மனிதவாழ்வின் ஆதாரத் தளம். இவ்வுள்ளத்தைக் கவர்தல் என்பது இலேசான செயலன்று.

மற்றத்திருடர்கள் எல்லாம் உலகத்தாரால் பழிக்கப்படுபவர் ஆவார். திருஞானசம்பந்தர் கண்ட திருடரோ உலகத்தாரால்புகழப்படுபவர் ஆவார். உடைமையைக்கவர்கின்றதிருடர்களால் உலகிற்கு நன்மை விளைவதில்லை; உள்ளத்தைத் திருடும் திருடரால் உலகிற்கு நன்மை விளைகிறது.

மனித மனம் கடவுளின் கழலையே நினைந்து விளங்க வேண்டும். கடவுளை நினையாத மனம் கவலையால் வாடுகிறது. கடவுளை நினைந்து பழக்கப்பட்ட மனம் கவலைக்கு இடம் கொடாமல் கடவுளுக்கு இடம் கொடுத்து விடுகின்றது. மனம் மாண்படைவதால் பிறந்த பிறப்பின் பெரும் பயனை எய்துகிறது.

மனம் மாண்படைதலே வாழ்வின் பயன். உள்ளம் திருந்தினால் உலகம் திருந்தும் என்ற பொன்மொழி திருஞான சம்பந்தர் கண்ட திருநெறி. அதனால் திருஞானசம்பந்தர் முதலாவதாகப் பாடிய திருப்பதிகத்தில் அடிப்படையான மனத்தைச் செழிப்படைய வழிகாட்டுகின்றார். மனம் அல்லது உள்ளம் மனித வாழ்வின் உயிர்நாடி. மனம் உடையவனே மனிதன் என்பர்.

'உயிர்நாடி' கவலை என்ற அவலத் திருடர்களால் வழி மறிக்கப்பட்டு வாழாமல் கிடக்கின்றது. இத்திருடர்களை வெளியேற்றும் பெருங் காவலராக இறைவன் விளங்குகிறார். இறைவனை உள்ளத்தால் நினைத்தால் அவர் அங்கு குடியேறி அவ்வுள்ளத்தைத் தன்வயமாக்கி வாழ்வாங்கு வாழ்விக்கின்றார்.

இவ்வுண்மை தெரியாத மாக்கள் மனம் மாண்படைய வழிதுறை நண்ணாமல், புறவளப் பொருள்களை நண்ணி மன மாசுபட்டுத் தாமும் அழிவதோடு சமுதாயத்தையும் மனமாசு பட வழிகாட்டுகின்றார்கள்.

மனம் திருடப்பட்டுவிட்டால் உலகில் தீமை நிகழ்வதற்கு இடமே இல்லை. உலகில் திருடு நடைபெறுவதற்கு அடிப் படையே மனம். மனம் திருடப்பட்டுவிட்டால் திருடு ஏது? காவல் எதற்கு? அரசு எதற்கு?

தமிழ்ப் பெருமக்கள் புறப் பொருளைக் காப்பாற்ற அரசியல் கண்டவர்களே யானாலும், அகப்பொருளைக் காப்பாற்ற வானளாவிய கோயில்களைக் கண்டதனால் சான்றோர்களால் போற்றப்படுகின்றனர். திருக்கோயில்கள் உடலுக்கும் உள்

ளத்திற்கும் புத்துணர்ச்சி தருவதுமட்டுமன்று. உள்ளத்தை அடைக்கலப்படுத்தும் சரணாலயமாகத் திருக்கோயில் விளங்குகிறது.

திருஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே உள்ளத்தைச் சிவபெருமானிடம் திருடக் கொடுத்துவிட்டார். திருடப்பட்டபின் ஏற்பட்ட அநுபவத் தொகுப்பான கருத்துக்கள் பதினொரு பாடல்களாக மலர்ந்துள்ளன. இப்பாட்டின் கருத்துக்கள் மனம் உடையவரின் மாமூலான செயல்கட்குச் சாவு மணியடிக்கின்றன.

திருஞானசம்பந்தர் கண்ட திருடர் சிவபெருமான்தான் எனினும் அவரையே நமக்குக் குருநாதராக ஆற்றுப்படுத்துகின்றார். நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற மூலமந்திரம் சான்றோருடையதாதலின் திருஞானசம்பந்தர் தமது உள்ளம் திருடப்பட்டபின்பு ஏற்பட்ட அநுபவம் நமக்குச் சிவாநுபவமாக விளங்குகிறது. ஆதலால் —

புறப் பொருளைத் திருடுகின்ற திருடர்கள் செயல்களால் குற்றம் மலையெனப் பெருகுகிறது என்பதும், அகவுறுப்பைத் திருடுகின்ற அருளாளர் செயலால் மனித உலகு மாண்படைகிறது என்பதும் அறியத்தக்கது. இனி திருஞானசம்பந்தரின் முதல் திருப்பாட்டைச் சிந்தனைக்குக் கொண்டுவருவோம்:—

**தோடுடைய செவியன் விடையேறியோர்**
**தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடிபூசியென்**
**னுள்ளங் கவர்கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்**
**தேத்த வருள்செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய**
**பெம்மா னிவனன்றே**

இத்திருப்பாட்டில் கள்வனின் — திருடனின் ஊரும், தோற்றமும் கூறப்படுகின்றன. நயமுடைய சொற்கள் பெய்யப்பட்ட இத்திருப்பாட்டில் உயிர்ப்பாக விளங்குவது '**உள்ளங் கவர் கள்வன்**' என்ற தொடராகும்.

திருடர்கள் தம் செயல் கீழானது என்று தெரிந்து புறத்தில் நல்லவர்கள்போல தோற்றமளிப்பார்கள். மேலான தோற்றத்தால் கீழான செயலை மறைக்க முயல்வர். ஆனால் கள்வராகிய சிவபெருமான் எளிய தோற்றத்திலேயே அரிய செயலைச் செய்வார். தமக்கு இயல்பாகிய தோற்றத்தையே எப்போதும் கொண்டு உயிர்களின் உள்ளத்தைக் கவர்வார். மற்றைத் திருடர்கள் செயல் இழிவு தருவதாதலின் வானுயர் தோற்றம் கொள்வர். பெருமானின் செயல் உயர்வுதருவதால் எப்பொழுதும் போலவே வருவார் என்று கூறப்பட்டது. அருமையில் எளிமை உணர்த்தப் படுகிறது இப்பாட்டில்.

திருடர்கள் பலர் தாம்வாழும் ஊரைத் தெரிவிக்கமாட்டார்; உற்றார் உறவினரை அவர்களின் சிறப்பை அறிவிக்க மாட்டார். திருடர் இருப்பிடத்தை — அவர் வாழும் ஊரைச் சொன்னாலும் பழியேயாகும். பெருமானாகிய திருடர் படைப்பவனுக்கே அருள்வழங்கித் திருப்பிரமாபுரத்தில் நிலைத்து வாழ்பவர் என்று கூறப்பட்டது.

இத்திருப்பாட்டில் உணர்த்தப்பட்ட கருத்துகள் இன்னும் அகழ்ந்து ஆராய்தற்குரியது —

திருஞானசம்பந்தரின் உள்ளத்தைக் கவர்ந்த திருடனின் ஊரும் அடையாளமும் கூறப்பட்டுவிட்டதால் திருடியவனை நாமும் அடைந்து சம்பந்தர் பெற்ற நலனை அடையவேண்டும் என்பது நோக்கம்.

கள்வனே — குருநாதர். குருநாதரால் கவர்ந்து கொள்ளப்பட்ட பின்பு உயிர்கள் சிவச்சார்பு பெறுகின்றன. சிவச்சார்பினை உண்டாக்குவதே குருவின் அலுவல். ‘தெளிவு குருவின் திருமேனி காண்டல்’ என்று திருமூலர் விளக்குவர். கள்வராகிய சிவபெருமான் சம்பந்தப் பெருமானைக் குருவாக வந்து ஆட்கொண்டார்,

அக்குருநாதரின் திருவருளை – திருவருளின் மேன்மையை திருநெறிய தமிழ் தெளிவுபடுத்துகின்றது, திருஞானசம்பந்தர் காட்டிய திருடன் நல்ல திருடன் — நமக்கு நன்மை அளிப்பவன். அத்திருடனை நாம் சிறைப்படுத்தி உள்ளத்தில் அடைப்போமாக.

# திருமுறை கண்ட சோழன்

திரு: P. திருஞானசம்பந்தம் அவர்கள்,
[கிராம அதிகாரி] செஞ்சி.

நம்பியாண்டார் நம்பியின் துணை கொண்டு தேவாரத் திருமுறைகளைத் தேடித் தொகுத்த சோழ வேந்தன் திருவாரூர்த் தியாகேசப் பெருமானைவழிபட்டு, ஆட்சிபுரிந்தவனென்றும், இராசராசன் அபய குலசேகரன் என்னும் பெயர்களையுடையவனென்றும் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. இப்புராணத்தை இயற்றியவர் சைவ சித்தாந்த சந்தானுசரியர் நால்வருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரென்பது தொன்றுதொட்டு வழங்கி வருஞ்செவி வழிச்செய்தியாகும். "ஆயமறை மொழி நம்பியாண்டார் நம்பி அருள் செய்த கலித்துறையந்தாதி தன்னைச் சேய திருமுறை கண்ட இராசராச தேவர் சிவாலய தேவர் முதலாயுள்ள ஏய கருங்கடல் புடை சூழுலகமெல்லாம் எடுத்தினிது பாராட்டிற்று என்பர் திருமுறை கண்ட புராண ஆசிரியர். எனவே திருமுறைகண்ட சோழன் இராசராசனென்னும்பெயருடையவனென்பது அந்நூலாசிரியர் கருத்தென்பது நன்கு புலனாகுகின்றது. மேலும் இராசராசன் என்னும் பெயரையுளத்துட்கொண்டு திருமுறை கண்ட சோழன் தஞ்சை இராசராசேச்சுரத் திருக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசராசனே என ஆராய்ச்சியாளர் பலர் துணிந்து கூறியுள்ளனர். முதலேழு திருமுறைகள் சோழப் பேரரசனான முதலாம் இராசராசன் காலத்துக்கு முன்னரே நம்பியாண்டார் நம்பியால் தொகுக்க பெற்றிருத்தல் வேண்டும் என்பதை ஆய்வின் மூலம் காண்போம்.

இராசராசன் என்னும் பெயருடைய சோழ மன்னர் மூவர் இருந்திருக்கிறார்கள். இம்மூவர்களேயன்றி வீர ராசேந்திரன், விக்கிரமன் முதலிய சோழ மன்னர்களும்

பாண்டியரிற் சிலரும் தம்மை இராசராசன் எனக் கூறிக் கொள்வதைக் கல்வெட்டுகளிற் காண்கின்றோம். எனவே இராசராசன் என்னும் இப்பெயர் அக்காலத்தில் ஒவ்வொருவர்க்கேயுரிய இயற் பெயராகவும் அரசர் பலர்க்கும் உரிய பொதுப் பெயராகவும் வழங்கியதெனத் தெரிகிறது. இவ்வேந்தனக்கு அபயகுலசேகரன் என்ற மற்றொரு பெயரும்வழங்கியதாகத் திருமுறை கண்ட புராணம் கூறும் அபயன் என்னும் முதற் குலோத்துங்க சோழனையும் அவனுடைய பேரன் இரண்டாங் குலோத்துங்கசோழனையும் குறித்து வழங்கியுளது, குலசேகரன் என்ற பெயர் சோழ மன்னருள் ஒருவர்க்கும் வழங்கியதாகத் தெரியவில்லை குலசேகரன் என்னும் பெயருடைய சேர மன்னரும் பாண்டிய மன்னரும் இருந்தனரென்பது கல்வெட்டுகளாலும் தமிழ் நூல்களாலும் புலனாகிறது, ஆகவே அபய குலசேகரன் என்னும் பெயர் சோழமன்னருள் ஒருவனைத் குறித்து வழங்கிய இயற்பெயரெனக் கொள்ளுதற்கில்லை திருமுறை கண்ட புராண ஆசிரியர் அம்மன்னனைக் குறித்துப் புகழ்ந்து போற்றிய புனைந்துரையாகவே அப்பெயரைக் கருத வேண்டியுளது. திருமுறை கண்ட புராணத்துள் சில பொருந்தா கூற்றுகள் உள்ளன.

நம்பியாண்டார் நம்பி இயற்றிய பத்து நூல்கள் பதினொராந் திருமுறையிற் காணப்படுகின்றன. அவற்றுள், திருத்தொண்டர் திருவந்தாதி என்பதும் ஒன்றாகும் அது சேக்கிழாரடிகள் திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் பாடுதற்கு ஆதாரமாகக் கொண்ட நூல்களுள் ஒன்று அவ்வுண்மையை.

> **அந்த மெய்ப்பதிகத் தமயார்களை**
> **நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி**
> **புந்தியாரப் புகன்ற வகைகயினல்**
> **வந்தவாறு வழாமல் இயம்புவாம்.**

என்னும் சேக்கிழார் திருவாக்கினல் நன்கறியலாம் எனவே திருத்தொண்டர் வரலாற்றை மிக சுருக்கமாகக் கூறும் வகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதி நம்பியாண்டார் நம்பியால் இயற்றப் பெற்றது. என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அந்நூல் தொகையடியார் ஒன்பதின்மர், தனியடியார் அறுபத்து

மூவர் ஆகிய எழுபத்திரண்டு சிவனடியார் வரலாற்றையும் எண்பத்தொன்பது இனிய பாடல்களிற் கூறுகின்றது தனி யடியார்களை அறுபத்து மூவர் என்று கணக்கிட்டு முதலில் உணர்த்தியவர் நம்பியேயாவர்.

இப்பெரியார் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி யில் புகழ்ச் சோழர், இடங்கழியார், கோச்செங்கட் சோழர் ஆகிய அடியார்களைப் பற்றிய பாடல்களில் தம் காலத்துச் சோழ மன்னன் ஒருவனைக் குறிப்பிட்டுள்ளார் தம்மை அன் புடன் ஆதரித்துப் போற்றி வந்த அரசர், வள்ளல் முதலா னோரின் பெயர்கள் என்றும் நின்று நிலவுமாறு அவர்களைத் தம் நூல்களிற் புகழ்ந்து போற்றுதல் நம் தமிழ் நாட்டில் முற் காலத்தில் வாழ்ந்த புலவர் பெரு மக்களின் வழக்கம் என்பது, தொன்னூலாராய்ச்சியுடையவர் யாவரும் அறிந்த தொன்றும். அத்தகைய செயல், புலவர்களின் நன்றி மறவாமையாகிய அருங் குணத்தை உணர்த்தும் எனலாம்.

சிவநெறிச் செல்வராகிய நம்பியாண்டார் நம்பியும் தம்மை அன்புடன் ஆதரித்து வந்த ஆதித்தன் என்ற சோழ மன்னன் ஒருவனைத் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந் தாதியில் மூன்று பாடல்களிற் பாராட்டியுள்ளார் அப் பாடல்கள்.

**புலமன்னிய மன்னைச் சிங்களநாடு பொடிபடுத்த**
**குலமன்னிய புகழ்க் கோகனநாதன் குலமுதலோன்**
**நலமன்னிய புகழ்ச் சோழன் தென்பர் நகுசுடர்வாள்**
**அலமன்னிய எறிபத்தனுக் கீந்ததோர் வண்புகழே. (50)**

**சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு**
**கொங்கிற் கனகமணிந்த ஆதித்தன் குலமுதலோன்**
**திங்கட் சடையர் தமரதென் செல்வமெனப் பறைபோக்**
**கெங்கட் கிறைவன் இருக்கு வேளூர்மன் இடங்கழியே. (65)**

**செம்பொன் அணிந்து சிற்றம்பலத்தை சிவலோக மெய்தி**
**நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர் நல்ல**
**வம்புமலர்த் தில்லையீசனைச் சூழமறை வளர்த்தான்**
**நிம்பநறுந் தொங்கற் கோச்செங்கணு னெனும் நித்தனையே.**

என்பனவாம், இவற்றில் அச்சோழன் கொங்கு நாட்டிலிருந்து பொன் கொணர்ந்து தில்லைசிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்

தவன் என்றும், புகழ்ச் சோழர் இடங்கழியார் கோச்செங்கட் சோழர் ஆகிய அடியார்களைத் தன் முன்னோர்களாகக் கொண்டவன் என்றும் இவ்வாசிரியர் கூறியிருப்பது உணரற்பாலதாகும் ஆகவே இப்புலவர் பெருமான் அவ்வரசன் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். இனி அவ்வேந்தன் யாவன் என்பது ஆராயற் பாலதாம்.

சோழ மன்னருள் ஆதித்தன் என்னும் பெயருடையார் இருவர் ஆவர். அவர்களுள் முதல்வன் பரகேசரி விசயாலய சோழன் புதல்வனாகிய முதல் ஆதித்த சோழன் என்பான், மற்றையோன் சுந்தர சோழன் மூத்த மகனும் முதல் இராசராச சோழன் தமையனுமாகிய இரண்டாம் ஆதித்த சோழனவன். இவனை ஆதித்த கரிகாலன் என்றும் அந்நாளில் வழங்கியுள்ளனர். இவன் தன் தந்தையின் ஆட்சியில் இளவரசனாக இருந்த நாட்களில் சில அரசாங்க அலுவலாளர்களாற் கொல்லப்பட்டு போனான் என்பது தென்னார்க்காடுமாவட்டம் சிதம்பரம் தாலுக்காவிலுள்ள உடையார்குடியிற் காணப்படும் ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. எனவே இளவரசனாகிய இவன் இளமை பருவத்திற் கொலையுண்டிறந்தமை தெளிவாம். அகவே இவன் சிற்றம்பலத்தை பொன்வேய்ந்து சிவலோக மெய்தினான் என்று கூறுவதற்குச் சிறிதும் இடமில்லை. இந்நிலையில் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்ததாக நம்பி குறிப்பிட்ட ஆதித்தன் என்பான். விசயாலய சோழன் புதல்வனும் முதற் பராந்தக சோழன் தந்தையும் கி. பி. 870 முதல் 907 வரையில் சோழ மண்டலத்தை ஆட்சி புரிந்த பெரு வேந்தனுமாகிய முதல் ஆதித்த சோழனேயாவன். இவன் பல்லவ அரசனாகிய அபராசிதவர்மனைப் போரில் வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய காரணம் பற்றித் தொண்டை நாடு பரவின. சோழன் பல்யானைக் கோக் கண்டனாயின ராசகேசரி வர்மன் என்று வழங்கப் பெற்றுள்ளான். இவன் ஆட்சியிலேதான் சோழ நாடு உயர்நிலையை எய்தியது. இவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றித் தலைக்காடு என்ற நகரையும் பிடித்துக் கொண்டான் என்று 'கொங்கு தேசராசக்காள்' என்னும் வரலாற்று நூல் கூறுகின்றது, ஆகவே கொங்குநாட்டைக் கைப்பற்றிய இம்மன்னர் பிரான்.

அந்நாட்டிலிருந்து பொன் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்திருத்தல் வேண்டும் என்பது நன்கு துணியப்படும். இவன் காவிரியாற்றின் இருமருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக அமைத்த சிவபக்தன் என்று அன்பிற் செப்பேடுகள் கூறுவது ஈண்டு அறியத்தக்கது.

ஆதித்தன் புதல்வன் முதற்பராந்தக சோழன் முதற் குலோத்துங்க சோழன் தங்கை குந்தவை அவன் மகன் விக்கிரம சோழன், இராண்டாங் குலோத்துங்க சோழன் போன்ற சோழ அரசர் காலத்தில் தில்லைச்சிற்றம்பலம் பன் முறை பொன்வேயப் பெற்றிருத்தலை கல்வெட்டுகளும் ஆனை மங்களை செப்பேடுகளும் உணர்த்துகின்றது. இவற்றைக் கூர்ந்து நோக்குமிடத்து சோழ மன்னர் ஆட்சிக் காலங்களில் தில்லைசிற்றம்பலம் பன்முறை பொன் வேயப்பட்டது. ஆனல் அதனை முதலில் பொன் வேய்ந்த சோழ மன்னன் முதலாம் ஆதித்தனேயாவன் என்பது நம்பியாண்டார் நம்பியின் திருவாக்கினுல் வெளியாகின்றது. இப்பெரியார் தம் காலத்தில் இவ்வேந்தன் அவ்வரும் பணியாற்றிய காரணம்பற்றி அச் செயலைத் தம் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாராட்டியுள்ளனர் என்பது தெள்ளியது. இவர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திருநாரையூரிலிருந்தவராதலின் இவ்வரசன் தில்லையிற் புரிந்த அத்திருத் தொண்டில் தாம் நேரிற் கலந்து கொண்டு அதனை அறிந்திருத்தல் இயல்பேயாம்.

இனி ஆதித்தன் சிங்களநாடு வென்ற செய்தியொன்று நம்பியால் திருத்தொண்டர்திருவந்தாதியிற் கூறப்பட்டுள்ளது அதனை உறுதிப்படுத்தக் கூடிய வேறு சான்றுகள் இந்நாளிற் கிடைக்கவில்லை. சோழர் பேரரசை நிறுவும் பொருட்டு வடக்கும் மேற்கும் படையெடுத்துச் சென்று முறையே தொண்டை மண்டலத்தையும் கொங்கு மண்டலத்தையும் கைப்பற்றித் தன் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்த இம் மன்னர்பிரான் தென்கிழக்கேயுள்ள சிங்கள நாடாகிய ஈழ மண்டலத்தின் மேலும் படையெடுத்துச் சென்றிருத்தல் கூடும் இவன் புதல்வன் முதற்பராந்தக சோழன் அந்நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றினுன்

என்பது, அவன் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. எனவே ஆதித்த சோழன் முதலில் தொடங்கிய அச்செயலை அவன் புதல்வன் தன் ஆட்சியில் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நம்பியாண்டார்நம்பி முதலாம் இராசராசசோழனைத் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியிற் குறிப்பிடாமை யொன்றே இவர் அவ்வேந்தன் காலத்தவரல்லர் என்பதை நன்கு புலப்படுத்துவதாகும். இந்நிலையில் திருமுறை கண்ட புராணத்தில் தெளிவின்றியமைந்துள்ள இராசராச அபய குல சேகரன் என்ற தொடர். முதல் இராசராச சோழனைக் குறிக்குமென்று கருதுவது பொருத்தமுடையதாகத் தோன்ற வில்லை. அன்றியும், முதல் இராசராச சோழன் என்பான் நம்பியின் துணைக் கொண்டு சமய குரவர் மூவர் திருப்பதிகங் களையும் தேடிக் கண்டனன் என்னுங் கொள்கைக்குமுரணாகும். அவ்வேந்தனுடைய முன்னோர்களான முதல் ஆதித்தன், முதற் பராந்தகன் உத்தம சோழன், ஆகிய சோழ மன்னர் களின் ஆட்சிக் காலங்களிற் கோவில்களில் மூவருடைய பதிகங்களையும் நாள்தோறும் பாடுவதற்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றுள்ளன.

இவ்வுண்மையை அவர்களுடைய ஆட்சியிற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகளால் நன்கறியலாம். முதல் ஆதித்த சோழனாட்சியில் கி. பி. 873ல் திருஎறும்பியூரிலும் கி. பி. 876ல் பழுவூரிலும், முதற் பராந்தக சோழனாட்சியில் கி. பி. 910ல் திருவாவடுதுறையிலும் கி. பி. 911ல் அல்லூரிலும் கி.பி, 944ல் திருத்தவத்துறையிலும், உத்தம சோழனாட்சியில் கி. பி. 977ல் கோனேரிராசபுரம் என்னும் திருநல்லத்திலும் கி.பி.984ல் அந்துவநல்லூரிலும் திருப்பதிகங்கள் பாடுவதற்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் முதற் இராசராச சோழனாட்சிக்கு முன்னர் நிகழ்ந்தவையாகும் எனவே அம்மன்னனது ஆட்சி காலத்திற்குப் பல ஆண்டு கட்கு முன்பே சமய குரவர் மூவருடைய திருப்பதிகங்களும் கோயில்களிற் பாடப் பெற்று வழக்கிலிருந்து வந்தன என்பது வெளிப்படை. ஆகவே நம்பியாண்டார் நம்பியின் துணைக்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# இரண்டு காட்சிகள்

**திரு அரங்க: முத்துமணி அவர்கள்**
துணைப் பதிவாளர்
அரியலூர் — (திருச்சி மாவட்டம்)

உடம்பு வளம்பெற உணவு வேண்டும். உள்ளம் வகையுற பக்தி வேண்டும். உடம்பும் — உள்ளமும் ஒருங்கே மகிழ்ச்சியும், இன்பமும் பெறவேண்டு மென்றால், இலக்கியம் வேண்டும்.

இலக்கிய மென்றால் என்ன?

''உயர்ந்த எண்ணங்களை, உயர்ந்த முறையில் எழுத்து வடிவில் தருவது இலக்கியம்'' என்பர் அறிஞர். அம்முறையில் பார்க்கும்போது, வாழ்வின் குறிக்கோள், உயர்ந்த எண்ணங்களை எண்ணுவதும், சிறந்த முறையில் எழுதப்பட்ட, இலக்கியங்களைப் பல்காலும் படித்துச் சுவைத்து அனுபவித்தலுமாம்.

ஒரு, வண்ணக் காட்சியைக் காண்கிறோம். எண்ணத்தில் ஒரு மாறுதல் பிறக்கிறது. மனத்தில், மகிழ்ச்சி வெள்ள

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு திருமுறைகண்டவன் முதலாம் இராசராசன் என்று கூறுவது ஏற்புடைத்தன்றாம்.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் நம்பியாண்டார் நம்பி முதல் இராசராச சோழன் காலத்தில் இருந்தவரல்லரென்பதும், முதல் ஆதித்த சோழன் ஆட்சிக் காலத்திலும் அவன் புதல்வன் முதற் பராந்தக சோழனாட்சியில் முற்பகுதியிலும் இருந்தவர் என்பதும் நன்கு விளங்குதல் காண்க. எனவே இப்புலவர் பெருமான் கி. பி. 9ம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் நம் தமிழகத்தில் வாழ்ந்தவர் என்பது ஆராய்ச்சி பேரறிஞர் திரு, T V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் ஆராய்ந்து கண்ட முடிபாகும்.

– திருச்சிற்றம்பலம் –

மெனத் துள்ளிப்பாய்கிறது. அஃதை அனுபவிப்பதோடு நின்றுவிடுகிறோம்.

ஆனல், சிறந்த புலவர்கள் — அருளாளர்கள், தாம் கண்ட, அழகிய காட்சியினை வண்ணச் சித்திரமாக — இலக்கிய ஓவியங்களாகப் படம் பிடித்துக்காட்டி விடுகின்றனர் தம்முடைய கவிதைகள் மூலம்.

அவற்றைப் படித்துப் பார்க்கின்ற நமது உள்ளம், அவற்றிலேயே தோய்ந்து தோய்ந்து பல்காலும் இன்பத்தை எய்துகிறது.

இரண்டு காட்சிகளைப் பார்ப்போம்!

மாலை நேரம்! தாமரைபூத்த தடாகங்களிலே நாள்முழுதும் விளையாடிய அன்னப் பறவைகள். மாலை நேரம் வந்ததால் தாமரை மலர்கள் இதழ்களைச் சுருக்கிக்கொண்டு குவிகின்றன. நாள் முழுதும் விளையாடிய காரணத்தால், அயர்ந்து அத்தாமரை மலரிலேயே பெடை அன்னம் தங்கிவிடுகிறது. மங்கிவரும் மாலை. மயக்கத்திலிருந்த பெடையைத் தாமரை இதழ்கள் மூடிவைத்துக் கொள்ளுகின்றன.

அன்னச் சேவலோ, தன் பெடையின்றி, இரவில் தனித்திருக்காது. எனவே, மூடிக்கொண்ட தாமரையின் இதழ்களைக் கிழித்து, தன் பெண் அன்னத்தைக் கூட்டிக்கொண்டு அருகில் ஓங்கிவளர்ந்திருந்த தென்னையில் தங்கி, புன்னகை செய்ததாம் ஆண் பறவை.

மாத் ததமிழ்ப்புலவர், சீத்தலைச் சாத்தனர், மணிமேகலையெனும் மாண்புறு காவியத்தில் இப்படியொரு மாலைக்காட்சியை, வண்ணச் சித்திரமாக்கிக் காட்டுகிறுர்.

**''அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய**
**தன்உறு பெடையைத் தாமரை அடக்கப்**
**பூம்பொதி சிதையக் கிழிதது்ப் பெடைகொண**
**டோங்கிருந் தெங்கின் உயல்மடல் ஏற........''**

மாலைக்காட்சி, மனத்தைக் கவர்ந்திடும். இன்னெரு காட்சியைத் தக்கார் புகழும் நக்கீரர் வாயிலாய் நாம் சுவை மடுப்போம்.

முருகப்பெருமான், விருப்புடனமர்ந்த திருப்பரங்குன்றம்.

கரிய சேற்றினைய அகன்ற வயல்கள். வயல்களின் ஓரத்திலே தேங்கியிருக்கும் தண்ணீரில், அழகிய தாமரை மலர்கள்: மலர்களின் இதழ்களில் கொள்ளையழகு. கொட்டும் தேன்- தேனை நாடி வண்டினங்கள். தேனையுண்டு மலர்களிலே மயங்கிக் கிடக்கின்றன.

மாலை வந்துவிடுகிறது. இதழ்கள் குவிகின்றன. வண்டுகள் தாமரை மலர்க்குள், பாதுகாப்பாகத் தங்கியிருக்கின்றன. மலர்ப்படுக்கை, சுகத்திற்குக் கேட்க வேண்டுமா?

இரவில், அவைகட்குத் துன்பம் செய்ய எதிரிகள் வந்தால் ...... தண்டினைப்பிடித்து, மண்டூகங்கள் ஆட்டி, இன்னல் விளைத்தால் ......

முட்கள் இருக்கின்றனவாம் தாமரைத் தண்டில் அவை பார்த்துக்கொள்ளும்.

வைகறை! கதிரவன் எழுகின்றான். மலர்கள் இதழ் விரிக்கின்றன. வண்டுகள் வெளிவருகின்றன. நெய்தல் தேனை உறிஞ்சுகின்றன. சுறுசுறுப்பு வந்துவிட்டது. மலைச் சுனையிலே கண்போல், சிறிய மலர்கள் மலர்ந்து மணம்வீசி, தேனைத் தயாராக வைத்துக்கொண்டிருக்கின்றன. வண்டுகளுக்குக் கொண்டாட்டம். கேட்க வேண்டுமா? பாடிப் பறந்து நாடிச் செல்கின்றன அம்மலர்களை நோக்கி ...... இனிக் காட்சியைக் காண்போம்! நக்கீரர் காட்டும் நயமிகு சொற்களால்......

**''இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த**
**முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்**
**கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்**
**கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்**
**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் ......''**

— *திருமுருகாற்றுப் படை.* **(72—76)**

[சிவ சிவ

# 'சொர்க்கங்கள் பொருளலவே'

திரு ந முத்துக்குமார சுவாமி அவர்கள், எப. ஏ., பி. எல்.

சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரி,

பேரூர், கோவை-10

'வம்பரு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணு எம்பிரான் சம்பந்தன்' தம் திருச்சாய்காட்டுத் திருப்பதிகத்தில் இறைவன் அடியவர்கட்குச் சொர்க்கம் முதலாய பதவிகள் ஒரு பொருட்டல்ல என எடுத்தோதுகின்றார். அத்திருப்பாடல்

**''மங்குல்தோய் மணிமாட மதிதவழும் நெடுவீதிச்**
**சங்கெலாம் கரைபொருது திரைபுலம்புஞ் சாய்க்காட்டான்**
**கொங்குலா வரிவண்டின் இசைபாடு மலர்க்கொன்றைத்**
**தொங்கலான் அடியார்க்குச் சொர்க்கங்கள் பொருளலவே''**

இத்திருப்பாடலின் கருத்து:—

'வானத்தை முட்டுகின்ற, மணிகள் பதித்த மாடங்களின் மேல் மதியம் தவழ்கின்ற நீண்ட தெருக்களை யுடையதும், சங்குகளெல்லாம் அலைகளால் கரைக்கண் மோதப்பட்டுப் புலம்புகின்றதுமாகிய திருச்சாய்க்காட்டிலே எழுந்தருளியிருக்கின்றவனும், தேன் ததும்புகின்றதும் வண்டுகள் இனிய இசையைப் பாடுகின்றதுமாகிய கொன்றை மலர்மாலையை அணிந்துள்ளவனும் ஆகிய சிவபெருமானுடைய அடியார்களுக்கு விண்ணிலுள்ள பதவிகள் ஒரு பொருட்டல்ல' என்பதாம்.

சங்குகள் பலவிதம். இப்பி, இடம்புரி, வலம்புரி, பாஞ்சசன்னியம் முதலியவனைத்தையும் குறிக்க சங்கெலாம் என்றார். சங்குகள் கடற்றிரையால் ஏற்றி மோதப்பெற்றன. மோதப்பெற்றார் புலம்புதல் போலப் புலம்பின, புலம்பியவர் தக்காரை அடைந்து அல்லல் தீர்ந்து மகிழ்தல் போலப் புலம்பிய சங்குகளும் கரையை அடைந்து துன்பம் நீங்கி முத்துக்களை ஈன்றன,

பிறவிக்கடலில் துன்பத் திரைகளால் மொத்துண்டு வருந்துவோர், அது நீங்கச் சாய்க்காட்டினை அடைந்து இறைவன் தாள்களிற் சரண்புகுந்து அமைதிபெறுவர் என்பது உள்ளுறை.

இறைவன் 'தம்மைப்போல் தம் அடியார்க்கு இன்பமளிப்பவன்'. அவனும் குறைவிலா இன்புடையவன். தன்னைப் பாடுகின்ற அடியவர்களுக்கும் இன்பமளிக்கும் சிவமணங் கமழ்பவன் என்பது 'கொங்குலா வரிவண்டினிசை பாடு மலர்க் கொன்றைத் தொங்கலான்' எனும் அடியால் புலனுகின்றது. கொன்றைத் தொங்கலை அணிந்தவன் சிவபெருமான். அதை அணிந்து தான் மகிழ்வதோடு அதன்கணுள்ள தேனை உண்ணும்படி வண்டுக்கும் அருளுகின்ருன். தேன் (கொங்கு) உண்டு களித்த வண்டுகள் இன்னிசை பாடுகின்றன. வண்டுகளாகிய அடியவர் 'அவனருளாலே அவன்ருள் பணியும்' பக்தியாகிய தேனினை உண்டுகளித்து அவன் திருப்புகழைப் பண்ணுரின்றமிழி லிசைத்து மகிழ்கின்றனர்.

பெருதற்கரிய பெரும் பதவியை அடைந்த ஒருவன் அதைக்காட்டிலும் தாழ்ந்த நிலைகளை விரும்புதல் இல்லை, பேரின்பத்தைப் பெற்றவன் சிற்றின்பங்களை நாடுதல் இல்லை. ஈசன் எந்தை இணையடி நீழலாகிய பேரின்பத்தைத் துய்த்துப் பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும் அடியவர்கட்கு அமரரிருக்கையாகிய சொர்க்க வாழ்வும் அங்குத் துய்க்கும் போகங்களும் இந்திரன், குபேரன், திருமால் முதலான தேவபதவிகளாகிய அண்டர் வாழ்வும் துரும்பென, வேம்பென ஒதுக்கப்பெறும்.

> **''அண்டர் வாழ்வும் அமரரி ருக்கையும்**
> **கண்டு வீற்றிருக குங்கருத் தொன றிலோம்**
> **வண்டு சேர்மயி லாடு துறையரன்**
> **தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே''**
>
> — என்ருர் அப்பரடிகளும்.

சொர்க்க பதங்கள் மண்ணுலகத்து இன்பங்கள் போலவே நிலையற்ற ஐம்புல இன்பங்களையே தருவன. அவற்றை நுகருந்தொறும், ஈட்டிய புண்ணியம் குறைந்துகொண்டேவரும்.

மீண்டும் இம்மண்ணுலகத்தில் பிறக்க நேரிடும். ஓைமம் போகபூமியில் போகந்துய்க்க உடலும் உண்டு. உடலை உடற்றும் பிணியும் உண்டு. அதனுல் விளையும் துன்பமும் உண்டு. தீய அசுரர் பகையும் உண்டு புண்ணியஞ்செய வழியே இல்லை. 'புவனியிற் போய்ப் பிறவாமையின் நாள்நாம் போக்குகின்ருேம்அவ மேஇந்தப் பூமி' எனத் திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும் உயர்நிலையிலே உள்ளது இப்புவனி. எனவே ஈண்டுள்ளோர் அடுத்துப் பெறத்தக்கது வீடேயன்றி சொர்க்கங்கள் அல. ஆதலால் அரன் அடியார் அவற்றைப் பொருட்டாக மதித்தல் இல்லை. ஐம்புலங் கடந்ததும், நிலையானதும், பிறவிப் பெருங்கடலினின்று கரையேற்றுவதும், மற்றீண்டு வாரா நெறியை அருள்வதுமாகிய சிவனடிப் பேற்றையே மதிப்பர்.

> 'கொள்ளேன் புரந்தரன மாலயன் வாழ்வு குடிகெடினும்
> நள்ளேன நினதடி யாரொடலலால் நரகம புகினும்
> எளளேன திருவருளாளே இருக்கப் பெறின் இறைவா
> உள்ளேன பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே'
> ''போகம் வேணடி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்
> ஏக, நின்கழ லிணையலா திலேன என எம்பிரான''
> 'வானேயும் பெறில வேண்டேன மணணுள்வான மதித்துமிரேன்'

எனும் மணிவாசகங்களை ஒப்பு நோக்குக.

இறைவன் அடியவர் அவனில் தாழ்ந்த எதனையும் ஒரு பொருளாக மதிப்பாரல்லர் என்பது. "A Soul that loves God, despires all that which is inferior to God" (Initation is Christ II–5–3) என்ற கிறித்துவப் பெரியார் ஒருவர் வாக்காலும் பெறலாம்.

அரன் அடியவர்க்குச் சொர்க்கங்கள் பொருளல' என்றதால் நரகங்களும் பொருளல என்பதும் பெறப்படுகின்றது. 'நரகம் புகினும் எள்ளேன் நினது திருவருளாலே இருக்கப் பெறின் இறைவர் என்ற அடிகள் வாக்கினை ஓர்க. மண்ணுலகானுலும், விண்ணுலகானுலும், நரகமானுலும், அனைத்தும் இறைவன் அருளோடு கூடியிருக்கப் பெறின், அடியவர்க்கு ஒன்றே.

அரனடியார் உள்ளம், அவனையன்றி வெறெதனையும் சிந்தியாது.

> ''நிறையும் புனல்சடை மேலுடை யடிகள் நின்றி யூரில்
> உறையும் இறை யல்லதென துள்ளம் உணராதே''
>
> — சம்பந்தர் தேவாரம்

உள்ளம் இறையல்லது வேறெதனையும் உணராது ஆதலால் சொர்க்கம்பற்றிய வேட்கையும் இல்லை, நரகம் பற்றிய வெறுப்பும் அச்சமும் இல்லை. 'நெஞ்சார நீடு நினைவார்', நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாதொரு போது மிருந்தறியேன்' என்ற திருவாக்கால், அடியவர் பிற வற்றிற் கிடனின்றி திருவடியே சிந்திப்பர் என்பதனை வலியுறுத்தும்.

இரேபியா எனும் இசுலாமிய பெண் அடியாரிடம் ஒருவர் ''அம்மையீர்! தாங்கள் இறைவனை நேசிக்கின்றீர்களா'' என்று கேட்டார். அதற்கு அவர் 'ஆம்' என்றார், ஆயின் 'சாத் தானை வெறுக்கின்றீர்களோ' என வினவியதற்குக்'' கடவுள் பால் எனக்குள்ள காதல் அவனையன்றிப் பிறரை வெறுப் பதற்கும் என் நெஞ்சில் இடம் இல்லாமல் முழுதும் தானே கொண்டிருக்கின்றது''* என்று கூறினாராம். (Essentials & Saintliness – by Dr. T. M. P Mahadevan – Bhavan's Journal Vol. VIII, No. 8, page 21). இக்கூற்றால் அடி யவர் ஊடுவதும், உவப்பதுவும் தேடியாண்ட இறைவனிடமே யன்றி வேறெவரிடமும் அன்று, எனவே அவர்க்குச் சொர்க் கங்கள் பொருளல என்பது ஊன்றி நினைக்கற்பாலது.

---

* ''Oh! My Lord, if I worship Thee for fear of hell burn me in hell, and if I worship Thee for hopeis Paradise, exclude me thence, but if I worship thee for Thy own sake, with hold not fam me Thine Eternal Beauty.''

— St. Rabia,

# ஆன்ருேர் காட்டும் அறநெறி

வித்துவான் திரு. கோவிந்தசாமி அவர்கள்
தமிழாசிரியர் திருமுக்கூடல் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்

ஆதவன் மறையும் நேரம், எங்கும் இருள் தன் ஆட்சியைச் செலுத்த முற்பட்டது. தன் இல்லத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அருளப்பன் ஏதோ சிந்தனையிலும் ஆழ்ந்திருந்தான். தன் மீது ஊரினர் மட்டுமன்றி உற்ருர், பெற்ருேர், தனக்கு வாய்த்த இல்லத் துணைவி தன் மக்கள் அனைவரும் அன்பு பாராட்டித் தனக்காக எத்தகைய செயலையும் செய்யத் தயாராக இருப்பதை எண்ணி அவனுள்ளம் பெருமிதமடைந்தது. விரைவாக நடந்து கொண்டிருந்த அவன் தன்னை யாரோ அழைக்கும் குரல் கேட்டுச் சிறிது நின்ருன். எதிரே...... அருளொளிமிக்க முனிவர் ஒருவர்வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அருளப்பனுடைய கைகள் தாளுகவே குவிந்து வணங்கின. இவர் வேடதாரி அல்ல இறைவரே இத்தகைய உருவில் வந்தனரோ என அவனுடைய உள்ளம் கூறியது.

அன்பனே......என்ற குரல் கேட்டு அவரை நோக்கினுன்.

ஐயனே......தங்களைக் காணும் போது முப்புரம் எரித்த விரிசடைக் கடவுளான முக்கண்ணனைக் காண்பது போல் இருக்கிறது. எதிர்பாராமல் தங்களைக் கண்டதும், தங்கள்பால் ஏற்பட்ட அன்பால் பேசுவதற்கும் நாஎழவில்லை. தங்களைப் பற்றி நான் அறியலாமா?

அன்புள்ளங் கொண்டவனே.........இந்த ஞாலத்தில் பிறந்து... உழலும் மாந்தர்களில் யானும் ஒருவன். இக்காட்டு

வழியே செல்லும் உன்னைப்பற்றி அறியவிழைந்தேன், அதனால் அழைத்தேன்.

என்னைப் பற்றியா............

ஆமாம், உன்னைப் பற்றித்தான்.........

அடியேன் ஆழியூரில் வாழ்பவன். என் பெற்றோர்களுக்கு நான் ஒரே மகன். அப்பெற்றோர்களும், ஊரினரும், உற்றாரும், மற்றோரும், எனது துணைவியும், என்னுடைய மக்களும் என்னை உயிருக்குயிராக நேசிக்கின்றார்கள். எனக்கு ஏதேனும் துன்பமெனின் தம் உயிரையும் தரச் சித்தமாயிருக்கிறார்கள். எனக்குக் குறையென்பதே இல்லை. மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.

உனக்குத் துன்பம் ஏற்படின் உயிரையும் தருவார்கள் என்றாயே உண்மையில் தருவார்கள் என நம்புகிறாயா......

நிச்சயம் நம்புகிறேன்.

அவ்விதம் நம்பிவிடாதே.

நீங்கள் சொல்வது............

உண்மையேயன்றி வேறில்லை.

தங்கள் கூற்றை என் மனம் ஏற்கவில்லை, அளவிலா அன்பு பாராட்டும் என் பெற்றோரையும், உறவினர்களையும், துணைவியையும், மக்களையும் நம்பாமலிருக்க என்னாலியலாது. அவர்கள் எனக்குத் துன்பமெனின் அதனைப் போக்க உடனே முன் வருவர்.

உனக்காகப் பரிதாபப்படுகிறேன், நான் சொல்வதுபோல் செய்தால்-உன்மீது அன்பு பாராட்டுபவர்களின் தன்மையை நீ அறிந்து கொள்ளலாம்.

என்ன செய்ய வேண்டும்.

நீ உன் இல்லம் சென்றவுடனே அனைவரையும்அழைத்து இன்னும் ஒருமணி நேரத்தில் என் உயிர் உடலைவிட்டு பிரியப் போகிறது. அவ்விதம் பிரியாமலிருக்க வேண்டுமாயின் யாராவது ஒருவர் தம் காதை அறுத்து என்னிடம் வேண்டுமென்று கேள் தருகிறார்களா என்று பார். அவர்கள் உன்மீது கொண்டுள்ள அன்பை இதன் மூலம் அறியலாம் என்றார்.

எனக்காக உயிரையும் தருவதாகக் கூறியிருப்பவர்கள் தம் காதைத் தரவா மறுப்பார்கள், நிச்சயம் தருவார்கள்.

சரி......முயன்றுபார் பிறகு இங்கு வா, நீவரும் வரையில் உனக்காக நான் இங்கேயே காத்திருப்பேன்.

முனிவரை வணங்கி விட்டுத் தன் இல்லம் சென்ற அருளப்பன் தனதறைக்குள் நுழைந்து படுக்கையில் படுத்தான் முதலில் தன் தாய் தந்தையரை அழைத்தான். தான் நெஞ்சு வலியால் துன்புறுவது போல் சிறிது நேரம் நடித்த அவன். தன் பெற்றோரை நோக்கி, என்னை ஈன்றவர்களே எனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. நான் இன்னும் ஒரு மணி நேரம் தான் இவ்வுலகில் இருப்பேன். என் உயிர் போகாமலிருக்க வேண்டுமாயின் உங்களில் யாராவது ஒருவர் தம் காதை அறுத்து என்னிடம் தரவேண்டும் என்றான்.

அவன் கூறியதைக் கேட்டு முகம் சுளித்த அவனுடைய பெற்றோர் இருவரும் அருளப்பா உனக்குக் காது வேண்டுமெனில் உன்மீது உயிரையே வைத்திருக்கும் உன்னுடைய பாட்டியைக் கேள். அவர்கள் தருவார்கள் எனக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினர்,

அருளப்பன் தன் பாட்டியை அழைத்து பாட்டி நான் நெஞ்சுவலியால் துடித்துக் கொண்டிருக்கிறேன். என் உயிர் உடலை விட்டுப் போய்விடும் போலுள்ளது, எனது உயிர் போகாமலிருக்க உங்கள் காதை அறுத்து தரவேண்டும் தருவீர்களா என்றான்.

என்ன என் காதையா கேட்டாய் அருளப்பா சாகப் போகிறவள் தானே என்று என் காதை அறுத்து மூளியாக்க எண்ணினுபா? அதெல்லாம் முடியாது. நான் தரமாட்டேன், என்று கூறிவிட்டு விரைவாக வெளியே சென்றாள் அவனுடைய பாட்டி.

தன் உயிருக்குயிரான துணைவியை அழைத்துக் கேட்டான். அவள் உங்களுக்கு ஏதோ பித்தம்தான் பிடித்திருக்கிறது. காதை அறுத்துத் தருவது எளிதான செயல் என எண்ணிவிட்டீர்களா? என் அழகான காதை அறுத்துத்தருவே

னென்று கனவிலும் கருதாதீர்கள். எனக் கூறிவிட்டு அங் கிருந்து சென்று விட்டாள். அருளப்பன் தன்மீது அன்பு கொண்ட அனைவரையும் அழைத்துக் கேட்டான். காதை அறுத்துத்தர எவரும் இசையவில்லை, அப்போதுதான்முனிவர் கூறியவற்றிலிருந்த உண்மையை அவனால் உணர முடிந்தது.

தான் இதுவரை நம்பிவந்தவர்கள் அனைவரும் உள் ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களேயன்றி உண்மையில் தன்மீது அன்புடையவர்களல்ல. அன்பு கொண் டவர்கள் போன்று நடிப்பவர்கள் முனிவர் கூறியதுதான் சரி. என எண்ணித் தன் இல்லத்தை விட்டு வெளியேறி முனிவர் இருந்த இடத்தை அடைந்தான்.

அவனை எதிர்கொண்டழைத்த முனிவர் அன்பனே யாராவது உனக்குத் தம் காதை அறுத்துக் கொடுத்தார்களா? உன்மீது உண்மை அன்பு கொண்டவர்கள் எவராவது இருக்கிறார்களா என்றார்.

இல்லை ஒருவரும் இல்லை, காதை அறுத்துத்தர மறுத்து விட்டனர். கானல் நீரை நீரென்று எண்ணி ஏமாறும் மான் போன்று பொய்யான வாழ்வை மெய்யென்று எண்ணி வாழ்ந்து விட்டேன். எனக்கு உணர்த்திவிட்டீர்கள்.

அன்பனே உற்றார், உறவினர், பெற்றோர், பெண்டிர், பிள்ளைகள், செல்வம் மற்ற எதுவுஞ் சதமல்ல. கச்சிஏகம்ப நாதருடைய திருவடிகள்தான் நமக்குச் சதமாகும்.

**''ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற**
**பேருஞ் சதமல்ல; பெண்டீர் சதமல்ல; பிள்ளைகளுஞ்**
**சீருஞ் சதமல்ல; செல்வஞ் சதமல்ல; தேசத்திலே**
**யாருஞ் சதமல்ல; நின்தாள் சதம்கச்சி ஏகம்பனே''**

என்றார்.

அருளப்பன் இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொண்டான். முனிவரின் சீடனாக அவரைப் பின் தொடர்ந்து சென்றான். அவர் நெறியே தனக்கேற்ற நெறி எனக்கருதினான்.

வாழ்வின் உண்மையை உணர்ந்தமையால் அருளப்பன் துறவியாக மாறினான். அவன் அவ்வாறு மாறியதில் வியப்பேது

மில்லை. செல்வமும் வாழ்வும் வீடு வரையில்தான். மாந்தர் மடிந்துவிடின் பெண்டிர் வீதி வரையே வருவர். மைந்தர் சுடுகாடு வரை வருவர். மேற்கொண்டு வருபவர்கள் எவரு மிலர். அவனைத் தொடர்ந்து வருவது அவனுடைய பாவ புண்ணியங்களேயாகும்.

**''அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே! விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே; விம்மிவிம்மி இரு
கைத்தலம் மேல்வைத்து அழும்மைந்தரும் சுடுகாடு மட்டே!
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!''**

மாந்தன் தன் நிலைக்காக அழுதாலும். நொந்தாலும், தொழு தாலும் பிறர் தன் உள்ளம் புண்படுமாறு பேசிவிட்டார்களே எனக்கூறினாலும் அதனால் பயனேதுமில்லை. இறைவர்எழுதிய படியே எல்லாம் நடைபெறும், மனமே சலியாதே.

**''அழுதால் பயனென்ன? நொந்தால் பயனென்ன? ஆவதில்லை
தொழுதால் பயனென்ன? நின்னை ஒருவர் சுடவுரைத்த
பழுதால் பயனென்ன? நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவருமோ? சலியாதுஇரு என்ஏழை நெஞ்சே!''**

மாந்தரிற் சிலர் ஓயாமல் பொய் சொல்வர். சான்றோரைத் தூற்றுவர், தன்னை ஈன்ற அன்னையை வைவர். வஞ்சனைச் செயல்கள் ஆயிரம் செய்வர், தமை அண்டினவர்க்கு ஏதும் கொடார் இத்தன்மையோர் இருந்தென்ன? இறந்தென்ன? எல்லாம் ஒன்றுதான், அவர்களால் எவ்வித பயனுமில்லை.

**''ஓயாமல் பொய்சொல்வர்: நல்லோரை நிந்திப்பர்; உற்றுப் பெற்ற
தாயாரை வைவர்; சதிஆயிரஞ் செய்வர்; சாத்திரங்கள்
ஆயார்; பிறர்க்குபகாரஞ் செய்யார்; தமைஅண்டினர்க் கொன்று
ஈயார் இருந்தென்ன போயென்ன? காண்கச்சி ஏகம்பனே!''**

இயமன் வந்து நம்மைப்பற்றுவதற்கு முன்பும், கண்பஞ்சடை வதற்கு முன்பும், கடைவாய்ப் பற்கள் விழுமுன்பும்; உற்றோர் தம்மேல் விழுந்து அழுமுன்பும், ஊரிலுள்ளோர் ஒன்று சேர்ந்து தன்னை சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று எரிக்கு முன்பும் குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழி படுதல் வேண்டும்.

**''காலன் வருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே – மேல்விழுந்தே**

**உற்ருர் அழுமுன்னே ஊரார்சுடு முன்னே**
**குற்ருலத் தானையே கூறு''**

பிற உயிர்களைக் கொல்வதை விரும்பாமலும் தானும் கொல்லாமலும், பிணியால் துன்புறுகின்றவர்க்கு மருந்து முதலியன உதவி அப்பிணியை நீக்கியும், அறியாமையில் மயங்காமல் சான்றோர்களின் சிறந்த நூல்களை ஆராய்ந்து அதற்குத் தக ஒழுகியும் வாழும் இயல்புடைய ஒருவனை நட்பாகக் கொள்பவரையும் அக்குணங்கள் அனைத்தும் பொருந்தி அவரை மேம்படுத்தும்.

**''உடன்படான் கொல்லான் உடன்ருர் நோய் தீர்த்து**
**மடம்படான் மாண்டார் நூல்மாண்ட – இடம்பட**
**நோக்கும் வாய்நோக்கி நுழைவானேல் மற்றவனை**
**யாக்குமவர் யாக்கும் அணைந்து''**

நம் செயல்கள் அனைத்தும் இறைவருளால் இனிது நடைபெறுகின்றன. ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்பர் ஆன்ருேர். இறைவரைப் பலவகையாக உருவகித்து வழிபடுகின்றனர் சிலர். இறைவர் ஒருவரா இருவரா பலரா சொல்லும் தரமன்று. மாந்தர் தம் மனம் போல் பற்பல உருவங்களைச் செய்து வழிபடுகின்றனர். இறைவர் என்று ஒருவர் உண்டா என ஐயுறுகின்ற மாந்தரும் உளர். சாதி வேறுபாடுகளைக் கற்பிக்கும் மாந்தரும் உளர். இத்தன்மையுடைய மாந்தருக்கு நல்லறிவு புகட்டவே மாந்தர் அனைவரும் ஓர் குலத்தினரே, இறைவர் ஒருவரே என்ற கருத்தில் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனக்கூறிச் சென்ருர் சான்ருேர் ஒருவர்.

தெய்வம் ஒன்று என்றும், அத்தெய்வம் உண்டு என்றும், உயர்ந்த செல்வமனைத்தும் நிலையற்றவை. அழியக் கூடியவை என்றும் கருதுதல் வேண்டும். பசித்து வந்தவர்க்கு உணவு இடுதல் வேண்டும். நல்ல அறமும், நட்பும் நன்று என எண்ணுதல் வேண்டும். நடுவு நிலைமையிலிருந்து சிறிதும் பிறழுதல் கூடாது. நன்மையும் தீமையும் இறைவர் எழுதிய படியே வரும். ஆதலின் மனம் சலித்தல் கூடாது. நெஞ்சமே இது உனக்கு அறிவுரையாகும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

# அறுமுகனின் அருள்மிகு தலங்கள்

## அறுபடைத்தாறு

திரு புலவர் பி. ரா. நடராசன் அவர்கள்
தமிழாசிரியர்,
பிஷப் ஈபர் உயர்நிலைப் பள்ளி,
புத்தூர் — திருச்சி. 17.

**நூலினுள் செல்வதற்கு முன்.**

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய தமிழ்' என்பர் சான்றோர். அத்தகு பெருமை கொண்ட தமிழ் வழங்கும் நிலத்தினை நால்வகையாகப் பிரிப்பர் அறிஞர். அந் நிலங்களுள் மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சியாம். 'குறிஞ்சிக்குத் தலைவன் முருகன். பைந்தமிழ்ப் பாவினால் பாடு வோர்க்கு அருள்பாலிப்பவன் ஆறுமுகன். அவன் இல்லா இடமேது? 'முருகு' என்பது அழகின் பேரெல்லையைக் குறிக்குஞ் சொல். என்றும் இளமையோடிருந்து அருள் பாலிக்கும் அழகன் அவன். ஆறுதலைத்தரும் ஆறுமுகனின் சிறப்புற அமைந்த தலங்களாகச் சங்கப்புலவர் நக்கீரர் தம் திருமுருகாற்றுப் படையில் ஆறு இடங்களைக் கூறினர். அவ் விடங்களே ஆறுபடை வீடுகளாம். அவையாவன 1. திருப் பரங்குன்றம் 2. திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) 3. திருவா வினன்குடி (பழநி) 4. திருவேரகம் 5. குன்றுதோறாடல் 6. பழமுதிர்சோலை. 5-ஆம் படை வீடான குன்றுதோறா டல் என்பது பல மலைகளுக்கும் பொதுவாக வழங்குஞ்சொல்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

''ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு! உயர்செல்வ மெல்லாம்
அன்றென்றிரு! பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு! நடுநீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு! மனமே உனக்கே உபதேசமிதே''

என்பது பட்டினத்தடிகளின் அருள்மொழியாகும்.

ஆன்றோர் காட்டும் அறநெறியில் நடப்பதே மாந்தர்க்கு ஏற்ற நன்னெறியாகும்.

குன்றுறையும் குமரன் இடங்களைக் குன்றுதோறாடல் எனக் கொள்ளலாம். இச்சிறப்பால் முருகனுக்கு 'மலைகிழவோன்'; 'குறிஞ்சி வேந்தன்'; கிரிராஜன்' என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. வாக்கிற் சிறந்த அருணகிரியார் தாம் பாடிய திருப் புகழில் குன்றுதோறாடல் பகுதியில் 33 இடங்களைக் குறித் துள்ளார். அநுபூதி பெற்ற அம்மகான் தம் திருப்புகழில் குறித்துள்ள தலங்கள் 199. (இன்றுவரை கிடைத்துள்ள திருப்புகழ் பாடல்களின்படி சிலர் ஓரிரண்டினைக் கூட்டியும் குறைத்தும் சொல்வர்).

'பெரும் பெயர் முருகன்' என்ற முறைக்கேற்ப எம்பெரு மான் செவ்வேள் தனித்திருக்கும் திருக்கோயில்களையும் ஏனைய சிவாலயங்களில் அவனுக்கே முதன்மைச் சிறப்பளிக்கும் திருக் கோயில்களுமாக மொத்தம் அறுபத்தாறு அருள்மிகு தலங் களைக் குறித்து அவ்விடங்களை நேரிற்கண்டு முருகன் உறையும் கோயில் எங்குளது? இரயில் பஸ்வசதி உண்டா? முருகனின் திருக்கோலம், எத்திசை பார்த்துள்ளான்? அரு ளாளர்களின் பாடல்கள் உண்டா? படை வீடா? மலையா? அடிவாரமா? படிகளின் எண்ணிக்கை, தங்கும்வசதி, யாரின் ஆளுகைக்குட்பட்டது? என்பன போன்ற விபரங்களை விளக்கி அவனருள்பெற இப்பிரயாண வழிகாட்டி நூல் மாவட்ட வாரியாகப் பிரித்து எழுப்பட்டுள்ளது.

ஸ்ரீ அருணகிரியாரை முருகன் திருவண்ணமலையில் தடுத் தாட்கொண்டு 'வயலூருக்கு வருக' வென அழைத்தமையால் வயலூரும் வயலூர் அமைந்துள்ள திருச்சிராபள்ளி மாவட்ட மும் முதன்மை பெறுகின்றது, திருச்சியிலிருந்து வலமாகச் சென்று இறுதியாகச் சென்னையில் முடிவடைகிறது. அந்தந் தத் தலங்களுக்குக் கீழ் திருப்புகழ், கந்தரலங்காரம், பிற அருளாளர்களின் பாடல்கள் தரப்பட்டுள்ளன. முருகனடி யார்கள் இத்தல வழிகாட்டி நூலினைத் துணையாகக் கொண்டு செவ்வேளின் திருவருளைப் பெறுவார்களாக,

**1. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

**1. வயலூர் 2. செட்டிகுளம் 3. திண்ணியம் 4. வெண்ணெய்மலை 5. புகழிமலை**

1. வயலூர். திருச்சிக்கு மேற்கே 6 மைல் தொலைவில் உள்ளது. திருச்சி நகரிலிருந்து டவுன்பஸ் வசதி உண்டு. புகைவண்டி வசதி இல்லை. ஸ்ரீ அருணகிரியாரை முருகன் திருவண்ணாமலையில் தடுத்தாட்கொண்டு 'வயலூருக்கு வருக' வென பணித்ததற்கேற்ப முதன் முதலில் அப்பெருமானும் வயலூருக்கு வந்து, திருக்கோயிலின் முன்னே, முருகன் தம்கையினுள்ள வேலினால் உண்டாக்கின 'சக்திதீர்த்தம்' என்னும் திருக்குளத்தில் நீராடி, கோயிலினுட் சென்று பொய்யாக் கணபதி முன், முதல் திருப்புகழான 'கைத்தல நிரைகனி' என்ற திருப்பாட்டினைத் திருவாய் மலர்ந்தருளினர். முருகன் தன் இரு பக்கங்களில் வள்ளி தெய்வயானையுடன் மிக அழகிய கோலத்துடன் தன்பின்னே மயில் இருக்க நின்ற கோலத்தோடு கிழக்குநோக்கி எழுந்தருளியுள்ளான், வயல்கள் சூழ்ந்த நன்செய் நிலங்கள் கோயிலைச்சுற்றி அதிகம் காணப்படுவதால் 'வயலூர்' என்ற பெயர் பெற்றது. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அரிய முயற்சியால் இன்று இத்திருக்கோயில் மிகக்கம்பீரமாய் வளர்ந்து வருகின்றது. நீண்டகன்ற திருமண மண்டபங்கள் உள்ளன. தேவஸ்தான பராமரிப்பில் தங்கும் வசதிகள் உண்டு. மாதக் கார்த்திகை மிகச் சிறப்பு. பங்குனி உத்தரத்தன்று காவடி, பாற்குட வைபவங்கள் சிறப்பாக இருக்கும். அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட கோயில்.

**திருப்புகழ்.**

இநந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகோளும்
　　இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரித்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
　　விளக்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருத்தி வேறுங் கொண்டலின் மருகுபொன் வயலூரா
　　குரங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருத்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
　　சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

2. **செட்டிகுளம்.** திருச்சியிலிருந்து பஸ்வசதி உண்டு. இரயில் வசதி இல்லை. திருச்சியிலிருந்து பெரம்பலூர் (பெரம்பலூர் வழியாகச் செல்லும் பஸ்களில்) செல்லும் பஸ்ஸில்ஏறி 'ஆலத்தூர் கேட்' என்னுமிடத்தில் இறங்கி மேற்குத்திசையில்

5 கல் தொலைவு செல்லவேண்டும். திருச்சியிலிருந்தே செட்டி குளம் செல்லும் பஸ்கள் குறைவு 'வடபழநி' என்று அப் பகுதி மக்கள் இம்மலையை அழைப்பர். சிறு குன்றின்மீது முருகன் ஆண்டித் திருக்கோலத்தில் மேற்கு நோக்கி அருள் பாலிக்கின்றான். குன்றின் மீது ஏற மேற்கு, வடக்கு ஆகிய இரு திசைகளிலும் படிகள் அமைந்துள்ளன. மேற்குத்திசை யில் அமைத்துள்ள படிகளின் எண்ணிக்கை 225. தைப்பூசம், பங்குனி உத்திர விழாக்கள் சிறப்பெனினும் உத்திரவிழாவே வெகு விமரிசையாக நிகழும். அன்று பாற்குடங்கள், காவடி கள் நூற்றுக் கணக்கில்வரும். வார வெள்ளிக்கிழமைகள் விசேடம். செட்டிகுள முருகன் கோயிலிலிருந்து 1 கல் மேற்கே சென்றால் ஊரினை அடையலாம். இவ்வூரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பிரேசுவரர் கோயிலுக்கு உட்பட்டது இக்கோயில். முருகன்மீது பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தங்கும் வசதி இல்லை. அறநிலைய ஆட்சித்துறைக் குட்பட்டது.

3. **திண்ணியம்**. இரயில் வசதி இல்லை. திருச்சியிலி ருந்து பஸ் வசதி உண்டு. லால்குடிக்குப் பக்கத்திலுள்ள காட்டூர் சர்க்கரை ஆலைக்குப் பக்கத்திலுள்ளது, (சுமார் 2 மைல்) பழைய கோயில். நன்முறையில் உள்ளது. திருக் கோயிலின் திருக்கதவினைத் திறந்தால் திருமுருகனின் திருச் சன்னதி. முருகன் தெற்கு நோக்கி மயிலின்மேல் முன்னும் பின்னுமாக ஆறு திருமுகங்களுடன் மிகக்கம்பீரமாகக் காட்சி தருகின்றான். வள்ளியும் தெய்வயானையும் தனித்தனியே மயி லில் எழுந்தருளியுள்ளனர், இவ்வமைப்பு குன்றக்குடி கோயி லின் திருவுருவ அமைப்பினை நினைவூட்டுகிறது. இக்கோயில் அமைந்துள்ள திண்ணியத்திற்கே திருச்சியிலிருந்து பஸ்உண்டு திருச்சியிலிருந்து ஆலங்குடி மகாஜனம் செல்லும் பஸ்ஸில் ஏறி திண்ணியம் ஸ்டாப்பில் இறங்கி ½ மைல் நடக்கவேண்டும். திருச்சியிலிருந்து செல்லும் லால்குடி, காட்டூர் பஸ்களிலும் செல்லலாம். காட்டூரில் சர்க்கரை ஆலைவரவும் கோயில் புகழ் வளர்ந்து வருவதாக ஆலய நிர்வாகிக் கூறுகிறார், மாதக் கார்த்திகை விசேடம். பங்குனி உத்திரத்தன்று காவடிகள் வரும். பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தங்கும் வசதி கிடையாது. அறநிலைய ஆட்சிக்குட்பட்டது.

4, **வெண்ணெய்மலை**. கரூர்வரை ரயில் வசதிஉண்டு. கரூரிலிருந்து 2 மைல் வடக்கிலுள்ள வெங்கமேடு என்ற பகுதியில் அமைந்துள்ளது. கரூரிலிருந்து பரமத்தி வேலூர், சேலம், நாமக்கல் போகும் பஸ்களிலும் பரமத்தி வேலூர் வரை செல்லும் டவுன் பஸ்களிலும் செல்லலாம். மெயின் ரோட்டிலிருந்து 2 பர்லாங்கு மேற்கு நோக்கிச் செல்லவேண்டும். வெண்ணெய் போன்ற மிகவெண்மையான: சிறு குன்றின்மேல் முருகன் கொலு வீற்றுள்ளான். செய்குன்றல்ல 35 படிகள். திருக்கோவிலின் பிரதான சன்னதியே முருகனின் சன்னதி. தண்டபாணிக் கோலத்தில் கிழக்குத்திசை பார்த்துள்ளான். மிக அழகிய கோயில். முருகனை வலமாக வரும்போது அம்மையையும் அப்பனையும் கண்டு வணங்கலாம் கருவூராருக்குத் தனிச்சன்னதி உளது கருவூரார் சன்னதியின் வலது புறத்தில் வெண்ணெய்மலையின் உச்சியினைக் காணலாம். மாதக் கார்த்திகை விசேடம். பங்குனி உத்தரம் வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 'நவநீதகிரி' என்ற பெயரும் உண்டு. பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தங்கவேண்டுவோர் கரூர் நகரத்திற்கு வந்துவிட வேண்டும். இதே மெயின் சாலைவழிச் சென்று புகழிமலையையும் காணலாம்.

5. **புகழிமலை**. கரூர்வரை இரயில்வசதி உண்டு. கரூரிலிருந்து பரமத்திவேலூர், சேலம், நாமக்கல் பஸ்களிலும், பரமத்திவேலூர் செல்லும் டவுன் பஸ்ஸிலும் சென்று வேலாயுதம் பாளையத்தில் இறங்கவேண்டும். அருணகிரியார் புகழிமலை எனக்குறிப்பது இம்மலையையே! குன்றுதோருடலில் இம்மலையும் சேரும். இன்று மக்கள் இம்மலையை 'ஆறுநாட்டான்மலை' என வழங்குகின்றனர். சுமாரான மலை 280 படிகள். சில இடங்களில் படிகள் நன்முறையில் அமையவில்லை. மலைப்படிகளுக்கு எதிரேயுள்ள சன்னதியே முருகனின் உறைவிடம். முருகனைக் காணச் செல்லும்முன் விக்கனங்களை விலக்கும் விநாயகரைக் காணலாம். சுவாமிமலைச் சுவாமிநாதன் போன்று மிக்க கம்பீரமாக முருகன் தனித்து ஒரு திருமுகத்தினனாய் கிழக்கு பார்த்து நிற்கின்றான் முருகன் சன்னதிக்கு முன் சிறிய கருங்கல் மண்டபம் உளது,

மலைமேல் முருகனை வலமாகச் சுற்றிவரலாம். தங்கும் வசதி குறைவு. பல அன்பர்களின் நன் முயற்சியால் கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாதக் கார்த்திகை, அமாவாசை நாட்களில் அதிகக் கூட்டம் வரும்.

**திருப்புகழ்.**

மருவுமலர் வாச முறுகுழலி னாலும்
வரிவிழியி னாலு மதியாலும்
மலையினிக ரான இளமுலைக ளாலு
மயல்கள் தரு மாதர் வகையாலும்
கருதுபொரு ளாலு மனைவிமக வான
கடலலையில் மூழ்கி அலைவேனோ
கமலபத வாழ்வு தரமயிலின் மீது
கருணையுட னேமுன் வரவேணும்
அருமறைக ளோது பிரமன்முதல் மாலும்
அமரர்முனி ராஜர் தொழுவோனே
அகிலதல மோது நதிமருவு சோலை
அழகுபெறு போக வளநாடா
பொருதவரு சூரர் கிரியுருவ வாரி
புனல்சுவற வேலை யெறிவோனே
புகலரிய தான தமிழ் முனிவ ரோது
புகழிமலை மேவு பெருமாளே.

# வெற்றி வேலன் வெண்பா அந்தாதி

திரு, S. ராஜகோபாலன் அவர்கள்:

1] தணிகையில் வேலுந் தகைசேர் மயிலும்
இனிய துணைவி இணைப்புங் – கனிய
தணிகையில் காட்சி தருங்கோவே! கூற்றன்
அணைகையில் என்னை அருள்!

2] அருள்பொங்க என்றன் அகத்தே மிகுத்த
இருள்மங்க என்னுள் எழுவாய்! – மருள்நீங்கி
வையமெலாம் வாழவகை செய்வாய்! ஆறுமுக
ஐயனே! என்னை அணை!

3] அணைந்த விளக்காகி ஆருமற்றுச் சாவில்
இணைந்த பொழுதிலே என்னை – நினைந்தங்கே
நீவருவாய்! உன்றன் நிழல்பட்டால் என்னுடைய
பாவநிழல் பட்டு விடும்!

4] விடும்வகை காணேன்! வினையெல்லாம் என்னைச்
சுடும்வலி ஆற்றேன்! – தொடர்ந்து – படருமோர்
மாயச் சுழல்பட்டு மத்தாய்ச் சுழலுமெனக்
கோய்வுமிங் குண்டோ உரை!

5] உரையற்றே ஊஞ்சல் உளமற்றே ஞான
வரையுற்றே வாழ அருள்வாய்! – திரைபற்றும்
செந்தில குடிகொள் செவ்வேளே! திருப்புகழ்ச்
சிந்தில் சரிக்கின் றவா!

6] வா!வந்து காவென்று வார்த்தை சொலுமடியார்
போவென்று கூற்றைப் புகன்றிடுவார்! – தேவர்
வணங்குந் திருவடியே முக்திக்கரை சேர்க்க
இணங்கும் புணையாய் இரு!

7] இருந்தமிழும் ஆரியமும் ஒன்றி இணைந்து
விருந்தமிழ் தம்போன்றே விளங்கும் – திருப்புகழில்
என்றும் இருக்கும் எழில்வேலா! என்மனமாம்
மன்றில் வருவாய் மலர்ந்து!

8] மலர்ந்த அறுமுகமும் மாணிக்க வேலும்
புலர்ந்த மயிலும் புரிநூலும் – உலர்ந்த
இதய வெளிமீதும் இன்மழை பெய் விக்க
உதயவெளி யாகும் உணர்!

9] உணர்ந்த சிவனுக் குணர்த்தியவா! வள்ளி
புணர்ந்த வரைதோளா! பொன்ரு – துணையாய்
நிதமும் இருப்பவனே! நீயே இதயச்
சுதியாய் என் னுள்ளே சுடர்!

10] சுடரும் கனலாகி சூழ்பு னலாகி
தொடருமோர் காறருகி தொன்மை – படருமெழில்
வானுகி மண்ணுகி மற்று முளவாகி
நானுகி என்னை நடத்து!

# "கோணு அருளைப் பெற்ருர்"

**திரு. புலவர். தெ. முருகசாமி பி, ஓ. எல். அவர்கள்,**
*விரிவுரையாளர்,*
*இராமசாமி தமிழ்க்கல்லூரி,*
*காரைக்குடி–1*

சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்த திருத்தொண்டத் தொகையை ஆதாரமாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி என்பவர் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினுர், இத் திருத்தொண்டர் திருவந்தாதியையும் திருத்தொண்டத் தொகையையும் ஆதாரங்களாகக் கொண்டு சேக்கிழார், திருத் தொண்டர் புராணத்தைப் பாடினுர். எனவே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடுவதற்கு அந்தாதியும் தொகைப் பாடலும், துணையாக இருந்தன போலவே நம்பியாண்டார் நம்பிக்குத் திருத்தொண்டர் திருவந்தாதி பாட சுந்தரரது தொகைப் பாடல்கள் துணையாக இருந்தன எனத் தெரி கின்றது. ஆனுல் சுந்தரர் திருத்தொண்டத்தொகையைப்பாட எதனை ஆதாரமாகக் கொண்டார் அல்லது எது ஆதாரமாக இருந்தது என்பதைப் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து புறப்பட்டுப் பல்வேறு தலங்களை வணங்கிக் கொண்டே திருவாரூருக்கு வந்துசேர்கின்ருர். அவர் அங்கு வருவதை அங்குள்ள அடியவர்கட்கு ஆண்டவன் உணர்த்த, அவ்வாறே அவர்கள் சுந்தரரை வரவேற்றனர். அவரைத் ''தம்பிரான் தோழர்'' எனப் போற்றிப் பரவினர். சுந்தரரும் திருவாரூரிலிருந்த பரவையார் என்னும் பெண்ணை மணந்து பலநாள் அங்குத்தங்கி நாளும் ஆரூரிறைவனைப் பாடி வாழ்ந்து வருகின்ருர்.

இங்ஙனம் ஆரூரிறைவனை வழிபட்டு வரும் சுந்தரர் அக் கோயிலுள்ள தேவாசிரிய மண்டபத்துள் வீற்றிருக்கும் சிவ

அடியார்களை வணங்காமல் ஆண்டவனை மட்டும் வணங்கி வழிபடும் இயல்புடையவராக நாளும் ஒழுகி வருகின்ருர். ஆனுல் அடியவர்களோடு உடனுறையாது நாளும் செல்வது அவருக்குக் குறையாகத் தெரிந்ததால்.

"...............தேவா சிரியனுங் காவணத்து
விண்ணவர் ஒழிய மண்மேனமிக்க சீரடியார் கூடி
எண்ணிலா ரிருந்தபோதி லிவர்க்கி யானடியே னுகப்
பண்ணுநா னெந்நாள்.................." (தடுத். 189)

என்று ஆண்டவனிடம் விண்ணப்பித்து வந்தார், இவ்விண்ணப்பத்துள் 'அடியேனுகப் பண்ணுநாள் எந்நாள்' என்று கூறியுள்ளதால் திருவாரூக்கு வந்து தங்கிய காலந்தொட்டு, சுந்தரருக்குத் தேவாசிரிய மண்டபத்து அடியவர்களை வணங்க வேண்டும் என்ற எண்ணமிருந்திருப்பினும் அது ஆண்டவனுல் கூடப் பெற வேண்டும் என்று எண்ணி, அருள் வேண்டி அடியவர்களை நாளும் ஒதுக்கியே ஆண்டவனை மட்டும் வழிபட்டு வந்தார் எனத் தெரிகின்றது.

இங்ஙனம் விண்ணப்பித்து வழிபட்டு வரும் நாளில் ஒரு நாள் சுந்தரர் அடியவர்களால் வெறுக்கப்பட்டார். அடியவர் கூட்டத்திற்குப் புறம்பானவர் என்று தள்ளி வைக்கப் பட்டார். அவரேயன்றி அவருக்கு அருள்புரியும் ஆண்டவனும் கூட அடியவர்களால் புறமாக்கப்பட்டான். இவ்வாறு சுந்தரரும் ஆண்டவனும் அடியவர்களாய் புறமாக்கப்பட்டது ஏன்? தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியவர்களை வணங்காமல் சென்ற காரணத்திற்காகச் சுந்தரரும் அடியவர்களை வணங்காமல் தன்னை வணங்க இடங்கொடுத்த காரணத்திற்காக ஆண்ட வனும் புறமாக்கப்பட்டனர்.

திருவாரூருக்கு வந்தநாள் தொட்டு அவருடன் அணுக்கமாயிருந்து அவரைத் தம்பிரான் தோழரெனப் போற்றிப் பரவிய அடியார் கூட்டம் அவரைத் திடீரென ஒருநாள் வெறுத்து விட்டதற்குக் காரணமாயிருந்தவர் திருவாரூரைச் சார்ந்தவரல்லாத ஓர் அடியவரே யாவர். அவர் பெயர் விறன் மிண்டர், மலை நாட்டைச் சார்ந்த திருச்செங்குன்றினர். சித்தத்தைச் சிவன் பால் கொண்ட சிவ அடியார்களிடம் மிக்க

அன்பு உடையவர். சிவன் வீற்றிருந்தருளும் தலங்களைச் சென்று வழிபட்டு அங்கெல்லாம் அடியார்களை வணங்கிய பின்னர் ஆண்டவனை வணங்கும் வழிபாட்டுச் சீலமுடையவர்,

**நதியுமதியும் புனைந்தசடை நம்பர்விரும்பி நலஞ்சிறந்த**
**பதிகளெங்குங் கும்பிட்டுப் படருங்காதல் வழிச்செல்வார்**
**முதிருமன்பிற் பெருந்தொண்டர் முறைமைநீடு திருக்கூட்டத்**
**தெதிர்முன் பரவுமருள் பெற்றேயிறைவர் பாதந்தொழப் பெற்றார்**

— விறன்மிண்டர் 5.

என்று விறன்மிண்டரின் சீலத்தை உணர்த்தினர் சேக்கிழார். இங்ஙனம் வழிபட்டு ஒழுகிவரும் விறல்மிண்டர் திருவாரூருக்கு வந்தார். அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தில் சிவ அடியார்களுடன் கலந்திருந்த போது சுந்தரர் அடியவர்களை வணங்கிக் கலந்துறையாமல் நேரே ஆண்டவனைக் கண்டு வழிபடச் சென்றதைக் கண்டு சுந்தரரை வெறுத்தார்.

**''திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரிய னிடைப் பொலிந்து**
**மருவாநின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா**
**தொருவா றொதுக்கும் வன்றொண்டன் புறகு''**

— விறன்மிண்டர் 7.

என்று விறல்மிண்டர் கூறியதாகச் சேக்கிழார் கூறுகின்றார். ஒருவாறு ஒதுங்கும் என்று கூறாமல் ஒதுக்கும் என்றுவன்மையாகக் கூறியுள்ளதால் சுந்தரரின் செயல் விறல்மிண்டருக்கு எவ்வளவு வெறுப்பைத் தந்திருக்க முடியும் என எண்ணிப் பார்த்தால் சுந்தரர் அடியவர்களை ஒதுக்கிச் சென்ற நிலைதெரிய வரும்.

இப்பகுதியிலிருந்து தெரியவரும் ஓர் உண்மையாதெனில் ''சுந்தரர் சிவ அடியார்களை வணங்கி வழிபடவில்லை என்பது ஒருபுறமிருக்கவும், இந்நாள் வரை உடனிருந்த அடியார்களும் இதை ஒரு பொருட்டாகக் கருதும் பண்பினராக இருந்ததில்லை'' என்பதாகும். எனவே விறல்மிண்டர் திருவாரூருக்கு வந்ததும் தான் சிவ அடியார்களின் பெருமையை அங்குள்ள அடியவர்கள் உணர்ந்தார்கள் என்பது உண்மை. ஏனெனில் விறன்மிண்டர் வருவதற்கு முன்பே அடியவர்களின் பெருமைகளைத் திருவாரூர் அடியவர்கள் உணர்ந்திருந்தால் சுந்தரர் நாளும் அடியவர்களை ஒதுக்கிச் செல்லும் செயலைக் கண்டு

அவர் புறமாக்கப்பட்டிருப்பார். அதனுல் அவரும், ஆண்டவன் அருளால் திருத்தொண்டத் தொகையைப் பாடியிருப்பார். அவ்வாறு விறல்மிண்டர் வருவதற்கு முன்பு திருத்தொண்டத் தொகை பாடப் பெருமல் விறல்மிண்டர் திருவாரூருக்கு வந்த பிறகே திருத்தொண்டத் தொகை பாடப் பெற்றதெனில் நாளும் சுந்தரரது போக்கை வாளாக் கண்டு வந்த அடியவர் கூட்டம் விறல்மிண்டரால் மனம் மாற்றப்பட்டனர் என்பது உண்மையன்றோ!

விறல்மிண்டர் தம்மை வணங்காத காரணத்தால் சுந்தரரை வெறுத்தார் என்பதாக இல்லாமல் ''சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையாது'' என்றும் ''சிவனடியார் திருக்கூட்டம் பேணுது'' என்றும் சேக்கிழார் தெளிவாகப் பன்மையில் கூறியுள்ளதால் விறன்மிண்டர் வருவதற்கு முன் பிருந்த அடியார் கூட்டத்தின் எண்ணம் விறன்மிண்டரால் மாற்றப்பட்டது. என்பது மேலும் உண்மையாகின்றதன்றோ!

சுந்தரருக்கு இயல்பாகவே தாம் அடியார்க்கு அடியனுக ''வேண்டும்'' என்ற எண்ணமிருந்திருப்பினும் அதனை உடனடியாகச் செய்யாத சிறு குற்றத்திற்காக அவர் புறமாக்கப் பட்டார். தாம் புறமாக்கப் பட்டதை அறிந்த சுந்தரர் ஆண்டவனிடம் விண்ணப்பிக்க ஆண்டவனும் அவருக்கு அடியார் பெருமையெல்லாம் கூறினுன். உடனே சுந்தரர்,

**''நானிங் கேதந்நீர் நெறியைப் பெற்றேன்''** (தடுத். 197)

என்று தாம் அடியார்களை முன்பு வணங்காத குற்றத்தை ஒப்புக் கொண்டவராய் இப்போது அடியவர்களை வணங்கும் நந்நெறியைப் பெற்றதாகக் கூறிப்பின் இக்குற்றத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுத் தம் பாடலில் கூறும் ஒவ்வொரு அடியார்க்கும் ''அடியேன், அடியேன்'' என்று அடியவரின் அடிமைக்குத் தம்மை உரிமையாக்கிக் கொள்கின்றார். ஆண்டவன் அடியெடுத்துக் கொடுக்க சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடினுர் என்றாலும் அவ்வாண்டவனது அருளும் விறல்மிண்டரின் வருகைக்குக் காத்திருந்ததெனில் விறன்மிண்டரின் வீறு எத்தகையது எனக்கூறவும் வேண்டுமோ?

இத்தகைய அடியாரின் சிவ வீரத்தைப் பாடிய சேக்கிழாரும், அவரைக் கோனருளைப் பெற்றார் என்று பாராட்டினார்.

**........................................சிவனடியார் திருக்கூட்டம்**
**பேணாதேகு மூரனுக்கும் பிரானுந் தன்மைப் பிறைசூடிப்**
**பூணாரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைப்ப மற்றவர்பாற்**
**''கோனா வருளைப் பெற்றார்''..............** — *விறன்மிண்டர் 8.*

என்றார் சேக்கிழார், மற்றவர்பாற் கோனருளைப் பெற்றார் எனப் பன்மை வாய்பாட்டாற் கூறியதால் ஆண்டவன் அவருக்கு வீடுபேறுகிய அருளை வழங்குவது பின்னிருக்க, அதற்கு முன்பாகவே சுந்தரர் விறன்மிண்டரை.

**''விரிபொழில்சூழ் குன்றையர் விறன்மிண்டர்க் கடியேன்''**

என்று நேருக்கு நேராக வணங்கி வழிபடும் பேற்றைப் பெற்றார் எனில் அவர் கோனருளைப் பெற்றாரன்றே! இதிலுள்ள சிறப்பு யாதெனில் வைரத்தை வைரத்தால் அறுப்பது போல அடியார் பெருமைகளை அடியாரைக் கொண்டே ஆண்டவன் வெளிப்படுத்தினான் என்பதேயாகும்.

விறன்மிண்டர் என்ற பெயரிலேயே அவ்வடியாரின் மன வுறுதி தெரிகின்றது. பல அடியார்களை உலகத்திற்குக் காட்ட அவர் இல்லமறை காயாக இருந்ததால் அவரைப் போலவே பிற அடியார்களும் மனவுறுதி உடையவர்கள் என்பதைத் தெளிவாக உணர்ந்த சேக்கிழார், இவ்விறன்மிண்டரின் திறத்தை மனதில் எண்ணியவராய் அடியார்களைப் பற்றி அறிமுகப்படுத்தும் பெரியபுராணத் தொடக்கத்தில்.

**கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்**
**ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்**
**கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.**

**(திருக்கூட்ட. 8)**

என்று கூறினார், வீட்டின்பத்தையும் விரும்பாத அடியவரின் திண்மையை 'விறல்' என்ற சொல்லால் பொதுப்பட எல்லா அடியவர்க்கும் பொருந்துமாறு சுட்டியுரைத்தாரெனில் அது

**(தொடர்ச்சி அடுத்த பக்கம்)**

# 'நலந்தரும் நாமம்'

'செந்தமிழ்ச் செல்வன்'
புலவர்: திரு. சிக்கல், சி. சானகிராமன் அவர்கள்,
சிக்கல் (அஞ்சல்) நாகை [வட்டம்]

இறைவனது திருப்பெயர்களைக் கூறுவதால் பெறும் ஆனந்தமே பேரானந்தம். இறைவனின் நாமங்கள் நலந்தரும் சொற்கள் "சிவ சிவ என்னச் சிவகதி தானே" எனத் திருமூலமும், "நற்றுணையாவது நமச்சிவாயவே" எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும், "நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" எனத் திருமங்கையாழ்வாரும் "நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே இம்மையே இராம வென்றிரண்டெழுத்தினால்' எனக் கம்பரும் கூறியுள்ளார். அசுரர் குலத்தை அடக்கிய வெற்றி வேற் பெருமாளாகிய முருகப் பெருமானை அடியார்க்கு நல்ல

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

விறல்மிண்டரின் செயல் திறத்தால் விளைந்த வீறுடைய சொல் என்பதில் ஐயமில்லையன்றோ!

எனவே சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாட விறன்மிண்டரே காரணமாவார். இதனைச் சேக்கிழாரும்,

"வேறு பிறிதெனை? திருத்தொண்டத் தொகையாலுலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்மிண் டரைப் பெருமை
கூறு மளவென் னளவிறறே? யவர்தான் சென்னி மேறகொண்டே"
— விறன்மிண்டர் 11.

என்று விறன்மிண்டரைப் பரவிப் புகழ்ந்தாரெனில் விறன்மிண்டர் சேக்கிழாராலும் கோணு அருளைப் பெற்றவரன்றோ!!

---

பெருமான். அவரது நாமத்தைச் சொல்லுபவர்கள் மிகமிகப் பாக்கியவான்கள். அவர்கள் இனிப் பிறவாத பேற்றையும், இப்பிறப்பில் வறுமையில் சிக்கித் தவிக்காமல் இன்பமும் பெறுவார்கள். என அருணகிரிநாதசுவாமிகள் கந்தரலங்காரத்தில் பாடியுள்ளார்.

ஆறுமுகப் பெருமானது நாமம் பக்தர்களுக்கு மனதிற்கு இன்பமும், நினைக்கும்பேறுகளும் அருளுவதோடு, அவர்களைப் பகைவர்களின் கோபத்திலிருந்தும், பழிகளிலிருந்தும் பாதுகாத்து அவர்களுக்கு வினைப்பயனால் மலை போல் துன்பங்களும் நெருப்பைப் போன்ற பிணிகளும் ஏற்பட்டால் அவைகளையும் அறவே அகற்றி, அவர்கள் இனிப் பிறவாத தன்மையும் ஒருங்கே தரவல்லது. ஆகவே நாங்கள் நிறைந்த முருகனது நாமத்தை எப்பொழுதும் சொல்லும் பாக்கியத்தை நாம் அடைய வேண்டும்.

எம்பெருமானை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, உருகும் அடியார் முன் அச்சம் தரும் காலனது முகம் தோன்றினால் உடனே முருகப் பெருமானது கருணை கூர்முகங்கள் ஆறும் தோன்றி ஆறுதல் அளிக்கும். ஆவி பிரியும் மரணப் போராட்டம் ஏற்பட்டால் இறைவன் வேல் தோன்றி அபயமளிக்கும். ஒருமுறை நெஞ்சில் முருகா என்று ஓதினால் இறைவனது இரு திருப்பாதங்களும் தோன்றி முக்தி அருளும்.

> **''அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்**
> **வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்–நெஞ்சில்**
> **ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
> **முருகாஎன் றோதுவார் முன்''**
>
> *—திருமுருகாற்றுப்படை வெண்பா.*

ஆறுமுகப் பரம் பொருளின் அளவற்ற திருநாமங்களில் சரவணபவன், குமரன், கந்தன், குகன், வேலாயுதன், மயில் வாகனன், சேவற் கொடியோன், கார்த்திகேயன், கடம்பன் என்ற பெயர்கள் அடிக்கடி அடியார்களால் போற்றித் துதிப்பனவகளாகும். 'சரவணபவ' என்ற ஆறு எழுத்துக்கள் முறையே; செல்வம், கல்வி, முக்திப்கைவெல்லல், காலறுயம்

ஆரோக்கியம் முதலிய ஆறு சோறுகளையும் அருள வல்லவை என சாஸ்திரங்கள் கூறும். இவ்வாறெழுத்தில் உலகிலுள்ள ஏழு கோடி மந்திரங்களும் அடக்கம் எனச் சொல்லப் படுகிறது.

''வசனம்மிக வேற்றி மறவாதே
மனத்துப ராற்றில் உழலாதே
இசைபயில்ச டாட்சர மதனுலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே''.

என்ற திருப்புகழும், ''உன்றன் ஆறெழுத்தை ஒருமை மனத் தினுச்சரித்து இங்கு உயர்ந்த திருவெண்ணீறிட்டால், இருமை வளனும் எய்தும், இடரென்பதொன்றும் எய்தாதே'' என்று திருவருட்பாவும் ஆறெழுத்து உண்மையை விளக்குகின்றன.

முருகன் என்ற சொல்லுக்குத் தெய்வத் தன்மை; மாருத அழகு, குன்றாத இளமை என்றெல்லாம் பொருள் கூறி, இத்தகைய நலங்களை எல்லாம் இப்பெருமான் தம் அடியார் களுக்கு அருளுவான் என்பார். இப்பெயர் இயற்கையின் அழ கெல்லாம் இப்பெருமானே எனவும் உணர்த்துகிறது. இத் திருப் பெயரில் இறைவனைக் குழந்தை உருவில் வைத்து வழிபடுவது ஏராளமான பக்தர்களின் இயல்பு.

''முருகா எனஉனை ஓதும்தவத்திவர் முதுலகில்
அருகாத செல்வம் அடைவர் வியரிதயமடைந்து நையார்
ஒருகாலமும் துன்பம் எய்தார், பரகதி யுற்றிடுவார்
பொரு காலன்நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே''

—சிதம்பர சுவாமிகள்.

# சிற்சபை யுடையான் செல்வமெய்ப் பிள்ளை

அ. சச்சிதானந்தம் (B. Sc.)
ஐயங்கார்குளம்
காஞ்சிபுரம் வட்டம்.

இறைவனை அடையும் வழிகள் நான்கென ஆன்றோர் இயம்புவர். அவை சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சக மார்க்கம், ஞானமார்க்கம் என்பன. அவற்றில் முறையே ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சென்று வழிபட்டு இறைவனடி சார்ந்தனர், அவர்கள் முறையே ஆளுடைப் பிள்ளை, ஆளுடை அடிகள், ஆளுடைத் தோழர், ஆளுடை அண்ணல் என அழைக்கப் படுவர். ஈண்டு 'சிற்சபையுடையான் செல்வமெய்ப் பிள்ளை' என்றது சற்புத்திர மார்க்கத்தில் இறைவனை வழிபட்ட இராம லிங்க அடிகளாரை ஆகும்,

சற்புத்திர மார்க்கமாவது இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் கொண்டு வழிபடுதல். சம்பந்தர் குழவிப் பருவத்திலேயே உமையம்மையால் ஞானப்பாலருந்தி ஆட் கொள்ளப் பெற்ற ஞானப்புதல்வர். அது போன்றே இராம லிங்க வள்ளலாரும் குழவிப் பருவத்திலேயே சிதம்பரத்தில் நடராசப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற அருட்குழந் தையாவார், இராமலிங்க அடிகளார், 'சிற்சபையுடையான் செல்வமெய்ப் பிள்ளை'' என்று தம்மைக் கூறிக்கொள்வ தாலும், பலவிடங்களில் தம்மை மகனாகவும் இறைவனைத் தந்தையாகவும் கொண்டு பாடியிருப்பதனாலும் அவர் சற்புத் திர மார்க்கத்தில் இறைவனை வழிபட்டாரென்பது புலப்படு கிறது.

பல வேறு சமயங்கள் தலைவிரித்தாடிய நிலையில் பேய் பிடிப்புற்ற பிச்சு விளையாட்டெனை அதனை யுணராத வுயிர்கள் வேறுபட்டு இங்குமங்குமாக மதங்கள் மாறியும் பூசல் குழப் பங்களை உண்டாக்கியும் வீணாக்கி நாள்போக்கினர். அவர்

களையெல்லாம் திருத்தி உலகிலே சன்மார்க்க நெறி தழைத்து வளர இறைவன் இராமலிங்கரை அளித்தான்.

''புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்தி எல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை யாத லாலே
இவ்வேலை புரிகவென் றிட்டன மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே.''

என்று தாம் அவதரித்ததை இராமலிங்கரே கூறுவதினின்று அறியலாம்.

ஒரு தந்தையிடம் அவனது மகன் எப்படி எல்லாம் உறவாடுவானோ அதுபோன்ற நிகழ்ச்சிகள் பல அவரது பாடல்களில் காணப்படுகின்றன, அவையாவும் அன்பே இறைவன் என்பதையும் இறைவனே எல்லாவுயிர்கட்கும் தந்தை என்பதையும் தெள்ளிதின் அறிவுறுத்துகின்றன.

''அப்பா, நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெலாமநான் அன்புசெயல் வேண்டும்
..............................................................
தப்பேது நான செயினும் நீ பொறுத்தல் வேண்டும்''

என்றும்,

''மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யா னுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்த தந்தை யலையோ''

என்றும் அருளிய இடங்களில் அவர், தனக்கும் இறைவனுக்கும் உள்ள உண்மையான தொடர்பைத் தெளிவு படுத்துகின்றார். எல்லாம் வல்ல அத் தந்தையிடம் இராமலிங்கர் அழுதழுது, 'அடித்தது போதும் அணைத்திடல் வேண்டு' மென இறைஞ்சுகிறார்:

''தடித்தவோர் மகனைத் தந்தை யீண்டடித்தால்
தாயுட னணைப்பள் தாய் அடித்தாற்
பிடித்தொரு தந்தை யணைப்பனிங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி யம்பலத்தாடும்
புனித நீ யாதலா லென்னை
அடித்தது போது மணைத்திடல் வேண்டும்
அம்மையப் பாஇனி யாற்றேன்.''

இப்படியாக வள்ளலார் இறைவனைத் தந்தையெனக் கொண்டு எஞ்ஞான்றும் மறவாமல் அவனது திருவடியினையே பற்றியிருக்க, இறைவனும் தாயாகவும் தந்தையாகவும் வந்து இராமலிங்கரைச் சேயாக வளர்த்த திருவிளையாடல்களும் எண்ணி எண்ணி இறும்பூதெய்துதற்குரியன.

ஐந்து மாதங்களே நிறைந்தகுழந்தை இராமலிங்கரை சிற்சபையுடையான் ஆட்கொண்ட திறத்தை என்னென்றியம்ப வல்லேம்! ஒருநாள் தந்தை இராமையப் பிள்ளை தன் மனைவி மக்களுடன் குழந்தையை எடுத்துச் சென்று அருட்பெருஞ் சோதியின் ஆனந்தக் கூத்தினைத் தரிசித்து நின்றார். அப்போது தீபாராதனை செய்து வேதியர், சிதம்பர இரகசியத்தைக் காட்டத் திருத்திரையை விலக்கினர். எங்கும் நிறைந்த இறைவனைக் கண்ணிமைக்காமல் அங்கே கண்டு வெண்கல ஓசையே போல் கலகலவென்று சிரித்தது அக்குழந்தை. தெய்வக் குழந்தையல்லவா அது? தனக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உண்மை உறவைக் கண்டுகொண்டது; எப்பொருளும் அப்பெருவளியில் அடங்கும் திறத்தினையும் இறைவனது சக்தியாகவும் ஆங்கே ஒடுங்கும் திறத்தினையும் மூலமான பொருளையும் அங்கே கண்டது. இதனையே பின்வரும் பாடலில் குறிக்கின்றார்.

"தாய்முதலோ ரோடுசிறு பருவத்திற் றில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்தபோது
வேய்வகைமேற் காட்டாதே யென்றனக்கே யெல்லாம்
வெளியாகக் காட்டியவென் மெய்யுறவாம் பொருளே."

சிறு வயதிலேயே 'சிவாயநம' வென்னும் திருவைந்தெழுத்தை, உலக இச்சையெலாம் மனத்தில் தோன்றுவண்ணமாக இறைவனே நேரில்வந்து ஓதினராம். அதையும் பின்வரும் பாடலில் அறிவிக்கின்றார்.

"பான்மறுத்து விளையாடும் சிறுபருவத் திடையே
பகருமுல கிச்சையொன்றும் பதியாதென் னுளத்தே
மான்மறுத்து விளங்குதிரு வைந்தெழுத்தேபதிய
வைத்தபெரு வாழ்வேயென் வாழ்விலுறுஞ் சுகமே"

மற்றும் லோக மாதாவாகிய வடிவுடையம்மன் தாயுருக் கொண்டும் தமக்கையுருக் கொண்டும் வந்து அடிகளாருடைய

அரும்பசியைப்போக்கியருளியுள்ளார். ஓர் நாளிரவு வடிவாம் பிகை தமக்கையுருவில் வந்து பசியால் வாடிக்கிடந்த வள்ள லாரை எழுப்பி வாழையிலையில் வெண்பொங்கல் வைத்து உண்ணுமாறு கூறி மறைந்தார். அந்நிகழ்ச்சியை

**''அனனொருநாள் நம்பசி கண்டடந்தோ தரியாது**
**நள்ளிரவில் சோறளித்த நற்றாய் காண்.''**

என்று கூறுகிறார்.

'ஒரே தெய்வ' மெனும் உயர்கொள்கையினை உடைய அடிகளார், பசித்தபோதும் தனித்தபோதும் அவரைத் துன்ப மணுகாவண்ணம் தாயிலும் சாலப் பரிந்து வளர்த்த சிற்றம் பலவாணனையே தெய்வமாக வழிபட்டார்.

**''சேயாக எனைவளர்தத தெய்வமதே தெய்வம்**
**சிற்சபையில விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்''**

என்பது அடிகளாருடைய தெளிவு.

வாழ்நாள் முழுமையும் சிற்சபையுடையான் பேரரு ளால் பற்பல அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டி ஆன்மநேய ஒரு மைப் பாடெனும் கொள்கையினை உலகெங்கும் பரப்பினர். தனது பசியினை ஆற்றிய வடிவுடையாளின் அருட்செயலைப் போன்று ஏழைகளின் அரும்பசி போக்க 'சத்திய தருமச் சாலை'யினை நிறுவினர்' அவர்களது உடற்பசியினையே அன்றி உள்ளப் பசியினையும் போக்க வழிசெய்தார். 'சமரச சன் மார்க்க சபை' யொன்றை ஏற்படுத்தி சாதிமத வேறுபாடுகளை நீக்க முயன்றார். எல்லா மதத்தினரும இறைஞ்சி இறைவனை வழிபட 'சத்திய ஞான சபை'யினை ஏற்படுத்தினர்.

தம் கடமையெலாம் முடித்து இறுதியில் துன்பமும், கவலையும் பிறவித்துயரும் இன்னபிறவும் நீங்கப் பெற்றவராய் ஞானமும், 'சிற்சபையுடையான் செல்வமெய்ப்பிள்ளை' என் றோர் பேரும் எய்தி தாம்செய்த தவத்தின் பலன் கிட்டியதாக, அதுவே தமக்குப் போதுமென இயம்பி சித்திவளாகத் திருமா ளிகையில் தமது அறையினுட் புகுந்து தாளிட்டுக்கொண்டு மறைவானர்.

**(தொடர்ச்சி அடுத்த பக்கம்)**

[சிவ சிவ

# 'உலோபிகள் நடுவிரலுக்குச் சமம்'

திரு, A மூர்த்தி B. SC அவர்கள்,
அரச்சலூர் Po. (ஈரோடு R.M.S.)

இவ்வுலக வாழ்வு சமமானது அல்ல, நிலையில்லாத வாழ்வைப் பெற்ற நமக்கு உறுதுணையாக நிற்பது அறம் ஒன்றே. அதனாலன்றோ அருணகிரிப் பெருமான் தமது அநுபூதியில்,

''கெடுவாய்! மனனே! கதிகேள்! கரவா
திடுவாய்! வடிவேலிறை தாள் நினைவாய்''

என்று அருளினார்,

''அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க
மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை''

என்ற வள்ளுவர் வாக்காலும் உணரலாம்.

எத்தனை நற்குணங்கள் இருப்பினும் ஒருவனிடம் உலோபத் தன்மை இருக்குமானால் அவனை உலகம் புகழாது. உதாரணமாக:- தீய குணங்களுக்கு உறைவிடமான கர்ணன் உலகிற்கு எப்படி நல்லவனானான்? என்றால் தன்னுடைய உயிருக்கே உறுதுணையாக இருந்த கவசகுண்டலங்களை மாற்றானாகிய விசயனுடைய தந்தையாகிய இந்திரனுக்கு ஈந்தானே! அத்தகைய அறச் செயல்கள்தான் அவன் தீய குணங்கள் அனைத்தையும் திரையிட்டு மறைத்து உலகிற்கு நல்லவனாக ஆக்கியது.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது அவர் பாடிய அருட்பாடல்:

''கட்டமும் கழன்றேன்; கவலைவிட் டொழிந்தேன்;
கலக்கமும் தீர்ந்தனன்; பிறவிச்
சட்டமுங் கிழித்தேன்; தூக்கமுந் துறந்தேன்;
சாவையும் நோவையும தவிர்த்தேன;
சிட்டமு மடைந்தேன்; சிற்சபை யுடையான்
செல்வமெய்ப் பிள்ளை யென் றொருபேர்ப்
பட்டமுந் தரித்தேன் எனககிது போதும
பண்ணிய தவம்பலித் ததுவே.''

நொய்யிற் பிளவளவேனும் பிறருக்குக் கொடாத உலோபிகள் நடுவிரலுக்குச் சமம். அந்த நடுவிரல் உலோபிகளுக்குச் சமம் என்பார் பாவலர் பெருமான் படிக்காசுத் தம்பிரான். அப்பாடலின் பொருள் பின்வருமாறு:-

நமது கையிலிருக்கும் விரல்கள் ஐந்து. இந்த ஐந்து விரல்களில் நான்குவிரல்களும் ஒவ்வொரு வேலையைச் செய்கின்றன நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானருளிய திருக்குமாரனே! வணிகர் பெருமகனே! திருச்செந்தூர் மேவிய கந்தவேளே! அதாவது கட்டைவிரல் என்ற பெருவிரல் வெற்றிலைக்குச் சுண்ணும்புத் தீட்ட உதவுகிறது. அதற்கு அடுத்த பாம்பு விரல் நல்ல ஆள்காட்ட உதவுகிறது, அதுதான் ஆள்காட்டி விரல் என்பர். சுட்டுவதால் சுட்டுவிரல் என்பர், பவித்திர விரல் மோதிரம் அணிய உதவுகிறது. கடைசியாக சுண்டு விரல் இருக்கிறதே அது திருமணக் கோலங் கொண்ட மணமக்களை மணவரையிலே கைகோர்வை செய்ய உதவுகிறது ஆனல் இந்த நான்கு விரல்களுக்கும் நடுவிலே கதிர்க் கம்பி போல் நீண்டு இருக்கிறதே அந்த நடுவிரல். அது எதற்கு உதவுகிறது? எல்லா விரல்களுக்கும் மத்தியில் மிக நீளமாக உயர்ந்து காணப்படுகிறது, அது தனித்து ஒரு வேலையைச் செய்ய, இயங்க முடியாது.

அதனுல் பயன் ஒன்றும் இல்லை. எனவே பிறருக்குக் கொடாத உலோபிகள் நடுவிரலுக்குச் சமம், என்று இலக்கிய நயம்தோன்ற அப்புலவர் பெருமானுடைய நா, பாடலாயிற்று அவ்வழகான பாடல் பின்வருமாறு.

> ''சுண்ணும்புதீட்ட நல்ல ஆள்காட்ட மோதிரஞ்சூட்ட மலர்க்
> கண்ணுறை கூட்ட விரல நான்கிருக்க, கதிர்க்கம்பி போல
> எண்ணுறு நடுவிரலே தாம்? உலோபருக்கு ஏதுகண்டாய்
> கண்ணார் நுதல அண்ணல சேய்வணிகா! செந்தில் காத்தவனே''

என்பதே அப்பாடலாகும்.

எனவே இவ்வற்புதமான பாடலை நாம் அனைவரும் பலகாலும் படித்து மகிழ்ந்து, அறம்பல செய்து, அறம் வளர்த்த கண்ணுளர்களாகத் திகழ்வோமாக,

---

பெரியபட்டி, சொன்னவர்:- அருளிசைமணி, செஞ்சொல்முகில், விரிவுரவித்தகர் முத்தமிழ் திலகம் மு. "தண்டபாணிசிவம்" அவர்களுடைய விரிவுரையிலிருந்து, கேட்டவர்:- A. மூர்த்தி B. S. C. அவர்கள், அரச்சலூர் Po. ஈரோடு R. M. S.

# "திருக்கோயில்களும் திரு அமுதுகளும்"

திரு. கி. ஸ்ரீதரன் அவர்கள் எம். ஏ.
தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தவெளி, சென்னை – 28.

எண்ணற்ற கோயில்கள் நிறைந்தது தமிழ்நாடு. நமக்கு நல்வாழ்வு தரும் இறைவன் கோயிலில் குடிகொண்டு இருக்கிருன். நமக்கு நல் வாழ்வு அளிக்கும் இறைவனுக்கு நம் நன்றியைத் தெரிவிக்க பல வகையான அமுதுகளைப் படைக்கின்ருேம்.

அமுது படைத்தல் என்பது ஒரு சிறந்த செயலாகும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது முதுமொழி. அமுது படைத்தலின் சிறப்பைப்பற்றி சேக்கிழார் பெருமானும் திருமூலரும் தம்முடைய பாடல்களில் கூறுகின்றனர்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதி சூடும்
அண்ணலாரடியார் தனம் அமுது செய்வித்தல்" — சேக்கிழார்

"தண்டறு சிந்தைத் தபோதனர் தாம் மகிழ்ந்து
உண்டது மூனறு புவனமும் உண்டது" — திருமூலர்

சிவனடியார்களுக்கு தினந்தோறும் அமுது படைத்து சிவப்பதம் அடைந்த நாயன்மார்களுள் இளையான்குடி மாற நாயனுரும் ஒருவர் ஆவர்.

"கொண்டு வந்து மனைப்புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை
வைத்தருச் சனைசெய்த பின
உண்டி நாலுவிதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
ஆண்ட நாயகர் தொணடர் இச்சையில்
அமுது செய்ய அளித்துள்ளார்"

தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் பலர் இறைவனுக்கு பல வகையாக அமுதுகளைப் படைப்பதற்காக தானம் அளித்ததை

பல கோயிற் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றது, அக்கல் வெட்டுக்கள் குறிப்பிடும் செய்திகளை இனி நோக்கிடுவோம்.

திருமுடி சோழப் பல்லவரையன் என்பான் திரைமூர் சபையினர் மற்றும் திருவிடைமருதூர் நகரத்தார் ஆகிய வரிடமிருந்து 14 வேலி நிலத்தை வாங்கி கோயில் நிர்வாகத்திற் குரிய பல செல்வுகளுக்கும் இறைவனுக்கு 'பிட்டமுது' நிவேதிப்பதற்கும் அந்நிலத்தை வழங்கியதாக முதலாம் பராந் தகசோழனின் திருவிடைமருதூர் கல்வெட்டு கூறுகின்றது. வீரகண்ட கோபாலன் என்பவன் இறைவனுக்கு 'பிட்டு' படைப்பதற்கு நிலம்தானமாக வழங்கினுன் என்று ஏகாம்பர நாதர் கோயில் கல்வெட்டு கூறுகின்றது. (277 of 1955-56) ஒவ்வொரு பௌர்ணமி நாளின் போதும் இறைவனுக்கு 'அப்பமுது' படைக்க 9 மா நிலமும் 4 காசுகளும் தானமாக அளிக்கப்பட்டது என்று கோவிந்தபுத்தூர் கல்வெட்டு குறிப் பிடுகின்றது. (1929-ல்-182) தொண்டை நாட்டை சேர்ந்த ஒருவன் மார்கழி மாத திருவாதிரை அன்று விநாயக பெரு மானுக்கு 'அவல்' படைக்க பொன் தானமாக அளித்தான் என்று திருமழபாடி கல்வெட்டு கூறுகின்றது. (1920-ல் 98)

முதலாம் இராசராசன் திருவாமாத்தூர் கோயிலில் எழுந் தருளியிருக்கும் இறைவனுக்கு தினந்தோறும் 'அக்கார அடிசில்' படைக்க நெல் தானமாக அளித்தான்(1922-ல் 21)

சோழப் பெருங்காவிதி என்பவன் திருசாற்றுறை இறை வனுக்கு தினமும் 'அக்கார அடலை' படைக்க 145 கழஞ்சு பொன் தானமாக அளித்தான். தானமாக அளிக்கப்பட்ட பொன்னின் வட்டியைக் கொண்டு அக்கார அடலைக்கு வேண்டிய குத்தல் பழவரிசி. பருப்பு, பால், சர்க்கரை,வாழைப் பழம், விறகு, நெல், அடைக்காய் அமுது, உப்பு முதலிய வற்றை வாங்கிக் கொள்ளலாம். (1931-ல்-191) சேக்கிழார் பல்லவரையன் என்பவன். ஆளுடைய பிள்ளையார் திரு மேனியை வைகாசி திருவிழாவின் போது திருமாறன்பாடிக்கு எடுத்துச் செல்லும் பொழுது அமுது செய்தருளவும் பட்டை பொதி சோற்று வழங்கியருளவும் நிலம் வழங்கப்பட்டது என்று மூன்றும் இராசராசனது திருவடதுறை கல்வெட்டு கூறுகின்றது. (1929ல் 221.)

திருப்பைங்கிலி இறைவனுக்கு தினமும் 'சிறுகாலைப் பருப்பு போனகம்' வழங்க 150 காசுகள் அளிக்கப்பட்டதாக அக்கோயில் முதலாம் இராசராசனது கல்வெட்டுகூறுகின்றது மேலும் அதற்கு எவ்வாறு செலவழிக்கப்பட்டது என்றும், என்னென்ன பொருட்கள் தேவை என்றும் அக்கல்வெட்டு கூறுகின்றது. அதாவது 2 நாழி பருப்பு–குறுணி இருநாழி நெல், ஒருபிடி நெய்-2 நாழி நெல், சர்க்கரை ஒருபலம்-2நாழி நெல், பொறிக்கறியமுது–4 நாழி நெல் ஆகியவைகளாகும்.

திருவீரட்டானமுடையார் திருவெழுச்சிக்குப் பெருந் திருவமுதுக்குச் செந்நெல் அரிசி பதின் கலத்து நெல் இருபத்தைந்து கலமும், பலவர்க்கத்துக் கறியமுது மூவாயிரப் பலத்துக்கு நெல் முக்கலமும், மிளகமுது நானுழி நெல் நாற்கலமும், தயிரமுது கலத்துக்கு நெல் கலமும், சர்க்கரையமுது நிறை நாலுக்கு நெல்நாற்கலமும், உப்பமுது தூணிக்கு நெல்கலமும் புளியமுது நிறை ஒன்றுக்கு நெல் கலமும், அடைக்காய் அமுதுக்கு (பாக்கு) ஆயிரத்திற்கும், வெற்றிலை ஐம்பதுக்கு நெல் ஆறுகலமும் நெல் தானமாக கோழம்பநாயகன் என்பவன் கொடுத்துள்ளான்.

தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த திருத்துருத்தி கோயிலில் வழிபாட்டின் போது கும்மாய அமுது (பயற்று பொங்கல்), பருப்பமுது, தயிரமுது, ஆகிய இவைகள் பொறிக்கறியமுதுகளுடன் படைக்கப்பட்டு வந்தன என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது. கும்மாய அமுது என்பது உடைத்த பச்சை பயிற்றினைச் சர்க்கரையுடன் கலந்து குழையச் சமைத்துச் செய்யப்பட்ட உணவாகும். பாண்டியன் வரகுணவர்மனுடைய அம்பாசமுத்திரக் கல்வெட்டில் கோயிலில் ஒரு வேளை உணவிற்கு தேவையான அளவு குறிப்பிடப்பட்டுள்ளது அவையாவன:- செந்நெல் தீட்டல் அரிசி–நானுழி. கும்மாயத்துக்கு பயிற்று பருப்பு–1 உரி, நிவேதிக்க பசுவின் நெய்-1 உழக்கு, தயிர்-1 உரி, வாழைப்பழம் நான்கு, சர்க்கரை-1 பலம் ஆகியவைகளாகும். இரண்டாம் வரகுண பாண்டியன், 1400 காசுகளை வட்டிக்கு விட்டு அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு திருச்செந்தூர் கோயிலின் செலவுக்

காக அளித்தான். அச்செலவினங்கள் என்னனென்ன என்று அக்கோயில் கல்வெட்டு விரிவாக கூறுகின்றது. திருஅமுதுக்கு அரிசி, வாழைப்பழம், சர்க்கரை, கும்மாயத்துக்குப் பச்சைப் பயறு, வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு, மடைப்பள்ளியில் கைதுடைப்பதற்கு துணிகள் ஆகியவைகளாகும்.

இதைத் தவிர ஆலயங்களில் தினந்தோறும் சிவனடியார்களுக்கும், அந்தணர்களுக்கும் உணவளிக்கப்பட்ட செய்தியை சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வேதங்களில் வல்ல அந்தணர் ஒருவருக்கு நாள் மதிபத்தில் உணவு வழங்க "தாலமொன்று, வட்டிலொன்று, பத்தெட்டு குத்தல் அரிசி, நெய் ஆழாக்கும். பழமிரண்டும், காய்கறி, புளிங்கறி, தயிர் நாழி, பொரிக்கறி, காயிலை (வெற்றிலை), பாக்கு இரண்டு, அளிக்க 70 கழஞ்சு பொன் தானமாக காஞ்சித் தாமோதரன் என்பவன் அளித்தான் என திருவெள்ளறை கல்வெட்டு கூறுகின்றது (1905 ல் 518), குடந்தை நாகேசுவர சுவாமி கோயிலில் சிவயோகி ஒருவருக்கு கும்மாய அமுது. புளியங்கறி, சர்க்கரை வட்டு, இரு வாழைப்பழங்கள், வெற்றிலை, பாக்கு ஆகியவை அளிக்க தானமளிக்கப்பட்டது. என பரகேசரிவர்மன் கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டு செய்தியில், 'கும்மாய அமுது' உத்தம போசனத்தின் ஒரு பகுதி என குறிப்பிடப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட அமுதுகளைத் தவிர பழங்களும் இறைவனுக்கு அளிக்கப்பட்டன என்ற செய்தியினை பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. காளிங்கராயன் என்பவன் ஆளுடைய நாயனுருக்கு 500 பலாப்பழம், 5000 மாம் பழங்கள், 5000 வாழைப் பழங்கள் அளிக்க நிலம் தானமாக அளித்தான் என இரண்டாம் இராசராசனது சிதம்பரம் கோயில் கல்வெட்டு கூறுகின்றது (1913 ல் 280) ஏமநல்லூர் என்ற ஊரை சேர்ந்த இராமவித்தன் என்பவன் திருவிடைமருதூர் கோயிலுள்ள புராண கணபதிக்கு தினந்தோறும் 10 வாழைப் பழங்கள் படைக்க எட்டு ஈழக்காசு நிபந்தம் செய்து கொடுத்தான் என அக்கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. முதலாம் இராசராசன் தஞ்சை கோயிலில் உள்ள

விநாயகப் பெருமானுக்கு நாள்தோறும் 150 வாழைப்பழங்கள் படைக்க 45 காசுகள் தானமாக அளித்ததை தஞ்சை கோயில் கல்வெட்டு விரிவாக கூறுகின்றது. அதாவது,

> **''ஆலயத்து பிள்ளையார் கணபதியார்க்கு அமுது செய்தருள**
> **நிசதம் வாழைப்பழம் நாற்றைம்பதாக**
> **ஓராட்டைக்கு வந்த வாழைப்பழம் ஐம்பத்து நாலாயிரத்துக்கு**
> **காசுஒன்றுக்கு வாழைப்பழம் ஆயிரததிரு நூருக**
> **வந்தகாசு நாற்பத்து ஐஞ்சுக்கு''**

(காசுஒன்றுக்கு வாழைப்பழம் 1200 ஆக, தானமாக அளித்த 45 காசுகளுக்கு வருடத்திற்கு 54,000 வாழைப் பழங்கள் அளிக்கப்பட்டன என்று அக்கல்வெட்டு விரிவாக கூறுகின்றது.)

கருத்தன் சாத்தன் என்பவன் திருவிடைமருதூர் மகா தேவருக்கு தினமும் இரண்டு 'இளநீர்' தேங்காய்கள் அளிக்க 6 கருங்காசு தானமாக அளித்தான் என அக்கோயில் கல் வெட்டு கூறுகின்றது, (1907 ல் 242).

> **''இளநீரமுது செய்ய**
> **திருவிடைமருதூர் செனேயார் வழிகுடுத்த கருங்காசு**
> **ஆறின் பொலியூட்டினுல் நிசதம்**
> **இரண்டிள நீரழக்குற வழுக்கைப் பற்றின''**

இவ்வாறு பலவகையான அமுதுகள் படைக்கப் பட்டதாக பல கோயிற் கல்வெட்டுக்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. ஆகவே இத்தகைய சிறப்பு வாய்ந்த அமுதுகளை இறைவனுக்கு படைத்து இறையருளை அடைவோம்,

---

சிவ சிவ

# ஞானத்திரளாய் நின்ற பெருமான்

திரு. ர. வேங்கிடரத்தினம் அவர்கள்,
E. 168 அண்ணாரோடு, (ப்ளாக் 17)
நெய்வேலி-1.

இறைவனை ஒண்பொருள் என்கிறோம், பரம்பொருள் எனக் கூறுகிறோம். அறியத்தக்கன அனைத்தும் அவரன்றி வேறு இல்லை என்கிறோம், அவர் அறியாதன ஏதுமில்லை எனக் கூறுகிறோம். அவரையறியின், அனைத்தும் அறிந்தாற் போல் என்கிறோம். இங்கெல்லாம் ஈசன் ஞான வடிவானவர் என்பது குறிப்பு.

ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல் ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப் பொருள் போலும் ஏனத்திரளோடின மான், கரடி இழியும் இரவின் கண் ஆனைத் திரள் வந்தணையும் சாரல் அண்ணாமலையாரே. இப்பாடல் திருவண்ணாமலை யண்ணல் மீது எழுந்தது ஆகும். முதல் ஈரடிகள் முற்றும் தூலமாய் அறிவு, ஊனம், பரம்பொருள் எனப் பேசுவன; பின் இரு அடிகள் நேர் எதிராக நாம் கண்ணால் காணத்தக்க விலங்கினங்களை வரிசையாகக் காட்டுவன.

அருணாசலத்து மலைச்சாரலில் உள்ள காடுகளில் காட்டுப் பன்றிகள் கூட்டம் கூட்டமாய் மேயும்; பல்வகை மான்கள் திரியும்; கரடிகள் கண்ணிற்படும். இராப் போதில் யானைகளும் மந்தை மந்தையாக வந்து சேரும். அம்மலையடிவாரத்துத் திருக்கோயில் எழுந்தருளி நிற்பவர் அண்ணாமலையார் அறிவுக் கருவூலமாய்த் திகழும் அண்ணல்; ஞானத்திரளாய் நின்ற பெருமான். மெய்யான அடிகள் பணிந்தேத்தும் தொண்டர்க்கு உள்ள குறைகளைக் களைந்து ஆட்கொள்ளும் பரமேசுவரன் அவர். மெய்யடியார்களுக்கு எவ்விதக் குறைவும் இராத

வண்ணம் பார்த்துக் கொள்ளும் எம்பெருமான் ஞானமே திரண்டு வந்த மூர்த்தமாக, அண்ணுமலையார் எனும் திருப் பெயர் கொண்டு, இருளகற்றும் சோதி பிழம்பாகக் காட்சி யருள்கிருர்.

நமக்கு உள்ள குறைபாடுகள் யாவும் நீங்க வேண்டும் எனில், ஞான வடிவினரான பரம் பொருளே நாம் நாடிநிற்றல் வேண்டும். அறியாமையிருள் அகல வேண்டின், மெய்ஞ்ஞான ஒளியினைப் பற்ற வேண்டும். திருமயிலாடும் துறையில் வான ளாவும் கீர்த்தியுடன் விளங்கும் எம்பெருமான் தேனையொத்த இனிமையுடன் கூடியவர். மனவிருளை யகற்றும் அப்பெரு மானே ஞானப் பரம்பொருள் எனக் கண்டு, இடையருதுதான் பற்றித் தொழல் வழி!

**ஊனத் திருள் நீங்கிட வேண்டில்**
**ஞானப் பொருள் கொண்டடி பேணும்**
**தேனைத் தினியா னருமஞ் சேர்**
**வானம் மயிலாடு துறையே.**

சிவபெருமானை ஞானத் தொடர்பு கொண்டு வழிபட்டு வணங்கும் செம்மல் ஞானசம்பந்த மூர்த்தி! ஈசனை அறிவுப் பெட்டகமாய் உணர்ந்து அவ்வண்ணம் ஓதும் அடியவர் ஆளு டையபிள்ளையார்!

உடலினை வீணில் விரதங்களில் வருத்தாது, வீடு பெறலாம் என்பார் சம்பந்தர். ஞானம் வேண்டின். நோன்புகளில் உடலை மெலியவும் நலியவும் செய்ய வேண்டாம்.

**வீடுஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்**
**வாடிஞான மென்றுவதும் எந்தை வலஞ்சுழி**
**நாடிஞான சம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை**
**பாடுஞானம் வலலாரடி சேர்வது ஞானமே.**

உடலை வருத்தி முக்தியறிவு பெற்றுவிட முடியாது என்றே அழுத்தமாக இங்குக் கூறப்பெறும். நம் அண்ணல் திருவலஞ் சுழியில் வீற்றுள்ளார். அங்கே ஞானசம்பந்தர் சென்று ஈசன் மீது பாடிய பதிகத்தைப் பாடும் இறையறிவு பெற்று அடியார் களின் அடிபணிந்தாலேயே போதும்; மெய்ஞ்ஞானம் கூடி வரும், இறையடிகளைப் பணிதற்கு அடியார் திருவடிகளை யேத்துதல் எவ்வகையிலும் மட்டல்ல என்பது கருத்து!

இறைவனைக் கற்கத் தக்கன அனைத்தின் வடிவமாய்ப் பேசும் பாடல்! தொடங்குவதோ 'குற்றம் நீ' என்று. ஆம்' ஈசன் நம் குற்றங்கள் – குறைகள் அனைத்துமாய் உள்ளவர் தாம். நம்மிடம் தப்பித் தவறிப் பொருந்தியுள்ள நல்ல பண்பு களும் எம்பெருமானின் அம்சமே.

**குற்றநீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்**
**சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ**
**கற்றநூற் கருத்துநீ அருத்தமின்ப மென்றிவை**
**முற்றுநீ புகழ்ந்து முன்உரைப்ப தென் முகம்மனே.**

கடவுள் எதிரே போய் அவருடைய சொல்லொணு அருமை பெருமைகளை நாம் விரித்துரைப்பது என்பது வெறும் சடங்கு போலத்தான்! முகமன் கூறுதல் முகத்துதியாகும். கடல் மாநகரெனும் மதுரைத் திருவாலவாய் ஆலயத்தில் எழுந்தருளி நிற்கும் சொக்கரை விளித்து ஞானசம்பந்தர் பேசுவார்.

எங்கள் மாசுகளைத் துடைத்துப் போக்குவதால், அவை தங்களிடம் வந்துவிடுகின்றன. ஆனால், எவ்வளவு மிகக் குற்றங்கள் சேரினும், தங்கள் குணங்களை அவைக் குறைத்து விடமாட்டா. ஏனெனில் தாங்கள் மாசிலாமணி, குணங்களின் திரள்! உற்றார் உறவினராக எங்களுக்கு உள்ள தாங்கள், எங்களுக்கெல்லாம் மிகமேலான தலைவராகவும்இருக்கிறீர்கள்.

இறைவன் அணையாத பரஞ்சுடராக உள்ளவர்; அழியாத நித்தியச் சுடர்! கற்க வேண்டிய பழநூல்கள் அனைத்தும் ஈசனையே பேசும். தத்துவங்களின் பொருளாக உள்ள எம் பிரான் நூல்களின் பொருளாக இருப்பதில் வியப்பேது? நூலிற் காணும் பொருள்களாகவும் பொருள்களுக்குரிய உரை யாகவும் திகழ்பவர் ஈசன். செல்வமாயும், செல்வத்திறல் விளையும் இன்பமாகவும் அவரே உள்ளார் எனவும் பகரலாம்.

அனைத்தும் ஆகிய ஆண்டவனிடம் சென்று அவர் தம் அருமை பெருமைகளைக் கூற முற்படுதல் வெறும் வெளி வார்த்தைதான்!

ஞானப் பரம்பொருள் எனச் சிவனுரைச் சொல்லுதலை யெல்லாம் விடுத்து, நம் பெருமான் நல்லாசிரியனுகக் கல் லாலின் கீழ் உலகுக்கே தத்துவ உபதேசம் அருளிய தட்சிணு

மூர்த்தத் திருக்கோலத்தினை நினைவூட்டப் போவார், ஞானப் பால் பருகிப் பந்தம் கொண்ட பெருமான்!

சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்னும் நான்கு முனிவோர் வேண்டியதன் பேரில், அவர்களுக்கு மெய்ப் பொருள் உபதேசித்தவர் சிவபிரான். சேய்ஞலூர் எனும் பதியில், எம்பெருமானை விளித்துப் பிள்ளையார் ஆல மரத்து நிழலில் நால்வர்க்கும் என்ன சொன்னீர்கள் எனக் கேட்பார்.

**நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு**
**மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை**
**ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்ன தென்னே**
**சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே!**

ஊரைச் சுற்றி நிறைய வயல்கள் உண்டு போலும் அக் குளிர்ந்த கழனிகளில் சேல் மீன்கள் துள்ளிக் குதிக்கும். இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு, பின்னர் தானே ஆலயத்தில் இறைவன் சந்நிதானத்திற்குச் சென்றிருப்பார் சம்பந்தர்? எனவே மீன்கள் மிகுந்துள்ள வயல்கள் சூழ்ந்த சேய்ஞலூர் அண்ணலே என்றழைத்து இறைவனைக் கூப்பிடு வது பொருத்தமே,

பழைய சாத்திரங்கள் வருத்துத்தந்த நெறிமுறைகளில் கண்ட வண்ணம் ஈசனடி சேர்தற்கு ஆசைகொண்டு சனகாதி நான்கு முனிவர்களும் எம்பெருமானை அணுகி வேண்டினார் கள். சிவபெருமான் ஆலமரத்தடியில் சீடர் நால்வர்க்கும் எதிரே அமர்ந்து, சின் முத்திரை காட்டி மௌனமாய் உப தேசம் செய்தருளியது பழங்கதை.

அதை நினைவூட்டிப் பிரானிடம் பிள்ளையார் கேட்பார். ஐயனே, நால்வரைத் தனியே மரத்தடிக்கு ஏன் அழைத்துச் சென்றீர்கள்? அங்கே இருந்தவர்கள் அந்நான்கு பேர் மட்டும் தான்! அப்படியிருக்க, உபதேசத்தினை வாய் திறந்து உரக்கவே செய்திருக்கலாமே? அருகில்தான் எவரும் இலரே. நல்ல பொருளை இன்னும் நாலுபேர் கேட்டால்தான் என்ன? ஏன் தனித்திருந்து ஒளிவு மறைவாய் அருளினீர்கள்?

எம்பெருமானிடம் ஞானத் தொடர்பு கொண்டவர் என்ன வேண்டும் ஆயினும் கேட்கலாம்!

---

சிவ சிவ]

## Sri Kedareshwar Temple Karthikai 4th, Somavaram *Special Pooja Etc. Fund At Varanasi–Capital Rs. 1000/-*

This Endowment is founded by His Holiness Silasri Kasivasi Muthukumaraswami Tambiran Swamigal Avergal, the Twenty first Head of Sri Kasi Mutt, Tirupanandal and Mahant of Sri Kumaraswami Mutt, Varanasi to conduct special pooja etc: in Sri Kedareshwar Mandir at Varanasi as narrated in detail in paragraph 3 below, with the amount donated by Sri A. Subramanya Iyer, retired Veena Lecturer, Banaras Hindu University Varanasi. This is the 39th endowment created and this should be styled as "SRI KEDARESHWAR TEMPLE KARTHIKAI 4th SOMAVARAM SPECIAL POOJA ETC: FUND AT VARANASI."

2. The Capital of this endowment is Rs 1,000/- (Rupees one thousand only) and it is invested in Long Term Fixed Deposit for 85 months fetching interest at 11% per annum in The Central Co-operative Bank Ltd, Tirupanandal F. D. No. 0093 dated 13—9–1974: Rs. 1,000/-. The administration of the fund shall vest in us and our Successors in interest.

3 The interest derived, after deducting the incidental charges for administering the fund, shall be spent as follows:-

(a) To conduct special pooja and neivedyam to Sri Kedareshwar Mahadev on the last or the 4th. Somavaram in the Tamil month of Karthikai and to take in procession the above said Deity on Vrishaba Vahanam within the Temple premises, a sum of Rs. 60/- shall be spent.

(b) To serve Payasam to those who are fed by us in Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi on the Krishnapaksham Ashtami day in the Tamil month of Karthikai, a sum of Rs 40/- shall also be spent.

4. The above said expenditure shall be made according to the budget (Thitta Japtha) prepared by us and our Successors in interest, and the amount spent may vary according to the interest derived each year.

5. The income from the endowment shall not be diverted to any other purpose than those mentioned above. The endowment capital shall always stand in our name and our Successors in interest as Head of Kasi Mutt Tirupanandal. The capital shall be reinvested in Long Term Fixed Deposits or Government Securities fetching high rate of interest as and when necessary.

Tirupanandal
16—9—1974 } (Sd.)Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at Tiruvidaimarudur Sub Registrar's office on 16—9—1974 as document No. 31/1974 Book 4, Volume 59 pages 253 to 254.

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

**81. திருத்தோணிபுரம்** பண்: சாதாரி

**சங்கமரு முன்கைமட மாதையொரு பால்உடன் விரும்பி**
**அங்கம் உடல்மேலுற அணிந்துபிணி தீரஅருள் செய்யும்**
**எங்கள்பெரு மான்இடம் எனத்தகும் முனைகடலின் முத்தம்**
**துங்கமணி இப்பிகள் கரைக்குவரு தோணிபுர மாமே,**

**பொழிப்பு:** முனைந்து அலைவீசும் கடலினின்று முத்துக்களாகிய சிறந்த மணிகளையுடைய சிப்பிகள் கரைக்கு வந்து சேருகின்ற திருத்தோணிபுரமானது-சங்க வளையல் பொருந்திய முன் கையையுடைய மடப்பமுள்ள உமையை ஒரு பக்கத்தில் தன்னுடன் இருக்க விரும்பி, எலும்புகளை உடம்பின்மேல் பொருந்த அணிந்து கொண்டு, (வணங்குவோரின்) பிறவிப் பிணி தீரும்படி அருள் செய்கின்ற எங்கள் சிவபெருமானது இடம் என்று சொல்லத்தகும்.

சங்கு—சங்கவளையல்; அமரும்—பொருந்திய; அங்கம்—எலும்பு; முனைதல்-விரைதல்; துங்கம்—சிறப்பு; தோணிபுரம்—சீர்காழி; உலகமுற்றும் பிரளய வெள்ளம் மூடிக் கொண்ட போது இறைவனும் இறைவியும் தோணிமீது அமர்ந்து எழுந்தருளியதால் தோணிபுரம் எனப்பெயர் பெற்றது. ஞானசம்பந்தர் சீர்காழியில் தங்கி இருந்து மூல இலக்கியமாகப் பாடியருளிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகத்தைப் பாடுபவர் தடுமாற்றமும் வஞ்சமும் இலராவர்; நெஞ்சிருள் நீங்கித் திருவருள் பெற்று வளர்வார்கள்.

**82. திருஅவளிவள்நல்லூர்** பண்: சாதாரி

**கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடு குலாவித்**
**தம்பரிசி னேடுசுடு நீறுதட வந்துஇடப மேறிக்**
**கம்பரிய செம்பொனெடு மாடமதில் கல்வரை விலாக**
**அம்பெரிய எய்தபெரு மானுறைவ தவளிவள் நலூரே.**

**பொழிப்பு:** பூங்கொம்புகள் சாயும்படி வண்டுகள் உலாவிய கொன்றைப் பூவை முப்புரி நூலோடு மார்பின்கண்

விளங்கும்படி அணிந்தும், தமக்கே உரித்தான இயல்புகளோடு வெந்த நீற்றைப் பூசியும், விடையின் மீது ஏறியும், விண்ணிடத்தே பெரிய செம்பொன் (வெள்ளி, இரும்பு)என்ற நெடிய மாடங்களையுடைய மதில்மீது மேருமலையை வில்லாகவும் நெருப்பை அம்பாகவும் கொண்டு எய்த சிவபெருமான் தங்கி இருப்பது திருஅவளிவள்நல்லூர் என்ற தலமாகும்.

இரிய-சாய; உலவுதல்-திரிதல்; குலாவுதல்-விளங்குதல்; பரிசு-இயல்பு; தடவந்து-தடவி, பூசி; கம்-விண்; பரிய-பெரிய; செம்பொன் மதில் என்றதனால் அதற்கு இனமாக வெள்ளி, இரும்பால் ஆகிய மதில்களையும் சேர்த்துக் கொள்க. கல்-மலை; வரை-மலை; விலாக-வில்லாக; அம்பு எரிய என்பதை எரி அம்பாக என மாற்றிக் கொள்க. தம் பரிசினோடு என்பது இத்தலத்து இறைவன் திருநாமமாகிய தம்பரிசுடையார் என்பதை நினைவுறுத்தியது. ஓர் அந்தணன் தன் மனைவியைப் பிரிந்து காசி சென்று திரும்பி வந்தபோது, அவள் அம்மை நோயால் வடிவு வேறுபட்டிருந்ததால் இவள் தன்மனைவியல்ல என்று ஐயுற்ற போது இறைவன் வெளிப்பட்டு "அவள் இவளே" என்று உணர்த்தியபடியால் அவளிவள்நல்லூர் எனப் பெயர் வந்தது. இப்பதிகத்தை ஓதுபவர் துயரங்கள் இலராவர்; தீமையும் இலராவர்.

**83. திருநல்லூர்** **பண்: சாதாரி**

**வண்டரிய விண்டமலர் மல்குசடை தாழவிடை யேறிப்**
**பண்டெரிகை கொண்டபர மன்பதிய தென்பர்அத னயலே**
**நண்டரிய நாரையிரை தேரவரை மேலருவி முத்தம்**
**தெண்டிரைகள் மோதவிரி போதுகம ழுந்திருந லூரே.**

**பொழிப்பு:** நாரை தனக்குரிய உணவைத் தேட, அதன் பக்கத்தே நண்டுகள் அஞ்சி ஓட, (மேற்கு) மலைமேல் அருவி தந்த முத்துக்களை எடுத்துக் (காவிரியாற்றின்) தெளிந்த அலைகள் மோதுவதால் இதழ் விரிந்த பூக்கள் மணம் வீசும் திருநல்லூர் என்னும் தலத்தை-வண்டு மொய்க்கும்படி இதழ் விரிந்த கொன்றை மலர் நிறைந்த சடை தொங்க விடையின் மீது ஏறித் தோன்று தொட்டே நெருப்பைக் கையில் ஏந்திய சிவபெருமானுடை இடம் என்று கூறுவர்.

இரிய-மொய்க்க; விண்ட-விரிந்த; மல்கு-நிறைந்த; எரி-நெருப்பு; பரமன்-மேலான இறைவன்; பதி-இடம்; இரிய-அஞ்சி ஓட; இரை-உணவு; தேர-தேட; வரை-ஈண்டுமேற்கு மலை; திரை-அலை; போது-பூ, திருநல்லூரைப் பரமன் பதி என்பர் என முடிக்க. நாரை இரைதேர அதனயலே நண்டிரிய எனக் கூட்டுக. இப்பதிகத்தைப் பாடுபவர் பிரமனும் பேணுகிற உயர்கதியைப் பெறுவார்கள்.

**84. திருப்புறவம் பண்: சாதாரி**

**பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர வியபிறைக்**
**கண்ணியர் கடுநடை விடையினர் கழல்தொழும் அடியவர்**
**நண்ணிய பிணிகெட அருள்புரி பவர்நணு குயர்பதி**
**புண்ணிய மறையவர் நிறைபுக ழொலிமலி புறவமே.**

பொழிப்பு: இடப்பாகத்தில் பெண்ணின் இயல்புடைய வடிவையுடையவரும்; பெருக்குற்ற கங்கை நீரோடு கூடிய பிறைக் கண்ணியையுடையவரும், விரைந்த நடையுடைய விடையையுடையவரும், தனது அடியைத் தொழும் அடியார்கள் உற்ற பிறவி நோய் கெடுமாறு திருவருள் பாலிப்பவரும் ஆகிய சிவபெருமான் நெருங்கிய உயர்பதி-புண்ணியங்களே செய்யும் அந்தணர்களும் நிறைந்த புகழும் ஒலியும் மிக்க திருப்புறவம் என்ற தலமாகும்.

உரு-வடிவம்; விரவிய-கூடிய; பிறைக்கண்ணி-பிறைத்திங்களாகிய தலைமாலை; கடு-விரைவு; நணுகு-நெருங்கு; உயர்பதி-சிறந்த இடம்; மலி-மிக்க, புறவம் என்பது சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களில் ஒன்று. சிபிச் சக்கரவர்த்தியைச் சோதிக்கத் தீக்கடவுள் புறு வடிவம் எடுத்த போது அவ்வடிவோடு இங்குப் பூசித்ததால் புறவம் எனப் பெயர் வந்தது. ஞானசம்பந்தர் சீர்காழிப் பதியில் தங்கி இருந்து மூல இலக்கியமாகப் பாடியருளிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகத்தை ஓதுபவர் இருநிலனிடை (சிவலோகத்தில்) வாழ்வர்.

**85 திருவீழிமிழலை பண்: சாதாரி**

**மட்டொளி விரிதரு மலர்நிறை சுரிகுழல் மடவரல்**
**பட்டொளி மணியல்குல் உமையமை உருஒரு பாகமாக்**

**கட்டொளிர் புனலொடு கடியர வுடனுறை முடிமிசை**
**விட்டொளி உதிர்பிதிர் மதியவர் பதிவிழி மிழலையே.**

**பொழிப்பு:** தேனும் ஒளியும் விரிந்த மலர் நிறைந்த நெரிந்த கூந்தலையுடைய பெண்ணும் பட்டாடையும் ஒளி மணியும் அணிந்த அடிவயிற்றினையுடைய உமையும் ஆகிய அம்மை ஒருபக்கமாக இருக்கச், சடைக்கட்டில் ஒளிர்கின்ற கங்கை நீரோடு கடிக்கும் பாம்பு ஒருசேர இருக்கின்ற திரு முடியின் மேல் ஒளிவிட்டு உதிர்ந்த துண்டாகிய மதியை அணிந்த சிவபெருமானது ஊர் திருவீழிமிழலையாகும்.

மட்டு–தேன்; சுரி-நெரிப்பு, நெளி; குழல்–கூந்தல்; மடவரல்–பெண்; அல்குல்-அடிவயிறு; உமையமை–உமா தேவியாகிய அம்மை; கட்டு-சடைக்கட்டு; உதிர்-சிந்திய; பிதிர்–துண்டு; பதி–ஊர். வீழி என்பது விழி எனக் குறுகி நின்றது, ஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் தங்கி இருந்த போது பாடியருளிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதி கத்தைப் பாடுபவர் துயரில்லாதவராவர்; சிவகதி பெறுவர்.

(தொடரும்)

---

உ

*சிவ சிவ*

**சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி**
**அவாயம் அறவே அடிமைய தாக்கிச்**
**சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை**
**அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.**

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

| | | | ரூ. | பை |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) | ... | 3 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் | ... | 0 | 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, | ... | 0 | 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, | ... | 0 | 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, | ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் | ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் | ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை | ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை | ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் | ... | 0 | 50 |
| 12 | ,, மூலம் | ... | 0 | 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் | ... | 0 | 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் | ... | 0 | 10 |
| 15 | கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) | ... | 0 | 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் | ... | 0 | 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) | ... | 5 | 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) | ... | 3 | 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) | ... | 2 | 75 |
| 20 | திருவாசகம் (மூலம்) (அச்சில்) | | | |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) | ... | 4 | 50 |
| 22 | 9—ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் | ... | 0 | 56 |
| 23 | ,, ,, தெளிவுரை | ... | 3 | 25 |
| 24 | பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு | ... | 6 | 75 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) | — | 3 | 50 |
| 26 | பேராயிரப் பனுவல்கள் | ... | 0 | 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் | ... | 0 | 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி | ... | 0 | 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் | ... | 0 | 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை | ... | 0 | 37 |
| 31 | பழமொழித் திருமுறை | ... | 0 | 25 |
| 32 | அப்பர்விழா வெளியீடு | ... | 0 | 25 |
| 33 | Hymns and Proverbs | — | 0 | 35 |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் | — | 0 | 10 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R: No. 1485/57.

Regd No. M. 5574 குமரகுருபரன்

| | | | |
|---|---|---|---|
| 35 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் | ... | 0 30 |
| 36 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | ... | 1 75 |
| 37 | திருவாசகம் தேனும் கனியும் | ... | 0 15 |
| 38 | தேவாரம் பாடும்பயன் | ... | 0 15 |
| 39 | காசிக்கலம்பகம் உரை நடை | ... | 0 15 |
| 40 | தாழைத் திருமுறை | .. | 0 15 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் | .. | 0 10 |
| 42 | நவக்கிரகமாண்பு | .. | 0 25 |
| 43 | ஸ்ரீ சைலம் | ... | 0 10 |
| 44 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் | .. | 0 37 |
| 45 | திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி | | 0 10 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | ... | 0 15 |
| 47 | திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) | ... | 2 00 |
| 48 | திருமுருகாற்றுப்படை | .. | 0 15 |
| 49 | தேவார வைப்புத்தல விளக்கம் | ... | 0 15 |
| 50 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | ... | 2 00 |
| 51 | திருக்குறள் மூலம் | ... | 0 25 |
| 52 | திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை | .. | 0 20 |
| 53 | திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் | .. | 0 13 |
| 54 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | .. | 0 60 |
| 55 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் | .. | 1 50 |
| 56 | திருக்குறள்-பொருட்பால் ,, | ... | 2 50 |
| 57 | திருக்குறள்-காமத்துப்பால் ,, | .. | 1 00 |
| | ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும் | ... | 4 00 |
| 58 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | ... | 1 25 |
| 59 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | .. | 1 00 |
| 60 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... | 3 00 |
| 61 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | ... | 0 50 |
| 62 | மங்கலம் | .. | 0 20 |
| 63 | திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | .. | 0 20 |
| 64 | கோதனத் திருமுறை | .. | 0 10 |
| 65 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | ... | 0 15 |
| 66 | பண்டார மும்மணிக்கோவை உரை நடை | ... | 0 15 |
| 67 | மகேசுவரபூசை | ... | 0 15 |
| 68 | திருமந்திரம் (அச்சில்) | | |
| 69 | திருவிசைப்பா தேனும் கனியும் | ... | 0 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்
2. "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோவில் தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-600005

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 628601 -74